கலாபூஷணம், சமாதான நீதவான், புத்தகாசிரியன்,
ஆய்வாளன், சொல்லேர் உழவன், மக்கள் தொண்டன்

# அமரர். கதிராமப்போடி மகேஸ்வரலிங்கம்

(மகிழை மகேசன்)



# நினைவு

20.12.2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மலர்வு
1942.09.23

மடிவு
2007.11.20

# அமரர் கதிராமப்போடி மகேஸ்வரலிங்கம்
## (மகிழை மகேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவாரம்

## திருச்சிற்றம்பலம்

### தேவாரம்

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற் பாதமும் காணப்பெற்றால்
மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே

### திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே!
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத்துரைப்பேன்
ஆண்ட நீ அருளிலையானால்
வார்கடலுலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென்றருள் புரியாயே

### திருவிசைப்பா

இடர் கெடுத்தென்னை ஆண்டு கொண்டென்னுள்
இருட் பிழம் பறவெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்கும்
தூயநற் சோதியுட் சோதி !
ஆடல் விடைப்பாக ! ஆனந்தக் கூத்தா !
அயனொடு மாலறியாமைப்
படரொளி பரப்பிப் பரந்து நின்றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

குழலொலி யாழொலி கூத்தொலி
ஏத்தொலி எங்குங் குழாம் பெருகி
விழவொலி விண்ணளவுஞ் சென்று
விம்மி மிகுதிரு வாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி
யாளாய் மணஞ்செய் குடிப்பிறந்த
பழஅடி யாரொடுங் கூடி
எம்மானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின்
வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு
உண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டு
நான் மகிழ்ந்துபாடி
அறவா! நீ ஆடும்போதுன் அடியின்
கீழ் இருக்க என்றார்

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ப்பணம்

எங்கள் அன்புத் தெய்வமே!
காலக் கரைசலில் தீர்ந்துவிடாத
நித்திய வாழ்வே! எங்களது மூலமும்
நீங்கள் தான் - முகவரியும் நீங்கள் தான்
நீங்கள் வாழ்ந்த வாழ்வு நாளும்
கிழிபட்டுப்போன "கலண்டர்" அல்ல
பழசாகிப் போன பஞ்சாங்கமுமல்ல
வரும் யுகத்தை எமக்கு காட்டிய தூரதர்சனம்
நீங்கள் மகுடத்திற்கு மரியாதை தந்தவரல்ல!
மனிதத்துக்கே மகுடம் சூட்டியவர்
படுவான்கரை எனும் சரித்திர பூமியில்
பெயர்த்தெடுக்க முடியாத பெரும் குன்று - நீங்கள்
நீங்களே பிரகாசமாகி விட்டதினால் உங்கள்
திருவுருவே எம் முன் வியாபித்து நிற்கின்றது.
எங்கள் இதய காணிக்கையான இம் மலரை
உங்கள் பாதக் கமலங்களில் வைத்து
வணங்குகின்றோம். வாழ்த்தியருளுங்கள்

உங்கள் பாசமிகு
மனைவி, மக்கள், மருமகன்,
உற்றார், உறவினர்,
நண்பர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**RAMAKRISHNA MISSION**
(CEYLON BRANCH)
ASHRAMA & CHILDREN'S HOMES,
RAMAKRISHNAPURAM, BATTICALOA, SRI LANKA.
☎ 065 - 2222752

# பேரின்பப் பெருவாழ்வு பெறுக

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் திருவருளால் அமரர் கலா பூஷணம் க. மகேஸ்வரலிங்கம் அவர்களின் ஆன்மா பிறவாப் பேரின்பப் பெருவாழ்வு பெற வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

அவரது பூவுலகவாழ்வானது 65 ஆண்டுகளில் நிறைவு பெற்றிருக்கின்றது. அவர் வாழ்ந்த காலத்தில் பெறுமானம்மிக்க சமூக, சமய கலாச்சார ஆய்வு நிகழ்சிகளில் ஈடுபட்டுழைத்த அறிவாளராகத் திகழ்ந்தவர்.

சிவானந்த வித்தியாலயத்தின் மாணவனாக பல்கலைக் கழகம் நுழைந்து பட்டதாரியானவர். இதனால் ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் பாரம்பரியத்துள் அவர் ஈடுபாடு கொண்டவராகத் திகழ்ந்தார். இதற்குச் சிறந்த உதாரணமாக 1963ல் நிகழ்ந்த சுவாமி விவேகானந்தர் நூற்றாண்டு விழாவைக் கூறலாம்.

மேற்படி விழாவை முன்னிட்டு இலங்கைத் தேச மட்டத்தில் நடாத்தப்பட்ட பேச்சுப்போட்டியில் இவர் மேற்பிரிவில் 1ம் இடத்தைப் பெற்று இலங்கை ராமகிருஷ்ண மிஷன் கிளைத் தலைவர் சுவாமி பிரேமாத்மானந்தஜீ மகராஜ் அவர்களால் தங்கப்பதக்கம் சூட்டி கௌரவிக்கப்பட்டவர்.

மேலும் கிராமியக் கலைகளில்; அவைகளின் ஆய்வுகளில், வளர்ச்சியில் இறைவழிபாட்டில் பெரிதும் ஈடுபாடு கொண்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசினாலும் பொது நிறுவனங்களாலும் பொன்னாடை போர்த்தியும், பட்டங்கள், விருதுகள் வழங்கியும் கௌரவிக்கப்பட்டவர்.

தூர்ந்து போன கொம்பு விளையாட்டுக்கு புத்துயிரளித்து மீளுருவாக்கம் செய்து அரங்கேற்றியவர்.

ஆய்வு நூல்களும், கட்டுரைகளும் எழுதி வெளியிட்டவர். கிராமிய மக்களின் கலைகள் பண்பாட்டில் மாத்திரமன்றி இந்து மத அபிவிருத்தியிலும் பெரிதும் ஈடுபாடு கொண்டு உழைத்தவர்.

அன்னாரின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது. அவரின் ஆத்ம ஈடேற்றத்திற்கு மீண்டும் பிரார்த்தித்து மனைவி மக்கள் உறவினர்கள் அனைவருக்கும் இறையருள் நிறைய வேண்டுகின்றேன்.

ஓம் சாந்தி.

இறைபணியில்
**சுவாமி அஜராத்மானந்தா**

**வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ**
**வள்ளலடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ**
**வெள்ளை நிறப்பூவுமல்ல வேறெந்த மலருமல்ல**
**உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

පාර්ලිමේන්තුව

பாராளுமன்றம்

PARLIAMENT

# அஞ்சலி உரை :

# மட்டக்களப்பின் துருவ நட்சத்திரம் மகிழை மகேசன்

மகிழடித் தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட மகேஸ்வரலிங்கம், கடந்த அரை நூற்றாண்டுக்காலம், தன்னுடைய இலக்கிய ஆற்றலையும், ஆளுமையையும் மிகவும் சிறப்பாகப் பதிவு செய்துள்ளார்.

கவிதை, கட்டுரை, விமர்சனம், எனப் பல்துறை கலைஞனாக இவர் விளங்கினாலும், கலைகளையும், கிராயமிய வாழ்வியலையும் பேணி வளர்ப்பதில் இவர் தனித்துவம் பெற்றிருந்தார். கூத்து, கொம்புமுறி, வசந்தன், முதலிய கிராமியக் கலைகளில், இவர் நிபுணத்துவ ஆய்வுகள் மேற்கொண்டு பல ஆய்வுக்கட்டுரைகளை எழுதினார். ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல் இவர் எழுதிய கிராமியத் தெய்வங்கள் என்ற நூல் கிழக்கிலங்கையின் கிராமிய வணக்க முறைகளையும் அவற்றில் பொதிந்துள்ள ஆத்மீக வளத்தையும் மிகச் சிறப்பாகப் பதிவு செய்துள்ளது. இந்நூல் வ-கி மாகாண சாகித்தியப் பரிசு பெற்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு இவரது பல்வேறு பணிகள் கிழக்கிலங்கையில் இவருக்கென ஒரு தனி இடத்தைப் பெற்றுக் கொடுத்துள்ளது. இவரத மறைவு கிழக்கிலங்கையின் கிராமிய ஆய்வுத்துறைக்கு ஒரு பேரிழப்பாகும் இது பாரிய வெற்றிடத்தை ஏற்படுத்தும் என்பது ஐயமில்லை. அவர் விட்ட இடத்திலிருந்து இப்பணியைத் தொடருவதற்கு யாராவது முன்வர வேண்டும். அதுவே நாம் அவருக்குச் செலுத்தக்கூடிய சிறந்த நன்றிக்கடன் ஆகும்.

கௌரவ **க. தங்கேஸ்வரி,**

பாராளுமன்ற உறுப்பினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரித்திர நாயகனே நீர் சாகவில்லை!.....

**"வசையொழிய வாழ்வாரே வாழ்வர்**
**இசையொழிய வாழ்பவர் வாழாதவர்"**

அமரத்துவமடைந்த கலாபூசணம் கதிராமப்போடி மகேஸ்வரலிங்கம் அவாகள் தம்மட்டும் வசை உண்டகாமல் இறக்கும் காலம் வரைக்கும் வாழ்வாங்கு வாழ்ந்து புகழோடு நீர்த்து பெருமை சேர்த்தவர். 'படுவான்கரை' ஈன்ற பண்பாளன் பல்கலைக்கழகத்தின் முதல் பட்டதாரியாக வெளியேறி எம்மண்ணிலே சேவை எனும் வித்தை விதைத்து அம்மண்ணிலே அவரும் விதைக்கப்பட்டுள்ளார்.

கிராமியக் கலையிலெ அதிக நாட்டம் கொண்டு "சிறு தெய்வ வழிபாடு" எனும் நூலையும் யார்த்த இவர், கிராமம் கிரமமாகச் சென்று பல தகவல்களையும் சேகரித்துள்ளார். எனினும் அவற்றுள் பல இன்னும் வெளிவராமலேயே அன்னார் அமரத்துவமடைந்தது மனச்சோர்வைத் தருகின்றது. எமது பின்தங்கிய பல கிராமங்களின் எழுச்சிக்காக அதிகம் பாடுபட்டவர். அன்னாருடன் நான் பழகிய காலம் அவரது பின்னணியில் என்னையும் கிராம எழுச்சிக்காக ஈடபடச் செய்த காலமாகும்.

அன்னார் பொதுவாக கிராமத்தில் எவ்வகையான பணியினைச் செய்ய வேண்டுமோ அவை யாவையும் சிரித்த முகத்துடன் நிறைவேற்றியவர். கிராமிய பாரம்பரியம் என்பது அன்னாருக்கு கைவந்த கலையாகும். எமது பிரதேசத்தில் உள்ள கிராமங்களோடு அதிகளவு நாட்டம் கொண்டவர். இக்கிராமங்கள் பற்றிய பழம்பெரும் செய்திகளையும் கட்டுரை வாயிலாக வெளியிட்டுள்ளார்.

கொம்பு விளையாட்டு, திருவேட்டைத் திருவிழா என்று கலாச்சார விழாக்களிலும் அதிக ஈடுபாடு காட்டிச் சிறப்பித்த இவர், ஏழையும் வாழ வேண்டும் என்று வழிதிறந்து கொடுத்து மேடைப் பேச்சிலும் சொற்பதமுரைத்து இறைவனது பாதார விந்தங்களைச் சேர்ந்துள்ளார். அன்னாரது உயரிய ஆத்மா சாந்தியடைய ஸ்ரீ தான்தோன்றீஸ்வரப் பெருமானை வேண்டி நிற்கின்றேன்.

ஓம் சாந்தி.

கௌரவ. **திரு. பா. அரியநேத்திரன்** (அரியம்)

'ராதாலயம்' (பாராளுமன்ற உறுப்பினர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் செய்தி

திருவாளர் மகேஸ்வரலிங்கம் அவர்கள் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு இனியதோர் நண்பனை கலைஞனை இழந்த சோகம் என்னுள் ஏற்பட்டது. 1992ம் ஆண்டு தொடக்கம் இவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. மிகவும் இன்முகத்துடன் பழகும் அன்னார் நான் கல்லடி அரச விடுதியில் இருந்தபொழுது எனது அயலவராக மட்டுமல்ல அன்பான சகோதரனாக, நல்ல நண்பனாக, சிறந்த வழிகாட்டியாக திகழ்ந்தார் என்பதை கூறுவதில் பெருமிதம் அடைகிறேன்.

சமூக சேவையில் அதீத ஈடுபாடு கொண்ட ஒரு சிறந்த மேடைப் பேச்சாளரும் மட்டக்களப்பு கிராமிய கலை கலாச்சாரங்களைப் பேணிப் பாதுகாப்பதில் குறிப்பாக நாட்டுக்கூத்து, வசந்தன்கூத்து, கொம்புமுறி விளையாட்டு போன்ற கலைகளை வளர்ப்பதிலும் தனது இளமைப்பருவத்தில் பல்வேறு வகையான சிரமதானப்பணிகளிலும் பொதுப்பணிகளிலும் முன்னின்று உழைத்தவராவார். தனது பேச்சு வல்லமை மூலம் மக்களை எளிதில் கவரக்கூடிய அன்னார் "மகிழை மகேசன்" என்று அழைக்கப்பட்டார். 2004ம் ஆண்டு கலாசார அமைச்சின் "கலாபூசணம்" விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இல்லற வாழ்க்கையில் இணைந்து நான்கு பிள்ளைகளின் தந்தையானார்.

திரு. கதிர்காமப்போடி மகேஸ்வரலிங்கம் அவர்கள் 1942ம் ஆண்டு செப்டம்பர் 23ம் திகதி மகிழடித்தீவில் பிறந்து தனது ஆரம்பக்கல்வியை மட் / முதலைக்குடா கோபால் வித்தியாலயத்தில் கற்று சித்தியடைந்து உயர்கல்வியை மட் / சிவானந்தா தேசிய பாடசாலையில் பயின்று சித்திபெற்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமானிப்பட்டம் பெற்றார். 1976ம் ஆண்டு அரசசேவையில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக இணைந்து கொண்ட அவர் 2006ம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுவரை 30 வருடசேவையை சிறப்பாக மேற்கொண்டு மக்களுக்குச் சிறந்த சேவையை வழங்கிய மேதையாவார்.

சிறந்த எழுத்தாளரான திரு. மகேஸ்வரலிங்கம் அவர்கள் தனது வாழ்நாளில் பல நூல்களை வெளியிட்டு மத்திய, மாகாண அரசுகளின் பரிசில்களையும் பாராட்டுக்களையும் பெற்றுக்கொண்டார். தம் மக்களுக்கு சேவைசெய்வதே தனது பணி என செயற்பட்ட அன்னாரின் இழப்பு தனது பிரதேச மக்களுக்கு மட்டுமன்றி மாவட்ட மக்களுக்கும் ஈடு செய்ய முடியாத இழப்பாகும். இவர் இந்த மண்ணை விட்டுப் பிரிந்தாலும் இவரது சேவைகள் என்றென்றும் நிலைத்திருக்கும். இவரது பிரிவால் துயருறும் இவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

**சு. அருமைநாயகம்,**
(மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபரும்),
கச்சேரி. மட்டக்களப்பு.
11.12.2007.

***"எதுவும் நமக்குச் சொந்தமில்லை"***

நாம் விலை கொடுத்து நம்பேருக்குப் பதிவு செய்துள்ள நம் வீட்டில் வாழும் பல்லி, எலி, பூனை, முட்டுக்கால்பூச்சி முதலியவை அந்த வீட்டை தமக்குச் சொந்தமாகவே நினைக்கின்றன. அதுபோல, எல்லாம் இறைவனின் உடைமையாக இருக்க, அவற்றை நம்முடையவை என்று நினைத்து நாம் மயங்குகிறோமே, என்னே நமது அறியாமை!

- கிருபானந்தவாரியார் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈடு செய்ய முடியாத இழப்பு.

"நெரு நல் உளனொருவன் இன்றில்லையென்னும்
பெருமை உடைத்திவ்வுலகு"

நேற்று இருந்தவர்கள் இன்றைக்கு இல்லாவிடினும் அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை, சென்று பதித்த தடங்கள், விட்டுச் சென்ற எச்சங்கள் சமுதாயத்துக்கு எந்தளவு நீடித்து நிலையான பயனைக் கொடுத்துள்ளது என்பதைப் பொறுத்தே அவர்களது வாழ்வும் தாழ்வும் நிலை பெறும்.

அந்த வகையில் அமரர் கலாபூஷணம் கதிராப்போடி மகேஸ்வரலிங்கம் J.P அவர்கள், மட்டக்களப்புச் சமூக, சமய கிராமிய இலக்கிய கலைகளின் வரலாற்றில் மறக்க முடியாத பேரறிவாளர்.

தமிழ் மக்களும், குறிப்பாக மட்டக்களப்புச் சமூகமம் சொல்லவொண்ணா இடுக்கண்களில் அகப்பட்டு கடந்த இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக நெருக்குண்டு அல்லல்பட்டு வாழ்கின்றது.

நிர் மூலமாக்கப்பட்ட நமது சமூக, பொருளாதார, கல்வி, பண்பாட்டுத் தளங்களை மீளுருவாக்கஞ் செய்வதில் அனைவரதும் பங்களிப்புக்கள் நிறைவாகத் தேவைப்படுகின்ற இந்தக் கட்டத்தில் அத்தகைய பணிகளைத் தனித்து நின்று முன்னெடுத்து நின்ற வல்லாளரான நண்பன் மகிழை மகேசன் அவர்களை இழந்து நிற்பது ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

அவர் அழிந்து போன கொம்பு விளையாட்டை இளம் தலை முறையினருக்கு அறிமுகம் செய்ய முயன்ற போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னையும் அழைத்திருந்தார். "கொம்பு விளையாட்டு" - என்னும் தலைப்புடன் மண்முனை தென்மேற்கு பிரதேச கலாசாரப் பேரவையினால் இவரது முயற்சியால் நூல் ஒன்றும் வெளியிடப்பட்டிருந்தது.

அன்னார் சிறந்த பேச்சாளராக , எழுத்தாளராக, கவிஞராக, தலைவராக, தொண்டராக, ஆராய்ச்சியாளராக - என்று பல்வேறு துறைகளிலும் சிறந்து விளங்கினார். இவரது ஆக்கங்களும், ஆய்வுகளும் முழுமையாக வெளிவரும் போது இவரது பன்முகத் திறமையும் புலமையும் சமூகத்துக்கு வெளிக்காட்டப்படும். இவரது நீடித்த நினைவுகளுக்கு அவைகளே சான்றாதாரங்களாகவும் அமையும்.

தனிப்பட்ட வகையில் நான் ஒரு சிறந்த நண்பனை இழந்து நிற்கின்றேன். அன்னாரது ஆன்ம ஈடேற்றத்துக்கு தான்தோன்றீஸ்வரப் பெருமானை வேண்டுகின்றேன். ஆறுதல் இழந்தும் பேரிழப்பைச் சந்தித்தும் உள்ள அவரது மனைவி, மக்கள், உற்றார், உறவினர் அனைவர்க்கும் இறைவன் சுபீட்ச வாழ்வை நல்கப் பிராத்தித்து நிறைவு செய்கின்றேன்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

**த. கனகசனை,**
(கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்),
களுதாவளை (கி.ப).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கதிராமப்போடி மகேஸ்வரலிங்கம் அவர்களின்**

முப்பத்தோரம் நாள் நினைவு குறித்த

# இரங்கற் பாக்கள்

**திதி**

சருவசித்து கார்த்திகையில் சாரும்பூ ரட்டாதி
வருசுக்கல பக்கத்தே காதசியாம் - தர்மமிகு
மகேசுவர லிங்கம் மதிகங்கை வேணியன்தாள்
திகழ்வுறப்போய்ச் சேர்ந்த திதி.

**வரலாறு**

மீனிசை பாடும் தேனாட் டினிலே
கூனிறால் பாயத் தேனிறால் கிழிந்து
குவளைத் தேரைவாய் ஒழுகச் சுவைக்கும்
மகிழடித் தீவாம் வளமலி நிலத்தில்
கதிராமப் போடியும் கவினார் துணைவியாம்
அழகம் மாவும் ஆற்றிய தவத்தால்
இளைய புதல்வனாய் இவ்வுல கடைந்தனன்
மகேஸ்வர லிங்க மறுவிலாப் பெயரோன்
நாளொரு மேனி பொழுதொரு வண்ணமாய்
காலஞ் சென்ற கந்தக் குட்டி
ஞான சுந்தரம் நாராயண பிள்ளை
தவமணி ஆகியோர் தம்எழில் தம்பியாய்
இன்பமாய் வளர்ந்து இளமைக் கல்வியை
மகிழடித் தீவில் வளமுறப் பெற்றனன்.
இடைநிலைக் கல்வியை முதலைக் குடாவிலும்
கற்று உயர்தரக் கல்வி யதனை
சிவானந் தாவிலே சிறப்புறப் பெற்றனன்
பேரா தனையிலே சீராய்ப் பயின்று
பட்டம் பெற்றுப் படுவான் கரையின்
முதற்கலை மாணியாய் முன்நிலை யடைந்தன்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தி யோகம் பெற்றிடும் வரையில்
அமரிக்க ரான ஆய்வா ளரது
உதவி யாளராய் உதவிட லாயினன்.
ஊரபி விருத்தி உத்தியோ கத்தனாய்
பதவி பெற்றுப் பாலனம் பண்ணினன்
காலம் சென்ற கனவான் சண்முகம்,
பொன்னம் மாவின் புதல்வி குணவதி
வாழ்க்கைத் துணைவியாய் வாய்த்ததன் பயனாய்
நக்கீ ரன்எனும் நற்பண் புடைய
மூத்த புதல்வனைச் சீர்த்தியாய்ப் பயந்தனன்
குந்தவை, வாகீசன் குறையில் ஆதிரை
வந்து பிறந்தனர்; மாண்புற வளர்த்து
கல்வியும் தந்து கண்ணியம் காத்தனன்
குந்தவை என்னும் செந்தமிழ் மகளை
தந்தத னால்ரவி சங்கரரின் மாமனாம்
நேசம் மாவுயர் நேயபொன் னம்மா
ரஞ்சித மலரொடு பசுபதி மகேஸ்வரி
ரவீந்திர நாதன், குலசபா நாதன்
ஆதி யோரின் அன்புமைத் துனனாய்
காத லுற்றுக் கனிவொடு திகழ்ந்தனன்.
பேச்சுத் துறையில் பிறர்எதிர் நில்லார்
தங்கப் பதக்கம் தாங்கிய திறத்தோன்
மட்டக் களப்பு மாவட் டத்தின்
கலாசாரப் பேரவைக் கண்ணிய உறுப்பினன்
பிரதேச கலாசாரப் பேரவைச் செயலன்
சன சமூகச் சம்மே ளனத்தின்
மதிப்பு மிக்க மாண்புறு தலைவன்
ஆலய சபையின் ஆன்மிக முதல்வன்
மண்முனை மேற்குக் கமநல நிலைய,
பலநோக்குக் கூட்டுறு சங்கத் துறுப்பினன்
இத்துணை பதவியும் இவன்வகித் திடற்கு
எத்தனை திறமையும் இயல்பதும் வேண்டும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேரோட் டமலர் சிறப்புற மலர
பாராட் டும்படி பலபட உழைத்தவன்
கொம்பு விளையாட்டென்றொரு நூலும்
சிறிய தெய்வ வழிபா டென்பதும்
மகேஸ்வர லிங்கம் வழங்கிய பனுவல்கள்
வீர சைவர் வியன்இயல் பாய்ந்தவன்
"சொல்லேர் உழவன்" தொல் "கலா பூஷணம்"
பட்டம் பெற்ற பசுந்தமிழ் வித்தகன்
'சமதான நீதிவான்' தகுதியும் பெற்றவன்

முற்குகர் வம்ச முதுசமாய் நின்றவன்
தற்பெரு மையிலாச் சான்றோன் இவனது
ஆய்வுக் கட்டுரை அனைத்தும் பொக்கிஷம்
தான்தோன் றீஸ்வரன், தாந்தா மலையான்
நாட்டுக் கூத்து, நாதனைச் சடங்கு
கோயிற் கலைகள், கொம்பு விளையாட்(டு)
விபுலா னந்தரின் வியன்இரு தளபதி
மட்டக் களப்பின் வாழ்வும் வீடும்
நாட்டார் இயல்கள், நல்மணத் மியல்புகள்
மட்டக் களப்பு மக்களின் உணவு
இன்னோ ரன்ன எடுத்தாள் பொருள்களில்
ஆய்வுக் கட்டுரை ஆக்கிப் பற்பல
அருஞ்சங் சிகைகள், ஆண்டு மலர்களில்
ஆராய் வோர்க்கு அரும்விருந் தளித்தவன்
பிரதேச த்தின் பிறழாப் பற்றும்
பரமன் திருவடிப் படிமனப் பற்றும்
நீங்கா நிலையில் பாங்காய் வாழ்ந்தவன்
ஊருணி நீர்போல் உறவோர்க் குதவி
நடுவூர்ப் பழுத்த நன்மரம் போல
வாழ்வாங்கு வாழ்ந்த மாபெரும் கலைஞன்
நோய்வாய்ப் பட்டுத் தாய்மண் மறந்து,
அமரனா யானதை ஆர்எதிர் பார்த்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணகம் துறந்து விண்ணகம் எய்திய
அண்ணலின் பிரிவால் அழுந்தும் குடும்பம்
மனைவி மக்கள் மற்றும் சுற்றம்
அனைத்துப் பேர்க்கும் ஆறுதல் கூறுதல்
சாலுமா? ஆயினும் சகித்து இருத்தலே
ஒரேவழி யென்று உயர்ந்தோர் உரைப்பதால்
இம்பரின் சேவை இனிப்போ தும்என
உம்பர்கோன் டேகினர் என்பதை நம்புவோம்
ஆயினும் பிரிவால் இரங்கும்
வாய்மொழி இதயம் வழிநெகிழ வூற்றே

## இரங்கல்

**மனைவி :**

அன்புருவே என்னை ஆளவந்த தெய்வதமே
என்புருக நெஞ்சுருக எமைவீட்டு ஏன்பிரிந்தாய்?
கண்போல காத்து கதறியழ விட்டகன்று
விண்போக நேர்ந்ததென்ன விதிவசமோ சொல்லழகே

பெண்பிறப்பு என்றுவந்தால் பிரிதலென்பதேவிதியோ?
புண்பட்ட மான்போல் புலம்பியழும் நம்மக்கள்
தெம்படைய ஓர்சொல் திரும்பிவந்து சொல்லுதியோ
மண்மீது என்துரையே வாழ்வதெலாம் மாயமதோ!

**மக்கள் :**

அப்பாவே எம்மை அரிதாக ஈன்று
ஆளாக்கி விட்ட திதற்கோ?
தப்பாது காத்து தகுகல்வி தந்து
தளராது பார்த்த திதற்கோ?
எப்போது நாங்கள் இனியுன்னைக் காண்போம்,
எமைவிட்டு நீங்கல் முறையோ?
கைப் பாவையாக உமையாட்டு மீசன்
கண்கெட்ட குருட னலவோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சகோதரி :**

தம்பியே உண்மை யன்பின்
தங்கமாம் பழமே யுன்னை
நம்பியே இருந்த என்னை
நடுவழி விட்டேன் போனாய்?
அம்புவி வாழ்வில் எல்லாம்
அழிவதே திண்ணமென்று
உம்பர்கொண் டேக என்ன
ஊழ்வினை நான் செய்தேனோ!

**மைத்துனர்கள் :**

மைத்து னன்என நம்பியிருந்தநாம்
வானி லேறிய நின்னைவி ழிக்கிறோம்
கைத்து ணையென வந்து உதவுவாய்;
காலதேவனின் கையிலோசிக்கினாய்!
வைத்தி யம்நினைக் கைகழு விட்டதால்
மனைவி மக்கள் மனம்அழி கின்றதை
பைத்தியம்மென நின்றுபார்த்த தேங்கினோம்
பாவமென்ன புரிந்துளோம் ஐயகோ!

**மைத்துனிகள் :**

அன்புத் திருவே மைத்துனரே,
அறிவுக் கடலே. ஆர்நினைப்போல்
இன்பத் துளியாய் நகைச்சுவையை
இறைத்துக் கதைப்பார் இனியிங்கு?
துன்பம் சிதறச் சொற்பெருக்கைச்
சுவையாய்க் கேட்டுக் களிப்போமே,
எங்குற் றனையோ? இது விதியோ?
இறைவா எதற்கிச் சோதனையோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மருமக்கள் :**

'மாமாவே' யென்றுனைநாம் வழிகாட்ட
அழைப்போமே மறந்திட் டாயோ,
தேமாவின் சுவைபோலத் தித்திக்கத்
தித்திக்கச் சிரித்து நின்று
நாமேந்து வினாவெல்லாம் நளினமொடு
செவியேந்தி நவில்வாயன்றோ!
ஏமாந்து போனோமே, இறைவனுக்கு
நெஞ்சிலையோ, எங்குற்றாயோ?

**தேற்றம் :**

வந்த தெல்லாம் போதலே திண்ணமாம்
"வாழ்க்கை என்பது நீர்க்குமி ழி"யென
சிந்தை யுன்னிலே வீழ்ந்திடல் பேதமை
தெய்வம் தந்த உடலே அழியலாம்
எந்த நாளுமே ஆன்மா நிரந்தரம்
இந்த உண்மையை நெஞ்சில் நிறுத்துக.
தந்த வன்அதை மீண்டும் பெறுதலே
சாதல் என்பது, வேதனை யில்லையே
எனவே
நமக்கும் அதுவழி நாம்போ மளவும்
எம்கென் னென்று இட்டுண் டிருப்போம்

சாந்தி, சாந்தி, சாந்தி

*யாப்பு : 'திமிலைத்துமிலன்'*
20.12.2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் கலாபூசணம் மகேஸ்வரலிங்கம் அவர்களின் வாழ்வும் சாதனைகளும்

மகிழடித்தீவில் கல்வி, செல்வம், நற்பண்பு ஆகிய பல பாக்கியங்கள் வாய்க்கப்பெற்ற சந்ததியாகிய உடையார் கத்தறையில் தோன்றியவர் அமரர் மகேஸ்வரலிங்கம். இவர் நற்பண்பும் சாத்திரஅறிவும் கொண்டவரான கதிராமப்-போடிக்கும் அழகம்மாவிற்கும் இளைய புதல்வராக 23-09-1942ம் ஆண்டு பிறந்தார். மூன்று அண்ணன்மாரும் ஒரு அக்காவும் இவருக்கு சகோதரர்களாவர். குடும்பத்தின் இளையபிள்ளை ஆகிய காரணத்தினால் இவர் ஒரு செல்லப்பிள்ளையாக குடும்பத்தாரால் மதிக்கப்பட்டார்.

இளமைக் கல்வியை மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலயத்திலும் சாதாரண தரக் கல்வியை முதலைக்குடா மகாவித்தியாலத்திலும் கற்ற இவர் 1963ம் ஆண்டு சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்து மட் / சிவானந்த வித்தியாலயத்தில் உயர்தரக்கல்வியைப் பெற்று 1965ம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு தெரிவானார். 1970ம் ஆண்டு கலைப்பட்டதாரி ஆகி மண்முனைப் பிரதேசத்தின் முதலாவது பட்டதாரியாக விளங்கினார். பல்கலைக்கழக பட்டத்தைப் பெற்று தமது கிராமத்திற்கு வந்த இவருக்கு தனது சொந்தக் கிராமத்திற்கும், தனது பிரதேசத்திற்கும் தன்னால் இயன்ற பொதுசேவை செய்யவேண்டுமென்ற ஆர்வம் தோன்றியது. இக்காலப்பகுதியில் மகிழடித்தீவு கிராம முன்னேற்ற சங்கத் தலைவராக இருந்து அக்கிராமத்திற்கு பல சேவைகளை செய்தார். 1981 தொடக்கம் 1991 வரை மகிழடித்தீவு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயத்தின் தலைவராக இருந்து சேவையாற்றியதுடன் பல தீர்க்கப்படாத பிரச்சினைகளை முன் நின்று தீர்த்தார்.

சமூக சேவையில் இவருக்கிருந்த ஆர்வத்திற்கு துணை போவது போன்று 1976ம் ஆண்டு இவருக்கு கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்தர் பதவி கிடைத்தது. தனது தொழிலை ஒரு ஊதியத்திற்காகச் செய்யும் தொழிலாக இவர் கருதவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல வழிகளிலும் பின்தங்கிய கிராமங்களிற்குச் சென்று அவர்களது கல்வி, பொருளாதாரம், கலை கலாசாரங்களை எவ்வாறு எழுச்சி பெறச் செய்ய முடியுமோ அத்தனை வழிகளையும் கையாண்டு பெரும் சேவை செய்தார். ஒரு கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்தர் பணியை பூரணமாகச் செய்த அரசஊழியர் அமரர். மகேஸ்வரலிங்கம் என்று கூறினால் அது மிகையாகாது. தனது சக ஊழியர்களினதும் தனக்கு கீழேயுள்ள ஊழியர்களதும் தனது மேலதிகாரிகளதும் கிராமவாசிகளதும் அன்புக்குரியவராக வாழ்ந்த பெரும் மனிதன். அரச அதிபர்களான திரு. மோனகுருசாமி, திரு. புண்ணியமூர்த்தி, திரு. அருமைநாயகம் ஆகியோருடன் நெருங்கிய நட்புக் கொண்டிருந்தவர். பிரதேச செயலாளர்களாக இருந்த திரு. சாமித்தம்பி, திரு. சிவநாதன், திரு. அமலநாதன் ஆகியோருடன் மிக நெருக்கமான உறவு கொண்டிருந்தவர்.

தனது சொந்தக் கிராமத்திலேயே நற்குடியில் பிறந்த நற்பண்புகளைக் கொண்டிருந்த குணவதி என்ற பெண்ணை 1976ம் ஆண்டு காதல் திருமணம் செய்து கொண்டு அன்பும், பண்புமாக வாழ்ந்த இவருக்கு நக்கீரன், குந்தவை, வாகீசன், ஆதிரை ஆகிய நான்கு குழந்தைச் செல்வங்கள் கிடைத்தது. இவர்களுக்கு நற்கல்வியூட்டி தனது கண்டிப்போடு கூடிய அன்பினைக் காட்டி, நற்பண்புடைய பிள்ளைகளாக வளர்த்து, இத்தரையில் சிறப்பாக வாழவைத்து சென்றுள்ளார். பொதுசேவையில் ஈடுபட்டாலும் தனது குடும்பத்தினை சிறப்பாக வழிநடத்திய ஒரு சிறந்த குடும்பத்தலைவனாக வாழ்ந்தவர் அமரர் மகேஸ்வரலிங்கம்.

சிறிது காலம் அரசியல் மேடைகளில் ஏறி சிறந்த பேச்சாளராகத் திகழ்ந்த அமரர் மகேஸ்வரலிங்கம் காலம் சென்ற எதிர்மன்னசிங்கம் போன்றோர் பாராளுமன்றம் செல்வதற்கு ஒரு முக்கிய பேச்சாளராக இருந்தவர். ஒரு காலத்தில் பட்டிருப்புத் தொகுதியில் மகிழை மகேசனின் பேச்சு என்றால் மக்கள் கூட்டம் கட்டுப்படுத்த முடியாதளவு கூடிய வரலாறும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரை எந்த மேடையில் ஏற்றி எந்தத் தலைப்பைக் கொடுத்தாலும் அழகு தமிழில், அடுக்கு மொழியில், சொற்சுவை, பொருட்சுவை ததும்ப பேசும் சக்தியை இறைவன் இவருக்கு ஆசிர்வதித்திருந்தார்.

இவரை ஒரு கலைப்பொக்கிஷம் என்று கூறலாம் அந்தளவிற்கு மட்டக்களப்பு மக்களின் பண்பாடு, கலைகலாசாரங்கள், தெய்வவழிபாடு பற்றி ஆராய்ந்து அறிந்து வைத்திருந்தார். மட்டக்களப்பு கலைகலாசாரங்களை எழுதிய அதிகமான எழுத்தாளர்கள் இவரது ஆலோசனைகளைப் பெற்று எழுதி வந்ததை நாம் அறிவோம். ஒரு கலாநிதிப் பட்டம் பெற்ற பேராசிரியருக்கு இருக்கும் திறமை இவரிடத்தில் காணப்பட்டது. இவரது ஆராய்ச்சியும் அறிவும் இவர் எழுதிய கட்டுரைகளாலும் "சிறுதெய்வ வழிபாடு" என்ற நூலாலும் வெளிப்படுத்தப்பட்டு இருக்கின்றது. இவரது பேச்சு வன்மை கலை, கலாசார அறிவு காரணமாக இவரோடு பேராசிரியர்களான கலாநிதி, சிவத்தம்பி, கலாநிதி. பத்மநாதன், கலாநிதி. மௌனகுரு, கலாநிதி. யோகராசா, கலாநிதி செல்வராசா ஆகியோர் பெருநட்புக் கொண்டிருந்தனர். அமெரிக்க சமூகவியல் ஆய்வாளரான டெனிஸ் மைக்கல் பிறே என்பவரின் ஆய்விற்கு பல வழிகளிலும் உதவிய இவருடன் இவ்ஆய்வாளர் தொடர்ந்து பெருநட்புக் கொண்டிருந்தார்.

மட்டக்களப்பு மாவட்ட கலாசார பேரவை உறுப்பினராக 1972 - 1992 வரை சேவையாற்றினார். பிரதேச கலாசார சபையின் செயலாளராக 1976 - 1996 வரை சேவையாற்றினார். மட்டக்களப்பு மாவட்ட சனசமூக சேவ சம்மேளன தலைவராக 1972 - 1975 வரை சேவையாற்றினார். மண்முனை தென்மேற்கு பிரதேச பலநோக்கு கூட்டுறவு சங்கத் தலைவராக இருந்து பல சேவைகளை ஆற்றினார். கொக்கட்டிச்சோலை தான்தோன்றியீஸ்வரர் ஆலய வளர்ச்சிக்காக பெரும்பாடு பட்டவர். 1978ம் ஆண்டு நிருவாகசபை மாற்றத்திற்கு முன்நின்று உழைத்தவர். தேரோட்ட காலங்களில் தமது பேச்சு வன்மையால் மக்களைப் பக்திப் பரவசம் ஆக்குவதுடன், நன்கு நெறிப்படுத்தும் வல்லமை படைத்தவர். திருவேட்டையை சிறப்பாக நெறிப்படுத்தி நடத்தியவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1998ம் ஆண்டு ஸ்ரீ தான் தோன்றீஸ்வரர் ஆலய கும்பாபிஷேக மலர்க்குழுவில் உறுப்பினராக இருந்து செயற்பட்டவர். இவரது இழப்பு இப்பிரதேச ஆலயங்களுக்கு பேரிழப்பாகும்.

இவரது குணஇயல்புகளை நாம் எல்லோரும் அறிவோம். அன்புள்ளம் கொண்டவர் கொடிய செயல்களைக் கண்டால் ஐயோ! என்ற வார்த்தை அவரது வாயிலிருந்து வெளிவருவதை அடிக்கடி காணலாம். ஆனால் பாரதியார் கூறியது போன்று

"நிமிர்ந்த நன்நடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்"

இவரிடத்தில் இருந்தனைக் காணமுடியும் எந்த மேடையானாலும் எந்த பொதுக்கூட்டம் ஆனாலும் சரியைச் சரி என்றும் பிழையைப் பிழை என்றும் துணிந்து கூறும் பண்புடையவராக இருந்தவர் அமரர் மகேஸ்வரலிங்கம்.

இவ்வாறு பல வழிகளிலும் சிறந்து விளங்கிய அமரர். கலாபூசணம் மகேஸ்வரலிங்கம் அவர்களின் இழப்பு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அவரது இழப்பால் துயருறும் அவரது மனைவி, மக்கள், சகோதரி, மருமக்கள், உற்றார் உறவினர் ஆகியோருக்கு ஆறுதல் கூறி இப்பெரியாரது ஆத்மா சாந்தியடைய வேண்டி எல்லாம் வல்ல ஸ்ரீ தான்தோன்றீஸ்வரனை பிரார்த்திப்போமாக!

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

மகிழடித்தீவினிலே மகிமையுடன் வாழ்ந்த
மகிழை மகேசன் எனும் மாமனிதன்
தமிழுக்கும், மக்களுக்கும், தளராது சேவை செய்து
அகிலத்தை விட்டு அரண் பாதம் சேர்ந்த திதி

**க. திருநாவுக்கரசு**
மகிழடித்தீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்புப் பண்பாட்டின் ஆழமான பார்வையாளன்

திரு. க. மகேஸ்வரலிங்கம் அவர்கள் பற்றிய ஒரு

# நினைவுக்குறிப்பு

- பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி

மட்டக்களப்புப் பண்பாட்டின் அடிநாதமான இயல்புகளை தெளிவுபடுத்தி உதவியவர்களுள் மகேஸ்வரலிங்கம் அவர்களின் பெயர் மிக முக்கியமான ஒன்றாகும். இலங்கைத்தமிழ் வரலாற்று நிலையில் இலங்கையின் பிரதான தமிழ்க்குடியிருப்பு மையங்களாகக் கொள்ளப்படுபவவை யாழ்ப்பாணமும், மட்டக்களப்புமாகும் உண்மையில், மட்டக்களப்பு, திருமலை, வன்னி, யாழ்ப்பாணம். மன்னார், புத்தளம், சிலாபம், கொழும்பு, எனப் பல பிரதேச அலகுகள் உள்ளனவெனினும் பண்பாடு, பண்பாட்டுச் செயற்பாடுகள் நிலையில் யாழ்ப்பாணத்தில் உள்ளனவாக எடுத்துக் கூறப்படுவன மட்டக்களப்பிலும் உண்டு என்ற முறைமையிலேயே மட்டக்களப்பின் கலை, இலக்கியங்கள் அறிமுகப்படுத்தப்படும் பண்பு நிலவிவந்தது. கூத்து மரபின் மீட்டெடுப்பினோடு கூத்து மரபுகள் பற்றி விரிவாக எழுதப்பட ஆரம்பித்தன. ஆயினும், மட்டக்களப்புப் பண்பாட்டின் தனித்துவமான அம்சங்களை முதன்மைப்படுத்தி எடுத்துரைப்புக் கட்டுரைகள் எழுதும் முறைமை மிகக்குறைவாகவே காணப்பட்டது. இந்தக் குறைபாட்டினை நிவர்த்தி செய்தவர்களுள் மகேஸ்வரலிங்கம் மிக முக்கியமானவர். மகேஸ்வரலிங்கம் தாம் எழுதிய "மட்டக்களப்புச் சிறுதெய்வவழிபாடு" எனும் நூலின் மூலம் சமஸ்கிருத மயப்படுத்தப்படாத மட்டக்களப்பின் வழிபாட்டு மரபுகளை (Cults) முதன்மைப்படுத்தி நூல் எழுதினார். இந்நூல் மட்டக்களப்பு மதநம்பிக்கை பற்றி அறிவதற்கான ஒரு முக்கியமான திறவு கோலாகும்.

வரன் முறைமையான ஆராய்ச்சியைத் தொழிலாகக் கொள்ளாத பலருக்குக் கிடைக்காத ஒருவாய்ப்பு மகேஸ்வரலிங்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்திற்குக் கிட்டியிருந்தது. மட்டக்களப்புத் தமிழ்மக்களின் சாதி ஒழுங்கமைப்பு முறைமையினை ஆராய்ந்த டெனிஸ் மக்கில்வ்றே என்ற பிரசித்தி பெற்ற ஆராய்வாளருக்கு இவர் உள்ளூர் தெரிவிப்பாளர்களுள் ஒருவராக விளங்கினார்!

சமூக, மானிடவியல் ஆராய்ச்சித்துறையில் இது ஒரு முக்கியமான நியதி அதாவது, பிறபண்பாட்டிலிருக்கும் ஒரு தொழில்முறை ஆராய்ச்சியாளர் இன்னொரு பிரதேசத்தில் சமூக ஆய்வுகளிலிறங்கும்போது அப்பிரதேசத்திலுள்ள, "விஷயம் தெரிந்தவர்கள்" என்று கணிக்கப் படத்தக்க சிலரை தெரிவிப்பா-ளர்களாகக் கொள்வது ஒரு வழக்கமாகும். டெனிஸ்மக்கில்வ்றே என்பவர் மட்டக்களப்பின் சமூக ஒழுங்கமைப்பு முறைமையை ஆராய்ந்து, மட்டக்களப்பின் குடிமுறைமையை (The Matri - clan System) என விபரித்து (அந்த முறைமையின்) அந்த முறைமையின் சமூக நிலைகளை முதற் தடவையாக சமகால உலக மானிடவியல் ஆய்வாளருக்கு எடுத்துக் கூறியவர் மகேஸ்வரலிங்கம் இவருடைய தெரிவிப்பாளராக விளங்கியவர்.

மக்கில்வ்றே தொடர்புகள் காரணமாக மட்டக்களப்பு வாழ்வியலின் குணாம்ச அலகுகளை இனங்கண்டு கொள்வது மகேஸ்வரலிங்கத்திற்குச் சுலபமாயிற்று. உண்மையில், சிறுதெய்வம் என்ற கருதுகோள் சிக்கலுடைய ஒன்று; ஒருவர் ஒரு தெய்வத்தை வழிபடும் பொழுது அதனை 'சிறு' 'பெரு' என்று பார்ப்பது கிடையாது. ஆங்கிலத்திலே பேசப்படும் Little tradition என்பதை "சிறுமரபு" எனக்கூறி அதன் வழியாக "சிறுதெய்வ மரபு" என்னும் தொடரும் வந்துவிட்டது ஆனால், மகேஸ்வரலிங்கம் அதனை நன்கு இனங்கண்டுள்ளார். 1997/98ல் நான் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் வருகைப் பேராசிரியராகக் கடமையாற்றிய காலத்தில் மட்டக்களப்பு வாசகர்வட்ட நண்பர்கள் தொடர்புகள் மூலமும் சிவராமின் தொடர்புகள் மூலமும் மட்டக்களப்புப் பண்பாட்டினுள் காலூன்றி நிற்பவர்களைக் காணும் வாய்ப்பு ஏற்பட்டது. அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையிலேதான் மகேஸ்வரலிங்கம் என்னுடன் உரையாட வந்தார். அப்பொழுது அவர் மட்டக்களப்பு பிரதேச விளையாட்டுக்கள் பற்றி தகவல்கள் சேகரிப்பதாக எனக்கு எடுத்துக் கூறினார். அதுவும் ஒரு வளமான பண்பாட்டு அலகு ஆகும். மகேஸ்வர-லிங்கத்தின் முக்கியமான ஈடுபாடு கொக்கட்டிச்சோலை தான்தோன்றியீசுவரர் கோயில் ஏடு ஒன்றினைப் பதிப்பிப்பது பற்றியதாக இருந்தது. அவ்விடயத்தில் சிவராமும் மிகப்பெரிய ஆர்வம் காட்டினார். தான்தோன்றீயீசுவரர் கோயிலும் அதன் வழிபாட்டுமுறைகளும் வீர சைவ முறையைச் சார்ந்தவை. மட்டக்களப்பில் வீரசைவ முறை எவ்வாறு வந்தது? எவ்வாறு நிலைகொண்டிருந்தது என்பது பிரதானமான வரலாற்று வினாக்களாகும். மட்டக்களப்பு கலைகளையும், பண்பாட்டையும் நாட்டார் நிலைப்பட வைத்து நோக்கும் வழமையான பார்வையின் பலவீனத்தை மட்டக்களப்பின் வீரசைவ மரபு வரலாறு நிச்சயமாகக் கேள்விக்குள்ளாக்கும். அது மாத்திரமல்ல; மட்டக்களப்பில் ஒரு நீண்ட சைவக்கோயிற் பாரம்பரியமும் உண்டு இப்போதுள்ள மாமாங்கேஸ்வரப் பிள்ளையார் கோயில்கூட ஒரு சிவன்கோயில் என்று கூறுவர். பொலன்னறுவை முதல் கொக்கட்டிச்சோலை வரை ஒரு சிவன்கோயிற் பாரம்பரிய பாதைவழியுண்டு என்று சிவராம் வாதிடுவார். இந்தவிடயம் பற்றி மகேஸ்வரலிங்கம் செய்த ஆய்வுகளின் இப்போதையநிலை என்ன என்பது தெரியவில்லை. நான் அங்கிருந்த காலத்தில் மகேஸ்வரலிங்கத்திற்கும் கிழக்குப் பல்கலைக் கழகத்திற்கும் வரன் முறையான புலமைத் தொடர்பு இருக்கவில்லை. ஆனால், பேராசிரியர் மௌனகுரு போன்றவர்கள் மகேஸ்வரலிங்கத்தின் அறிவாழத்தை உணர்ந்திருந்தனர். துரதிஷ்டவசமாக கிழக்குப் பல்கலைக்கழகம் இதுகாலவரை வரலாற்றுத்துறையை சாஸ்திரிய பூர்வமாக வளர்க்கவில்லை. அது இப்பொழுது பேராசிரியர் பத்மநாதனின் வழிகாட்டலில் நடைபெறுவதாக அறிகிறேன். இத்தகைய சூழ்நிலையில் மட்டக்களப்பின் உள்ளூர் வரலாறு (Local History) பற்றி அக்கறை காட்டியவர்களின் எழுத்துக்களை பரிசீலிப்பது பல்கலைக் கழக மட்டத்தின் கடனாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கனவே கூறியபடி! இந்தவிடயத்தில் மாவட்ட அரசாங்க அதிபரும் போதிய கவனஞ் செலுத்துதல் வேண்டும். உண்மையில் மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகமும் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சமூகக் கற்கை நெறி பீடமும் இணைந்து மகேஸ்வரலிங்கத்தின் பிரசுரிக்கப்பட்ட கட்டுரைகளை மீள்அச்சுச் செய்தும் பிரசூரிக்கப்படாதவற்றை நன்கு செவ்வைப்படுத்தி பதிப்பித்ததும் உதவ முன்வர வேண்டும். இது மகேஸ்வரலிங்கம் என்ற தனிமனிதனுக்குச் செய்யப்படும் கௌரவமாக அமையாமல் மட்டக்களப்பு மாவட்டம் முழுவதற்கும் செய்யப்படும் கௌரவமாகக் கொள்ளவேண்டும். இதிலுள்ள சிறப்பு என்னவென்றால் மகேஸ்வரலிங்கத்தின் எழுத்துக்கள் மட்டக்களப்பின் சமூக, வரலாற்றை மீள் கண்டுபிடிப்பதற்கான திறவுகோலாகும். மட்டக்களப்பு மான்மியம் என்ற நூலை வெளியிட்ட காலஞ்சென்ற F.X.C நடராசா அவர்களுக்கு கௌரவப்பட்டம் வழங்கிய கிழக்குப் பல்கலைக்கழகம் மகேஸ்வரலிங்கத்தின் சேவைகளை புறக்கணிக்க முடியாது என்றே கருதுகின்றேன். மகேஸ்வரலிங்கத்தை மறப்பதென்பது இன்றையநிலையில் இதுவரை தெரியப்பட்ட மட்டக்களப்பின் உள்ளூர் வரலாறுகள் பற்றிய விபரங்களையும், ஆய்வுகளையும் மறப்பதாகவே அமையும். மகேஸ்வரலிங்கம் அவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அவர் பெயர் நின்று நிலைத்து செல்ல வேண்டும் என்பது என் அவா *(திரு. மகேஸ்வரலிங்கம் அவர்கள் பற்றிய விடயங்களை என்னுடன் கலந்துரையாடிய எனது மாணவரும் நண்பருமான கலாநிதி செ. யோகராசாவிற்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி நி. பத்மநாதன் (ஓய்வு நிலை பேராசிரியர்),
பேராதனைப் பல்கலைகழகம்.

# மகிழை மகேசன்

ஏறக்குறைய 40 ஆண்டுகளாக மகேஸ்வரலிங்கம் எனக்கு அறிமுகமானவர். பேராதனைப் பல்கலைகழகத்தில் அவரது இறுதி ஆண்டிலே எனது வரலாற்று வகுப்புக்களிலே அவர் மாணவராக பயின்றவர். அவரிலே சில சிறப்பான பண்புகள் இருந்தன. அதனால் அக்காலம் முதல் அவரது முன்னேற்றங்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டேன். மட்டக்களப்பு வரும் சமயங்களில் எல்லாம் நான் அவரை பார்க்க வேண்டும் என்பது அவருடைய வேண்டுகோள் அது புறக்கணிக்க முடியாத வற்புறுத்தலாகி விடும். கொக்கட்டிச்சோலையில் இரு தடவைகள் அவரது வீட்டுக்கு போன ஞாபகம் உண்டு. அண்மைக் காலங்களில் கல்லடியில் உள்ள வீட்டுக்கு இரு தடவைகள் அழைத்து சென்றார்.

மகேசன் தமிழ் மொழியில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். தமிழர் சமுதாயத்தில் அவர் கொண்டிருந்த பற்று அதனிலும் மேலானது. வசிகரமான தோற்றமும், கவர்ச்சியான பண்பும் புன்முறுவல் பொலிந்த அவர் கோலமும் இயல்பான பண்புகள் தனது தலை முறையினரிடையே கிழக்கிலங்கையில் தலை சிறந்த பேச்சாளராக விளங்கினார். வித்துவத்திலே சாமர்த்தியம் இருந்த போதிலும் பொதுக் கலைமானி ஆகி விட்டதால் அத்துறையில் அன்றி பொது நிர்வாக சேவையில் தொழில் வாய்ப்பினை பெற நேர்ந்தது.

கிழக்கிலங்கை வரலாற்றில் அவருக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தது. வரலாற்று ஆவணங்களான ஏட்டு சுவடிகளை தேடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணிக்காத்தலில் ஈடுபட்ட மகாவித்துவான் F.X.C. நடராசா, அட்டப்பள்ளம் கணபதிப்பிள்ளை போன்றோருடன் அவர் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர். அந் நாட்களில் மட்டக்களப்பு பாரம் பரியத்தில் ஈடுபாடு கொண்ட வித்தகரான ஆர்வலர் வட்டம் ஒன்று இருந்தது. இளைஞராகிய மகேஸ்வரலிங்கமும் அவர்களில் ஒருவராக விளங்கினார். கிராமிய வழிபாடு, தேசத்து கோயில்கள் என்பன பற்றிய அவரது கட்டுரைகள் பிரசித்தமானவை. மிகவும் பயனுடையவை. இவற்றின் காரணமாக அவருக்கு பல விருதுகளும் பாராட்டுக்களும் கிடைத்தன. தேசத்து கோயில்களை பற்றிய பாடங்களை தேடி பிரசுரித்து அறிமுகமாக்கியவர் இவரே. மத்திய கால மட்டக்களப்பு தேசத்து சமூக வலிமைகளை அறிந்து கொள்வதற்கு இவருடைய ஆக்கங்கள் மிகவும் பிரியோசனமானவை.

கேன்றி பல்கலைகழக மானிடவியல் ஆய்வாளர், டெனிஸ் மைக்கில்வெரே இங்கு வந்து நெடுங்காலம் ஆய்வு செய்து ஆய்வு முடிவுகளை பல நூல்களிலும், பல கட்டுரைகளில் வெளியிட்டுள்ளார். அவரின் உதவி ஆராட்ச்சியாளராகவும், ஆலோசகராகவும் மகேசன் பணி புரிந்தமை குறிப்பிடதக்கது.

அவருடைய முயற்சிகளையும் பண்புகளையும் இளைஞர் சமுதாயம் முன்னுதாரணமாக கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Colorado at Boulder
Department of Anthropology
Hale Science 350 / 233 UCB
Boulder, Colorado 80309-0233 USA
303-492-2547 FAX 303-492-1871
anthro@colorado.edu
www.colorado.edu/Anthropology

4 December 2007

I first met K. Mahesvaralingam in 1975 when he started working as my research assistant on topics of Tamil ritual and medicine in Akkaraipattu. I was employed then as an Assistant Lecturer at Cambridge University, UK, and my wife Beth was experiencing her first trip to Sri Lanka. It was amusing for her to watch as Mahesan and I struggled together to understand the arcane medical songs sung by traditional Tamil and Muslim curing specialists (*parisaris*) containing words so rare and unusual that we were constantly looking them up in the Rev. Winslow's *Dictionary of High and Low Tamil* (1862). Mahesan quickly impressed me with his intelligence and his natural skills as an ethnographic researcher. He certainly could have been an anthropologist in his own right. In any case, he definitely made me a better anthropologist with his help and friendship. In addition to exploring Tamil cultural patterns with me in Akkaraipattu, Mahesan served as my primary guide to the customs and traditions of Kokkadichcholai, Ambilanturai, and the rest of the *paduvan karai*. I was present for the ritual "opening" of the new house in Makiladittivu where Mahesan and Gunavati would live after their marriage, and our eldest boy Cameron played with their son Nakeeran, who was the same age (18 months). When the ethnic violence forced Mahesan to relocate with his family to Kallady, I kept in touch by visiting him whenever I was in the island and asking him about the many changes in Tamil and Muslim life that were occurring because of the conflict. I last saw Mahesvaralingam in June 2007, just before his daughter Kunthavai's wedding. I will always remember that visit, including the wonderful meal (and, yes, the cold beer) I enjoyed in the company of Makhesan's family and close friends. All of the fieldwork details about Batticaloa Tamil traditions that I documented with Mahesvaralingam over the years have proven extremely valuable to my research, and many of them will soon appear in my book, *Crucible of Conflict: Tamil and Muslim Society on the East Coast of Sri Lanka* (Duke University Press 2008). Although he was not able to see this volume completed before he passed away, I know that he would have felt proud to play such a key role in helping me to write it. Mahesan was a dear friend and a gifted scholar of Batticaloa cultural traditions. He will always be a part of my memories and a silent contributor to everything I study.

Dennis B. McGilvray, PhD
Associate Professor and Chair



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படுவான் கரையின் நாதமும் அதன் அதிர்வுகளும்

## (மகேஸ்வரலிங்கம் பற்றிய மனப்பதிவுகள்)

*பேராசிரியர் : சி. மௌனகுரு*

இறப்பு இருவகையானது ஒருவகை இறப்பு இறகு போன்று மென்மையானது. அது மனதை அதிகம் பாதிக்காது. இன்னொரு வகை இறப்பு மலை போன்று பாரமானது. அது மனதை அழுத்தும் நண்பர் மகேஸ்வரலிங்கத்தின் இறப்பு என் மனதை மலைபோல அழுத்துகிறது.

எனக்கும் அவருக்குமான உறவு நாங்கள் இருவரும் மாத்திரமே அறிந்தது. சங்க இலக்கியத்திலே ஒரு வரி வருகின்றது. 'உள் அறிந்ததன்றி மற்றிவ் ஊர் அறிந்ததில்லையே' என்று எனக்கும் அவருக்குமான உறவு, நெருக்கம் புரிந்துணர்வு எம்மிருவருக்கும் தான் தெரியும். ஊருக்குத் தெரியாது.

அவர் இறப்பு என்னை அழுத்துவதற்கான காரணங்கள் யாவை.

ஒன்று என்னையும், என் கருத்தியல்களையும் நன்கு புரிந்து கொண்ட ஒரு நெருக்கமான ஆன்மா இழந்த துயரம்.

இரண்டு நமது கருத்தோடு ஒட்டி ஆராய்வுப்பாதையில் நடந்து வந்த ஒரு சக பயணியை இழந்த சோகம்.

மூன்று மட்டக்களப்புப் பண்பாட்டை தனக்குள் வைத்திருந்த ஒரு நல்ல விதை நெல்லை இழந்த துக்கம்.

**நெருக்கமான ஆன்மா :**

மகேஸ்வரலிங்கம் எனது உற்றார் அன்று உறவினர் அன்று அவர் படுவான்கரையினர். நான் எழுவான் கரையினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுக்கும் அப்பால் என்னை அவர் புரிந்து கொண்டிருக்கின்றார். இப்புரிந்துணர்வு எதனால் வந்தது? இம்மண் சார்ந்த மக்களின் பண்பாடும் கலைகளும் செழுமையானவை, புராதானமானவை என்பதும், மக்கள் கலைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். என்பதும் எமது கொள்கை. இக்கொள்கை அவருக்குமுண்டு. ஆரியமயமாக்கும் ஐரோப்பிய மயமாக்கமும் இந்தியாவிலும், இலங்கையிலும் நாசூக்காகவும் பெருமளவும் நடந்து வரும் இக்கால கட்டத்தில் அதற்கெதிராகக் குரல் தருவோருள் ஒருவராக அவரும் இருந்தார்.

தன் மகளின் திருமணத்தை மட்டக்களப்பு தமிழர் பாரம்பரியப்படி நடத்த நினைத்தார். ஆனால் அவரால் அதில் பெருமளவு வெற்றி காணமுடியவில்லை. எனினும் அன்றைய விழாவில் முதல் விளக்கேற்றி மங்களகரமாக அதனை ஆரம்பிக்க வேண்டும். என்று என்னையும், என் மனைவியையும் வீடு தேடி வந்து முறைப்படி அழைத்திருந்தார். தன் உறவினருள் மூத்தவர் ஒருவர் செய்யும் முக்கிய பணிக்கு உறவினர் அல்லாத என்னை அழைத்திருந்த அவரின் பெரும் பண்பை நான் கண்டு வியந்தேன்.

இம்மக்களின் பண்பாட்டிலும், வரலாற்றிலும் அதிக அக்கறை கொண்டிருந்த அவரும் நானும் அடிக்கடி சந்திப்போம். தொலைபேசியில் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வோம். அத்தகைய நெருக்கமான உறவுகளுள் ஒன்றை நான் இழந்தேன்.

**ஆராய்ச்சிப் பாதையின் சக பயணி :**

மகேஸ்வரலிங்கத்தின் ஆய்வுக் களத்தை இரண்டாக வகுக்கலாம். ஒன்று மட்டக்களப்பின் பண்பாடு இன்னொன்று மட்டக்களப்பின் இந்துமதம் . இந்துமதத்தில் அவர் சிறுதெய்வ வழிபாடு. வீரசைவ வழிபாடு இரண்டிலும் தம் அக்கறையினைச் செலுத்தியிருந்தார். மட்டக்களப்பு வாசகர் வட்டம் ஒழுங்கு செய்த ஒரு கூட்டத்தில் அவர் மட்டக்களப்பின் சிறு தெய்வங்கள் பற்றிப் பேசிய பேச்சு மிகமுக்கியமான ஒரு பேச்சு. பேச்சு முடிய நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரிடம் அது நூலுருவாக வரவேண்டிய அவசியத்தைக் கூறினேன். அது நூலுருவாகவும் வந்தது. அதற்கு என்னிடம் ஓர் முன்னுரையும் அவர் கேட்டிருந்தார். மட்டக்களப்பின் புராதன வணக்கமுறைகளை அறிமுகம் செய்யும் சிறந்த நூல் அது. கி.பி 10ம் நூற்றாண்டுக்குப் பின் மட்டக்களப்புக்கு வந்த ஒருமதம்தான் வீரசைவம் அது மாகோனின் வரவுடன் இங்கு வேரூன்றி விடுகிறது. வீரசைவம் சைவத்தில் காஷ்மீரசைவம், வீரசைவம், சித்தாந்த வைசம் என மூன்று முக்கிய பிரிவுகள் உண்டு. இவற்றுள் வீரசைவம் சாதிமத பேதங்களுக்குச் செயலளவிலும் எதிரானது. அம்மதத்தின் தாற்பரியங்களையும் மூலங்களையும் அறிவதிலும், பரப்புவதிலும் மகேஸ்வரலிங்கம் ஈடுபட்டிருந்தார்.

இதனைவிட மட்டக்களப்பின் பண்டைய கலைகளான கூத்து, வசந்தன், கொம்புமுறி ஆகியன பற்றியும் அக்கறை கொண்டிருந்தார். இத்தகைய அக்கறைகளும் ஆர்வமும் எமக்கிருந்தன.

படுவான்கரைப் பகுதியின் குடி முறைமைகளையும், சமூக அமைப்பையும் ஆராய வந்த மக்கில்வ்றே என்ற அமெரிக்க மானிடவியலாளருக்கு மிகுந்த துணையாக நின்று அவர் வேலையை இலகுபடுத்தியிருக்கிறார். மக்கில்வ்றேக்கு மகேஸ்வரலிங்கம் எதிர்பாராமற் கிடைத்த பெரும் சொத்து.

வீரசைவம் பற்றியும் வீராகமம் பற்றியும் அதிக அக்கறை கொண்டிருந்த அவருக்கு நான் இந்தியா சென்று வரும் போதெல்லாம் அது சம்பந்தமான நூல்கள் கொணர்ந்து கொடுப்பேன். அவரிடமிருந்தும் பெற்றுக் கொள்வேன்.

படுவான்கரையில் மறைந்துவிட்ட கொம்பு முறியை மீண்டும் புதுப்பிக்க அவர் எண்ணம் கொண்டார். அதனைப் புதுப்பிப்பது பற்றி எம்முடன் பல தடவை கலந்துரையாடியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வண்ணான் கூய்ப் போடுதலுடன் அதனை ஆரம்பிக்க எண்ணி அதன் நடைமுறைகளை அவர் என்னிடம் கூறிய போது வண்ணான் கூய்ப் போடுதலுக்குப் பதிலாக ஊரவர் ஒருவரைக் கூய்ப் போட வைப்பது நன்றல்லவா? சமூகம் மாறிவருவதையும் கணக்கில் எடுக்க வேண்டாமா? என்ற எனது கருத்தை மிகப் பலமாக அவர் ஆமோதித்தமை எனக்கு இன்னும் ஞாபகத்திற்கு வருகிறது. அவரது பேதமற்ற அகண்ட மனத்தின் பிரதிபலிப்பு அது. பேதங்களற்ற ஓர் உலகைத்தான் அவர் கற்பனை செய்தார்.

கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீஸ்வரர் கோயிலில் வண்ணக்குமுறைமையின் பாரம்பரியத்தன்மை முழுமக்களையும் உள்ளிழுப்பதாக அமைந்திருப்பதாயில்லை என்று என்னிடம் அடிக்கடி கூறியுள்ளார். "அவர்களுக்கு உதவியாக ஒரு சபையை உண்டாக்கி அதில் மக்களையும் இணைத்தால் நல்லதுதானே" என்று நாம் கூறியதை மனதார வரவேற்று அது நல்ல முறை என அவர் முகம் மலர்ந்தது. இன்றும் ஞாபகத்திலுள்ளது. தான்தோன்றீஸ்வர ஆலயத்தில் வேட்டைத் திருவிழாவை அவர் மிகச் சிறப்பாக நடத்தியது பற்றிப் பலரும் புகழ்ந்து கூறக் கேட்டு மனம் மகிழ்ந்தேன். எனது கலாநிதிப் பட்ட ஆய்வில் மட்டக்களப்பின் சமயச் சடங்குகளுக்குள் காணப்படும் நாடகத் தன்மை பற்றி விளக்கமாகக் கூறியுள்ளேன். அதனைப் பிழையாகப் புரிந்து கொண்டோர் பலர் உலகம் பூராகவும் பண்டைய சடங்குகள் நாடகத் தன்மையுடன் தான் நிகழ்த்தப்பட்டுள்ளன. வேட்டைத் திருவிழாவை எப்படி நாடகத் தன்மையுடன் நடத்தலாம் என அவர் என்னிடம் கலந்துரையாடியுள்ளார்.

ஆராய்ச்சித் துறையில் காணும் முடிவுகளைச் செயற்படுத்தும் சமூக பலமும் சமூக அங்கீகாரம் அவருக்கிருந்தமை அவருக்கிருந்த சாதகமான பக்கம். அவர் செயற்பாடுகள் எமக்குப் பெருமகிழ்வு தந்தன. அவர் செயற்பாடுகளால் படுவான்கரையின் பண்பாடும் கலைகளும் மத அனுட்டானங்களும் புதிய பொலிவும் புதிய வலுவும் பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் வெற்றி தோல்விகளையெல்லாம் அடிக்கடி எம்முடன் உரையாடுவார். நாமும் நமது வெற்றிதோல்விகளை-யெல்லாம் அவருடன் உரையாடிக் கொள்வோம். இவ்வகையில் ஒத்த கருத்தும் நோக்கமும் கொண்ட ஒரு சக பயணியாக என்னுடன் அருகில் நடந்து வந்த அவர் இழப்பின் பின் தனிமையை நான் முற்றாக உணர்கிறேன்.

என்னைப் போல அவரும் இருதய சத்திர சிகிச்சை மேற்கொண்டவர். அவருக்கு மூன்று இரத்த நாளங்கள் அடைத்திருந்தமையையும் பெரும் சத்திர சிகிச்சைக்கு உட்பட்டு மீள வேண்டியுள்ளமையையும் கவலையுடன் என்னிடம் போனில் அவர் கூறியபோது "எனக்கு ஆறு இரத்த நாளங்கள் அடைத்திருந்தன. என்னைப்பார் எப்படி இருக்கிறேன்" என்று என் அனுபவங்களை அவரிடம் பகிர்ந்து கொண்டேன் பின்னால் ஆராய்ச்சிப் பகிர்வுகளைப் போல இருதயம் பற்றிய, உடல் பற்றிய பயிற்சிகள் பற்றிய கதைகளும் எமது உரையாடலிற் பெருமளவு இடம் பிடித்துக் கொண்டன. எம்மை மேலும் அவை நெருக்கமாக்கின.

**விதை நெல்லு :**

விவசாயிக்குத்தான் விதை நெல்லின் பண்பும், பயனும் தெரியும். எந்த நெல்லை எடுப்பினும் விதை நெல் மீது யாரும் கை வைக்க மாட்டார். அந்த ஒரு நெல்லுக்குத்தான் ஆயிரக்கணக்கான நெல்மணிகளைத் தோற்றுவிக்கின்றது. எந்தச் சூழலிலும் விதை நெல்லைப் பேணிப் பாதுகாப்பதில் விவசாயி மிகக் கவனமாக இருப்பான். விதை நெல் தனக்குள் மண்ணின் சுவையையும், சத்தையும் கொண்டிருக்கும் மட்டக்களப்பின் விதை நெல்கள் சில பண்டிதர் செ. பூபாலபிள்ளை, சு. சரவணமுத்தன், சுவாமிவிபுலானந்தர், புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை, வித்துவான் F.X.C. நடராஜா, பண்டிதர் வி.சி. கந்தையா என ஒரு மரபிலும் பண்பாட்டின் பாதுகாவலர்களான பூசாரிமார் அண்ணாவிமார் மக்கள் கலைஞர்கள் என்ற இன்னெரு மரபிலும் அவ் விதை நெல்கள் எம்மிடம் இருந்தன! இருந்து கொண்டிருக்கிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக மயமாக்கமும், அந்நியமோகமும், ஆரியமயமாக்கமும் நமது பண்பாடுகளை மாற்றிக் கொண்டுவரும் இக்கால கட்டத்தில் நமது விதை நெல்களை நாம் பாதுகாக்க வேண்டும். மிகக் கவனமாகப் பாதுகாக்க வேண்டும்.

அத்தகைய விதை நெல்களும் ஒரு சிறப்பான விதை நெல்லாகும். மகேஸ்வரலிங்கம் படுவான்கரைப் பண்பாட்டின் மணத்தையும், குணத்தையும் பயனையும் தன்னளவில் முழுமையாகக் கொண்டிருந்த விதை நெல் அது. அதன் இழப்பு மிகப் பாரமானதுதான்.

அந்த விதை நெல்லின் விளைச்சலால் எம்பண்பாடும், பாரம்பரியமும் இளம் தலைமுறைக்குப் பல காலங்களாக உணர்த்தப்பட்டன. தொடர்ந்தும் உணர்த்தப்பட்டன. உணர்த்தும் குரல் இன்று ஓய்ந்துவிட்டது. அவரது இரங்கல் உரையில் ஒரு முதியவர் 'படுவான்கரையின் நாதம்' என மகேஸ்வரலிங்கத்தை உருவகம் செய்தார். அது மிகப் பொருத்தமான ஒரு சொற்றொடர் அந்த நாதம் இன்று ஓய்ந்துவிட்டதாயினும் அது எழுப்பிய நாத அதிர்வுகள் இன்னும் ஓயவில்லை இவ் அதிர்வுகள் நம்மையும் நம் இளம் தலைமுறைகளையும் விட்டு நீங்கிவிடாது பாதுகாத்தல் நம் அனைவரினதும் கடமையாகும்.

மகேஸ்வரலிங்கத்தின் பெயரால் ஓர் ஆய்வு நிறுவகம் நிறுவுதல் அவர் கருத்துகளை வளர்க்கும் விதத்தில் செயற்பட ஆப்பணிப்பும் அறிவும் மிகுந்த ஓர் குழுவை அமைத்தல் செயற்படல் என்பன நாம் மேற்கொள்ள வேண்டிய பணிகளாகும். இறப்பின் துயரங்களை மறக்க சிறந்த வழி மேலும் தீவிரமாக வாழ்தலே. மகேஸ்வரலிங்கத்திற்கு நாம் செய்யும் மரியாதை அவர் வழியில் மேலும் தீவிரமாக வாழ்வதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகேஸ்வரலிங்கம் அவர்களது மறைவு ஒரு பேரிழப்பு

- பேராசிரியர் மா. செல்வராஜா

மகேஸ்வரலிங்கம் அவர்களது மரணச் செய்தி அதிர்ச்சி தரும் ஒன்றாக இருந்தது. இவ்வளவு சீக்கிரமாக அவர் எம்மை விட்டுச் செல்வார் என நாம் எதிர்பார்த்ததில்லை. மட்டக்களப்பு வைத்தியசாலையில் அவர் சுகவீனமுற்றிருந்த வேளையில் அவரைக் கண்டு உரையாடியமையே எனது இறுதிச் சந்திப்பாகும்.

பழகுவதற்கு இனிய நண்பர் மகேஸ்வரலிங்கம் பல்கலைக்கழகத்தில் படிக்கும்போது எனது நண்பரானார். பட்டிப்பளைப் பிரதேசத்தின் முதலாவது பட்டதாரியான அவர் பேச்சாற்றலால் மக்களைக் கவர்ந்தார்.

ஒரு தனிமனிதனுக்குத் தன்னை மேம்படுத்தவும் உயர் கல்வியைப் பெறவும் கிடைக்கும் சந்தர்ப்பங்கள் அரிதாகவே கிடைக்கின்றன. அவர் பல்கலைக்கழகம் சென்ற காலம் அப்படிப்பட்டது வாய்ப்புக்கள் குறைந்தகாலம் இப்படிப்பட்ட சூழ்நிலையில் மகேஸ்வரலிங்கம் கல்லூரிக்கல்வி பெற்று பல்கலைக்கழகம் சென்றார்.

ஒரு மனிதன் தன்னை அறிவு ஆற்றல், சிந்தனை என்பனவற்றால் உயர்த்தி ஒரு புதிய ஆளாக மாற்றமுற்ற ஆளாக பல்கலைக்கழகத்தை விட்டுத் தனது சமூகத்திற்கு வருகை தந்தார். அவர் சமூகத்தை நோக்கினார், சமூக நிறுவனங்களை நோக்கினார். ஆலயங்களை நோக்கினார், கலை, பண்பாடு என்பனவற்றை நோக்கினார். தனக்கு ஒரு கடமை இருப்பதை உணர்ந்தார். செயற்படத் தொடங்கினார்.

தனது பல்கலைக்கழகக் கல்வி தனது சமூகத்திற்கும் பயன்பட வேண்டுமென்பதை குறியாகக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்படத் தொடங்கினார். ஏதோ ஒரு வகையில் ஒரு மாற்றத்தை, ஒரு மேம்பாட்டை ஏற்படுத்த அவர் வாழ்நாள் முழுவதும் பணியாற்றினார். ஆலய நிருவாக மாற்றங்கள், சனசமூக நிலையங்களின் மீள் ஒழுங்கமைப்பு, வரலாற்று ஆராய்ச்சி, கூத்து, கும்மி, மற்றும் திருவேட்டை நிகழ்வுகள் என்பன அவரால் மறுமலர்ச்சி கண்டன. அவரது கட்டுரைகள் நூல்கள் மறைந்த பல உண்மைகளை வெளிக்கொண்டு வந்தன. இதுவரை அவர் மக்கள் துன்பங்களையும், அவர்களுக்காகச் செய்ய வேண்டிய பணிகளையும் சிந்தித்த வண்ணமே இருந்தார்.

தனது நண்பர்களிடம் தனது ஆதங்கங்களை உணர்ச்சி பூர்வமாக்கி கூறி தான் செய்த பணிகளைத் தொடர வழியேற்படுத்துமாறு வேண்டுகோள் விடுத்தார்.

இன்று அவர் நம்மிடையே இல்லை. இன்று இறுதி அஞ்சலிக்காக நாம் இங்கு கூடியிருக்கின்றோம். அவருக்குச் செய்யக்கூடிய உண்மை அஞ்சலி யாது? அவர் தொடர்ந்து ஆற்றிய பணிகளை நாமும் தொடர்வது தான் உண்மை அஞ்சலியாக இருக்க முடியும். அவரது ஆக்கங்கள் தொடுக்கப்படல், குறைநிலையிலிட்ட ஆய்வுகள், எழுத்துக்கள் என்பனவற்றைப் பூரணப்பத்தி வெளியிடல் என்பனவாக அவ்வஞ்சலியைக் குறிப்பிடலாம். நண்பர் கலாநிதி யோகராசா அவர்கள் இது தொடர்பாகக் கூறிய கருத்தை நாம் முன்னெடுக்க வேண்டும். அன்னாரை இழந்து தவிக்கும் மனைவி, மக்கள், உற்றார், உறவினர் ஆகியோருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து, அமரர் மகேஸ்வரலிங்க அவர்களது ஆன்மா இறைவனது திருவடியில் சாந்தி பெறப் பிரார்த்தித்து இவ்விரங்கல் குறிப்பை நிறைவு செய்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகேஸ்வரலிங்கம் : மட்டக்களப்பு பிரதேச நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு முன்னோடி

*- கலாநிதி. செ. யோகராசா-*

ஈழத்திலே தமிழ்மக்கள் செறிந்து வாழ்கின்ற பிரதேசங்களாகத் திகழ்கின்ற மட்டக்களப்பிற்கும், மலை நாட்டிற்குமிடையில் முக்கியமானதொரு ஒற்றுமை நிலவுகின்றது. அதாவது, இரு பிரதேசங்களுமே தொன்மையான நாட்டார் வழக்காறுகளையும் பாரம்பரியமான பண்பாட்டின் வேர்களையும் கொண்டுள்ளன. எனினும், இவை பற்றிய ஆய்வுகள் மலைநாட்டில் நடைபெற்ற அளவிற்கு மட்டக்களப்பிலே நடைபெற்றிருப்பதாகக் கூறமுடியாதுள்ளது. கூத்துத் தவிர்ந்த ஏனைய துறைகளுள் மட்டக்களப்புப் பிரதேச ஆய்வுலகின் வளர்ச்சி ஆரம்ப நிலையிலேயே காணப்படுகின்றது. இத்தகைய ஆரோக்கியமற்ற சூழலில், மேலைத்தேய மானிடவியற் பேராசிரியர் மக்கில்ஸ்டோவ் என்பவரின் உதவியாளராக விளங்கிய மகேஸ்வரலிங்கம் அவர்களின் ஆய்வுலகப் பங்களிப்பு எத்தகையதென்ற முக்கியமானதொரு கேள்வி எழுகின்றது!

“நாட்டார் வழக்காற்றியல்” பல்வேறு பிரிவுகளை அடக்கியுள்ள, வளர்ந்து வருகின்ற ஒரு துறையாகும். இதனுள் நாட்டார்கலைகள் முக்கியமானதொரு பிரிவாகவுள்ளது. இந்நாட்டார் கலைகளுள், நுண்கலைகள் முக்கிய இடம்பெறுபவை இவ்விதத்தில் ‘மட்டக்களப்பு கோயில்களில் வளர்ந்த நுண்-கலைகள்’ பற்றி மகேஸ்வரலிங்கம் அவர்கள் அறிமுக நோக்கிலமைந்த ஆயினும் ஆழமானதொரு கட்டுரை எழுதியுள்ளமை முதற்கண் குறிப்பிடத்தக்கதாகின்றது.

‘மட்டக்களப்பின் பாரம்பரிய விளையாட்டுக்கள்’ பற்றிய பொதுவான கட்டுரையொன்றும் கொம்பு விளையாட்டுப் பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிவான கட்டுரையொன்றும் இவரால் எழுதப்பட்டுள்ளன. இறுதியாகக் கூறப்பட்டுள்ள கட்டுரை களஆய்வின் அடிப்படையா-கக் கொண்டும், புகைப்படங்கள், விளக்கமான வரை படங்கள், ஆகியவற்றைக் கொண்டும் அமைவதோடு, முன்னர் இதுபற்றி வீ.சீ. கந்தையா அவர்கள் செய்திருந்த ஆய்வினை விட பல விதங்களில் சிறந்து விளங்குகின்றது.

சடங்குகள் என்ற விதத்தில் நோக்கும்போது மட்டக்களப்பு பிரதேசத் திருமணச்சடங்கு பற்றி கிழக்குப் பல்கலைக்கழகம் சார்ந்த மொழித்துறை நடத்திய நாட்டார் வழக்காற்றியல் கருத்தரங்கிலே அன்னார் சமர்ப்பித்திருந்த ஆய்வுக்கட்டுரை முக்கியமானதொன்று மட்டக்களப்பு மரவுவழித் திருமணங்களிலே காணப்படுகின்ற தனித்துவத் தன்மைகள் பற்றி விரிவாக எடுத்துரைக்கப்படுவது மட்டுமன்றி, அத்தகைய திருமண மரபின் உருவாக்கத்திற்கான வரலாற்றுப் பின்புலம், திருமண மரபுகளிலே காணப்படும் சாகியச் செல்வாக்கு முதலான பலவிடயங்களும் அதில் பேசப்படுகின்றன.

மட்டக்களப்பு மக்களின் உணவுமுறை பற்றி அன்னார் நிகழ்த்திய ஆய்வொன்று இன்று அறியப்படாது போய்விட்ட பாரம்பரிய உணவு முறைகள் பற்றி நுணுக்கமாக விபரிப்பது கவனத்திற்குரியது. இவ்வாறே, மட்டக்களப்பு பிரதேசத்தின் பாரம்பரிய வீடுகட்டும் முறை பற்றிய ஆய்வுக்கட்டுரையும் பெறுமதி மிக்கது; பலராலும் பாராட்டப்பட்டது "தெம்மத்தன் கிணற்றடி அமுது" என்ற கட்டுரையும் இத்தகைய சிறப்பிற்குரியதே.

வரலாற்றுக் கட்டுரைகளுள், "கொக்கட்டிச்சோலை தான்தோன்றியீஸ்வரர் கோயில்'' பற்றியும் "மண்முனை தென்மேற்குப் பிரதேசம்'' பற்றியும் தாந்தாமலை பற்றியும் எழுதப்பட்டவை புதிய வரலாற்றுத் தகவல்கள் கொண்ட-மைந்திருப்பது மனங்கொள்ளத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகேஸ்வரலிங்கம் அவர்களது வெளிவந்த ஆய்வு முயற்சிகளுள் உச்சமாக அமைவதும் அன்னாருக்குப் புகழ்சேர்த்ததுமாக உள்ளது. பாரம்பரிய வழிபாட்டு முறை சார்ந்த மட்டக்களப்புப் பிரதேச சிறுதெய்வ வழிபாடு பற்றி (நூலுருப் பெற்ற) அன்னார் மேற்கொண்ட ஆய்வாகும்.

அதேவேளையில் மகேஸ்வரலிங்கம் அவர்கள் நீண்டகாலமாக மேற்கொண்டு வந்துள்ள மட்டக்களப்பு பிரதேச வீரசைவம் பற்றிய ஆய்வு நூலுருப் பெறுமாயின் அன்னாரது ஆய்வுலக முயற்சிகள் என்றென்றும் நினைவு கூரப்படுகின்ற நிலைமை உருவாகுமென்று கருதுவதிலே தவறில்லை!

இவ்வாறெல்லாம் சிந்திக்கும் போது மட்டக்களப்பு பிரதேச நாட்டார் வழக்காற்றியல் அவ்வழி மட்டக்களப்பு பிரதேசப் பண்பாட்டியல் ஆகிய துறைகளிலே ஆரம்ப தடங்களை - ஆழமான தடங்களை - பதித்துள்ள முன்னோடிகளுள் முதன்மையானவராக மகேஸ்வரலிங்கம் துலங்குகின்றார். என்பதில் கருத்து வேறுபாட்டிற்கு இடமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவில் நிறைந்த மகேசண்ணன்

நினைவு தெரிந்த நாளில் இருந்து அமரர் மகேஸ்வரலிங்கத்துடன் எனக்கு நீண்டகால நெருங்கிய நட்பு தொடர்ந்து இருந்தது எனக்கு ஒரு மூத்த சகோதராகவும், நெருங்கிய நண்பராகவும், ஆலோசகராகவும் அமரர் விளங்கினார். எங்களுக்கு ஏற்படும் தனிப்பட்ட பிரச்சனைகளை பரஸ்பரம் அளவளாவி மனச் சுமைகளை பகிர்ந்து கொள்வதற்கு நாங்கள் இருவரும் என்றுமே தவறியதில்லை.

இவர் தனது வாழ்வின் பல்வேறு பரிமாணங்களை நமக்கு வெளிக்காட்டியுள்ளார் சிறந்த குடும்பத்தலைவனாக, சமூக சேவையாளனாக சமூகத்தில் மறைந்து கிடந்த கலைகலாச்சார பாரம்பரிய விழுமியங்களை வெளிக்கொண்டு வந்த ஆய்வாளனாக, சிறந்த கல்வியாளானாக, சமயத் தொண்டனாக நான் அவரைக் காண்கிறேன்.

அருமை மனைவிக்கு அன்புக் கணவராகவும், நன்மக்களைப் பெற்றெடுத்து நல்ல ஒழுக்கத்தையும், கல்வியறிவையும் ஒருங்கே ஊட்டி வழிநடத்தி எதிர்கால சமூகவழிகாட்டிகளாக ஆக்கி தனது குடும்பப் பொறுப்புக்களை செவ்வனே நிறைவேற்றிய ஒரு குடும்பத் தலைவனாக நான் அவரைப் பார்க்கின்றேன்.

இயல்பாகவே பிரதேசத்தின் பால் அளவற்ற அபிமானத்தைப் பெற்ற மண்வாசனையுள்ள மைந்தனாக விளங்கிய மகேசண்ணன் அவர்களுக்கு கிடைத்த கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி அவரின் சமூகசேவைக்காக ஆண்டவனால் அளிக்கப்பட்ட ஒரு வரப்பிரசாதமாகும். இவர் இப்பதவியை கொண்டு செய்த செயற்பாடுகளால் இந்தப் பதவி இவரால் கௌரவம் பெற்றது என்று கூறுவது மிகையாகாது. எத்தரத்தி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னருடனும் அணுகி அவர்களை தன்பக்கம் கவர்வதில் அவருக்கு நிகர் அவரே. தாந்தாமலை, பச்சைக் கொடிச்சேனை, முதலிய தூர இடங்களில் உள்ள மக்கள் இவரின் சேவையை என்றும் மறக்க மாட்டார்கள்.

எங்கள் சமூகத்தில் சிறப்புற்று விளங்கி மறைந்து போன கலாச்சார விழுமியங்களை வெளிக்கொண்டுவருவதில் அவருக்கிருந்த ஈடுபாடு அவரை இத்துறையில் ஈடுபடவைத்தது. இந்த வலையில் அமெரிக்க நாட்டைச் சேர்ந்த டெனிஸ் என்ற ஆய்வாளரின் தமிழ் சமூக ஆய்வுக்கு இவர் உதவியாளராக நியமனம் பெறக் காரணமாக இருந்தது எமது பிந்திய சந்ததியினருக்கும், உலகிற்கும் வெளிக்கொண்டு வரவேண்டிய விடயங்கள் எம்மிடையே நிறைய இருக்கின்றன. என்பதை உணர்த்திய பெருமை இவரையே சாரும். தமிழரிடையே அவர்களின் வாழ்க்கையின் பல்வேறு பழக்கவழக்கங்கள் முதலிய சகல நிகழ்வுகளையும் இலங்கையின் சகல இடங்களிலும் வெளியிடப்பட்ட பல்வேறுபட்ட சஞ்சிகைகளில் ஆய்வுக்-கட்டுரைகளாக எழுதி வெளியிட்டார்.

பேராதனைப் பல்கலைக்கழக இளம்கலை மானிப் பட்டம் பெற்ற அமரர் மகேசண்ணன் அவர்கள் பல ஆய்வு மன்றங்களில் தமிழ், சமயம், கலாச்சாரம் சம்பந்தமான பல்வேறு ஆய்வுரைகளை நிகழ்த்தியுள்ளார். அறிவாற்றலும், வசீகரமான பேச்சாற்றலும் கொண்ட இவர் சபையோரை தன்பக்கம் ஈர்த்துக்கொள்வதில் வல்லமை பெற்றவராக திகழ்ந்தார். இவரின் ஆய்வுக்கட்டுரைகளும், சிறுதெய்வழிபாடு என்ற ஆய்வு நூலும் இவரின் அறிவாற்றலுக்கு நல்ல எடுத்துக்காட்டுகளாகும். இக்காரணத்தினாலேயே இலங்கை அரசாங்கத்தின் கலாச்சாரத் திணைக்களம் இவருக்கு கலாபூசணம் என்ற விருதை வழங்கிக் கௌரவித்தது. இருந்தபோதிலும் இவரின் வீரசைவம் என்ற ஆய்வு நூல் முற்றுப் பெறாத நிலையிலே இவர் எம்மை விட்டுப் பிரிந்துவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் இவர் மேற்கொண்ட சேவைகள் இவரின் சமயத்தொண்டிற்கு நல்ல எடுத்துக் காட்டுக்களாகும். இக்கோயிலின் நிர்வாகத்திலும் நடைமுறைகளிலும் இவரால் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் இக்கோயில் நிர்வாகத்தினர் இவர் மீது கொண்டிருந்த நம்பிக்கைக்கு நல்ல எடுத்துக்காட்டாகும். இவர் ஒரு சமயச் சொற்பொழிவாளராகவும், கோயில் உற்சவகால நேரடிவர்ணனையாளராகவும் சிறந்து விளங்கினார்.

அவரின் நிறைவுறாத ஆய்வுகளை நிறைவு செய்வது மட்டுமல்லாமல், அன்னாரின் ஆய்வுக்கட்டுரைகளை ஒரு நூலாகத் தொகுத்து வெளியிடுவது மட்டுமல்லாமல் அவர் தொடர்ந்த ஆய்வுகளை தொடர்ந்து மேலும் பல விடயங்களை வெளிக்கொண்டுவருவதே கல்விசமூகம் அன்னாருக்குச் செய்யக்கூடிய ஒரு கடமையாகும். மேலும் அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிராத்திப்பதுடன் அவரின் பிரிவினால் துயருறும் மனைவி, மக்கள், மருமகன், உற்றார் உறவினர் யாவருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி

**சு. சந்திரசேகரம்**
கல்லடி
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# END OF A BEAUTIFUL POEM

On the 19th of November 2007 (Monday) just after midnight I was in formed by Nakkeeran that Mahesa Mama has passed away! I asked him, Vaheesan and Vimal who were with him in Colombo, to be steady while I was shattering, lost my sleep with my eyes full of tear. Yes, I could n't control myself. We loved each other and I don't have any words to explain my deepest sorrow. Really, he is not only my uncle but also a good friend and a great adviser to our whole family.

All of us know that Amma loved him so much that she couldn't bear the loss of the remaining one end only brother. I called her early in the following morning and asked her to console the others at his residence, but both of us couldn't control our feelings.

I can not yet belive and accept the loss of such a talented man with all his artistic skills and knowledge! The whole society especially the "Western Shore" gave lost a wonderful speaker, efficient writer fantastic artist and an unmatchable social worker. Totally they have lost the "Voice of Paduwankarai" as my Appa mentioned in his vote of thanks at the end of the funeral oration. The orations addressed at the funeral and a lot of poems expressed in the condolences are the evidence for his untiring services to public.

Mahesa Mama had told me very recently (Last month) that none can explain all things in words, sentences or in essays, but we can express things only by poems that can carry feelings. I am realising your words only now and would like to relay it to you and to your life. "A BEAUTIFUL POEM". But still we are unable to accept the End of that Beautiful poem!

On behalf of all of our family members, I pray the God to "REST HIS SOUL IN PEACE"

Ohm Shanthi! Ohm Shanthi!! Ohm Shanthi!!!

Ever remembering
Beloved Nephew,
Baba
**(PASUPATHY PREMACHANDRAN)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் செய்தி

திருவாளர் மகேஸ்வரலிங்கம் அவர்கள் அமரத்துவம் அடைந்துவிட்டார் எனும் செய்தி வெறும் செய்தியாகவன்று அவர்சார்ந்த சமூகத்தின் குறிப்பாக மட்டக்களப்பு சமூகத்தின் பல்துறைசார் அறிஞனை இழந்துவிட்ட பிரக்ஞையைத்தான் என்னுள் தோற்றுவித்தது.

"மகிழை மகேசன்" எனும் பெயரில்தான் அவருடைய எழுத்தூடாக அவரை முதலில் அறியக்கிடைத்தது. பின்னர் தொழில் ரீதியான உறவுகள், நட்பு ரீதியான உறவுகள் அவருடன் ஒரு நெருக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

திரு. மகேஸ்வரலிங்கம் அவர்கள் தனது அர்ப்பணிப்பு மிக்க அரச கடமைக்குப்புறம்பாக தனது பன்முக ஆற்றல் காரணமாக பல்துறைகளிலும் தனது தடத்தை ஆழப்பதித்து அதனூடாக தன்னை நிலைநிறுத்திய ஒருவர்.

மட்டக்களப்பு பண்பாடு, கலை இலக்கியம், சமய ஆசாரங்கள் வரலாறு தொடர்பில் இவருக்கிருக்கின்ற ஆழமான ஈடுபாடு இவரை ஓர் ஆராய்ச்சியாளனாக இனங்காட்டியது. கவிஇலக்கியப்புலமை இவரை எழுத்தாளனாக, கவிஞனாக இனங்காட்டியது. நாவன்மை பேச்சாளனாக இனங்காட்டியது. பயிற்சி நெறிகளில் பயிற்றுவிப்பாளராக இவரது பணி விதந்து கூறத்தக்கது. தனது பல்வேறுபட்ட தொடர்பூடாக சமூக தேவைகள் குறித்து இவருக்கிருந்த கரிசனை விதந்து போற்றத்தக்கது. தன்னைநாடி வந்த அனைவருக்கும் இவரது உதவி உறுதிப்படுத்தப்பட்டதொன்றாக இருந்தது.

இவ்வாறு தனத திறமை மூலம் தமக்கென ஓர் அடையாளத்தை கொண்ட இவரது இழப்பு ஈடுசெய்ய முடியாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரிய தாக்கத்தை அவர் ஈடுபட்ட துறைகளிலே ஏற்படுத்தியிருப்பது துரதிஷ்டவசமானதொன்றாகவே கருத வேண்டும்.

இவ்வுலகில் மனிதனாக பிறப்பவர் அனைவரும் இறப்பதென்பது நியதி, இதற்கமைய அன்னார் எம்மைவிட்டு மறைந்தாலும் அவரது சிறப்புமிக்க குணவியல்புகள், சாதனைகள், சேவைகள், புகழ் சேர்த்த புகழுடம்பு மறைந்தும் மறையாமல் எம்முடன் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

பாசமிகு குடும்பத்தலைவனை இழந்து தவிக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரது ஆத்மா இறைவனுடன் இரண்டறக்கலக்க பிரார்த்திப்போமாக.

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்வார்**
**வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்."**

**கே. மகேசன்,**
(மேலதிக அரசாங்க அதிபர்),
கச்சேரி, மட்டக்களப்பு.
11.12.2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர்களுள் மாணிக்கமாகத் திகழ்ந்தவர் மகிழை மகேசன் அவர்கள். தனது பெயரால் தான் பிறந்த மண்ணை தேசத்துக்கு எடுத்துக் காட்டிய சிறந்த எழுத்தாளர், கலாசார விழுமியங்களை, பண்பாட்டுக் கோலங்களை பறை சாற்றியவர்.

படுவான்கரைப் பிரதேசத்தின் முதலாவது கலைப்-பட்டதாரியான மகிழை மகேசன் அவர்கள், தன் மனம் விரும்பியபடி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியை வகித்தார். குறிப்பாக பட்டிப்பளைப் பிரதேசத்தின் கிராமிய மக்கள்பற்றி அறிந்து, அவர்களை அன்புடன் அணுகி, பிரச்சனைகளை விளங்கி செயற்படக் கூடிய திறமை அவரிடமி-ருந்தது. அதுமட்டுமன்றி அந்த மக்களின் மனதில் தனக்கென ஒரு இடத்தைப் பெற்றிருந்ததால், தனது அரச கடமையையும் செவ்வனே செய்து முடிக்கக் கூடியவராகவும் இருந்தார். பணிபுரிந்த அலுவலகத்தில் கூட முரண்பாடுடையவர்களை அணுகி, அவர்களின் மனக்குறைகளை தனது இனிய சொல்லால் தீர்த்துவைத்து, சகல உத்தியோகத்தர்களையும் ஊழியர்களையும், ஒருமைப்பட்டு செயற்பட வைத்த பெருமை அவருக்கேயுரியது.

மண்முனை தென்மேற்கு பிரதேச கலாசார பேரவையின் செயலாளராக கடமையாற்றிய போது "கொம்புமுறி" எனும் பாரம்பரிய விளையாட்டு நிகழ்வை வெளிக்கொணர்வதில் முன்மாதிரியாக இருந்தார். கிராமியக் கலைகளை அழிந்து போகாது காப்பதில் பாரம்பரியக் கொள்கைவாதியாக இருந்தார். அதுமட்டுமன்றி, சிறந்த மேடைப் பேச்சாளராகவும் விளங்கிய மகிழை மகேசன் அவர்கள் பல பண்பாட்டு ஆய்வுகளிலும் ஈடுபட்டார். அதன் ஒரு வெளிப்பாடே "சிறுதெய்வ வழிபாடு" எனும் நூலின் வருகை. அந்த நூலின் மூலம் காலச்சுவடு பதித்தவர் மகிழை மகேசன் அவர்கள் எனக் கூறினால் அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகையாகாது. பல கலாசார ஆய்வாளர்களுக்கு சிறந்த வழிகாட்டியாகவும் திகழ்ந்த இவர் தனது குடும்பத்தில் நிகழும் விடயங்களையும் மட்டக்களப்புக் கலாசார வழக்குப்படி நடத்திக் காட்டிய துணிச்சல் மிக்கவர்.

சொல்லிலும் செயலிலும் ஒரே மாதிரியாக வாழ்ந்து காட்டிய இவரின் மறைவு எமது சமுதாயத்துக்கு ஈடுசெய்ய முடியாத ஒரு பேரிழப்பு. பண்பாட்டுப் பொக்கிஷமாக வாழ்ந்து மறைந்த அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கும்,

**க. சிவநாதன்,**
திட்டப்பணிப்பாளர்,
மாவட்ட புனர்வாழ்வு,
புனரமைப்பு செயலகம்,
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆற்றல் மிகுந்த சமூகக் காப்பாளன்

அமரத்துவம் அடைந்த கலாபூஷணம் மகிழை மகேசன் மகேஸ்வரலிங்கம் அவர்கள் மண்முனை தென்மேற்கு பிரதேசத்தின் முதல் பட்டதாரி. மிக நீண்ட நாட்களாக கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராகப் பணியாற்றி அனுபவ முதிர்வு பெற்ற பணியாளர். கிராமிய மட்டத் தாபனங்கள் ஊடாக சமூக வலுவூட்டத்தை பல்வேறு வழிகளிலும் ஏற்படுத்தியவர்.

சிறந்த நாவலர், மேடைப் பேச்சாளன், அரசியல் ஞானம் மிக்கவர். இவரது மேடைப் பேச்சுக்கள் பலரை நாடாளும் அளவு நலன்பெறச் செய்தமையை சமூகம் இன்றும் ஞாபகப்படுத்துவது குறிப்பிடத்தக்கதாகும். அனுபவ முதிர்வு கொண்ட அறிவாற்றாலும், வாசிக்கும் திறனுமே தனது கருத்தாளமும், வசிகரமும் மிக்க பேச்சுக்கு வலுவூட்டுவதாக இவர் அடிக்கடி கூறுவார்.

வீரசைவத்தை வாசித்துக் கரை கண்டவர். சிறு தெய்வ வழிபாடு, திருவேட்டைப்பாடல், பழம் பேச்சுத் தமிழ் முதலான இவரால் பதிப்பிக்கப்பட்ட நூல்களும், மட்டக்களப்பில் வீரசைவம், மட்டக்களப்புத் தமிழர் பண்பாடு, மட்டக்களப்பின் சடங்கும் சம்பிரதாயங்களும் முதலான பதிப்பிப்பதற்கு தயார்படுத்தப்பட்ட நூல்களும். காலத்திற்குக் காலம் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளிவந்த ஆக்கங்களும் இவரது எழுத்தாற்றலுக்கும், அறிவாற்றலுக்கும் சான்றாதாரங்களாகும்.

2003 அக்டோபர் முதலாம் நாள் சர்வதேச சிறுவர் மற்றும் வயோதிபரை கௌரவிக்கும் நிகழ்வில் திடீரென மேடையேறி இவரால் நடிக்கப்பட்ட நாட்டிய நடனம் இவரது கலையாற்றலின் செயற்திறனை தேடிப்பார்க்கத் தூண்டியது. மகிழை மகேசன் அவர்களிடம் காணப்பட்ட சிறந்த எழுத்தாற்றல், கவித்துவம், நாவன்மை, நடிப்பாற்றல் முதலான கலைத்துவங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது கலாபூசண விருதிற்கு என்னால் வழங்கப்பட்ட தகை சான்றாதாரங்களாக அமைந்துவிட்டன.

கலாச்சாரமும் பண்பாடும் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லப்படல் வேண்டும் என்பதில் அமரர் அவர்கள் கண்ணும் கருத்துமாகச் செயற்பட்டவர். கலாசாரமும், பண்பாடும் பொதிந்த கொம்புமுறி விளையாட்டை பல தலைமுறைக்குப் பின் நடைமுறைப்படுத்தி சாதனை புரிந்தவர். கொம்பு முறியின் கலாச்சாரப் பண்பாட்டு அம்சங்களை நெறி பிறழாது நீண்ட நாள் நிலைத்துநிற்கும் கொம்பு என்னும் நூலினூடாகவும், ஒலிஒளி நாடா ஊடாகவும் ஆவணப்படுத்தியதியதில் முக்கிய பங்காளி.

இளம் சமூகத்தை வளர்பதில் இறுதிவரை துடுப்பாக நின்று செயற்பட்டவர். அண்மையில் திருமதி கமலினி - சிவனாதன் அவர்களின் சிறு கதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழாவில் பேராசிரியர் மௌனகுரு, மாவட்ட அரசாங்க அதிபர் சு. அருமைநாயகம், வெளியீட்டாசிரியர் சி - கமலினி முதலானவரின் உரைகளே அவற்றிற்குச் சான்றாதாரம்.

அமரர் அவர்கள் அனுபவ முதிர்வு பெற்ற ஆலோசகர், வழிகாட்டி, போசகர், மூத்த பணியாளர், பண்பட்ட அரசியல்வாதி, சிறந்த எழுத்தாளன், நல்லதோர் கலைஞன், பொறுப்புணர்வு மிக்க குடும்பத் தலைவன் மட்டுமன்றி சமூகத்தின் வழிகாட்டலிற்கு துடுப்பாக நின்று செயற்பட்டவர்.

ஆற்றலில் முதிர்வு பெற்ற மகிழை - மகேசன் அவர்களது இழப்பு அன்னாரது குடும்பத்திற்கு மாத்திரமல்ல இப்பிரதேசத்திற்கே ஒரு பேரிழப்பாகும். அமரரது இழப்பினால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கும், சமூகத்திற்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

07.11.2007 **சி. அமலநாதன்**

பிரதேச செயலாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாருக்கு யார் சொந்தம்

மனித மேம்பாட்டுக்கே தேவையான நல்லொழுக்கமே ஆத்ம ஞானத்தின் வித்து. இந்த அரிய வித்தை திரு. மகிழை மகேசரிடம் கண்டேன்.

உறவுகள் மகிழ, ஊரான் மகிழ, நிலமது மகிழ, நீரும் மகிழ, கலைகள் மகிழ, காலமும் மகிழ, வாழ்ந்தவர் மகிழை மகேசன்.

நாம் அனைத்து முயற்சிகளிலும் திறமையும் வெளிப்படும் செயற்பட வேண்டுமென வாழ்ந்து காட்டியவர். அமரர் மகேசனார். முரண்பாடுகளால் ஏற்படும் பிளவும் குழப்பமும் இல்லாது, வெளியுலக பிரச்சினைகளைக் கண்டு சோர்வடையாத மனம் வேதாந்தவறிவுக்கு மட்டுமே பயன்படும் என்பதில்லை என்பதை நிரூபணம் செய்தவர் பெரியார் மகேசன்.

நமக்கு திறமைகள் இருக்கலாம். அவற்றை யாம் நன்கு பயன் படுத்தலாம். ஆனால் திறமைகளைத் தம்மைத் தாமாகவே வெளிப்படுத்திக் கொள்ளும்படி விட்டு விட வேண்டும். நம் திறமைகளைப்பற்றிய நமது சிந்தனை அழகு மிகுந்த மலர்ச்செடிகளைப் போன்றது. பூச்செடிகள் கிராமத்தில் இருக்கலாம். நகரத்தில் இருக்கலாம். வீட்டில் இருக்கலாம். நாட்டில் இருக்கலாம். காட்டில் இருக்கலாம். பலர் காணும் இடத்தில் இருக்கலாம். எவரும் காணாவிடத்திலும் இருக்கலாம். அவை எங்கிருந்தாலும் அழகான மலர்களைப் பூத்து வனப்பும் மணமும் அளிக்க மறப்பதில்லை என்பதற்கு மகிழை மகேசனாரின் வாழ்க்கை எடுத்துக்காட்டு எனலாம்.

மகேசன் ஐயா அவர்கள் என்னோடு பேசும் தருணங்களில் ஒரு சொல் அவரது உள்ளக் குமிறலாக இருந்தது. அதுதான் நேர்மை.

இந்த உலகு நேர்மைச்சக்தியை சாகடித்து விட்டது என்பார். ஆம் உண்மையில் நேர்மை இல்லாதவன் சின்னா-பின்னமான மனிதனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைத்தான் வேதம் ஆர்ஜவம் என்று மனிதனுக்கு போதிக்கிறது. ஆர்ஜவம் என்றால் ருஜுத்தன்மை ருஜு என்றால் நேராக இருப்பது. ஆர்ஜவம் என்பதை ஒரு பண்பாக எடுத்துக் கொள்ளும் போது, அது தர்மத்துக்கு ஒப்பாக நடத்தல் அல்லது நேர்மை என்று பொருள்படும்.

எண்ணம், சொல், செயல் இம்மூன்றையும் ஒரே நேர்வரிசையில் காண்பதே நேர்மை.

நேர்மை என்றால் சொல்லுவதுபோல் செய்ய வேண்டும். எண்ணுவதுபோல் சொல்ல வேண்டும், எண்ணுவது போல் செய்ய வேண்டும். இம்மூன்றின் இலக்கண வாழ்வை எமக்கு எடுத்துக் காட்டாக விளங்கியவர் ஈஸ்வர அடிப் பொடியாகிவிட்ட மகேஸ்வரலிங்கம்.

இவரது பிரிவு மட்டக்களப்பிற்கே ஈடுசெய்ய முடியாத இழப்பு எனலாம். நினையா வண்ணம் நிகழ்ந்த பிரிவு யாவரையுமே துயரத்தில் ஆழ்த்தி விட்டது. ஆனால் அவர் வாழ்க்கை நிலையாமை பற்றி உரையாடிய இருவருக்கும் இடையிலான கடற்கரை சங்கமம் பிறந்தநாள் கொண்டாட்டத்தோடு பிரிவையும் நினைவூட்டுகிறது.

மண்ணில் பிறந்தார் மண்ணுக்கே உரியவராவது தானே உண்மை. உலகத்திலுள்ள அனைத்துமே உண்மையற்றதென்பதே உண்மை.

பாம்பு காலத்திற்கு காலம் தன் சட்டையை கழற்றுவது போல் ஆத்மாவும் பிறவியெனும் சட்டையை வினைக்கேற்ப காலத்திற்கு காலம் மாற்றிக் கொள்கிறது. மாற்றம் எப்போ எங்கே எப்படி என்பதை எம்மால் அறிய முடியாததே விந்தை.

ஒப்பந்தத்தின் அடிப்படையில் வாழும் நிலம், வீடு அமைவது போல் நமக்கும் வாழ்வு அமைகிறது என்ற உண்மையை உணர்ந்து வாழ் வாங்கு வாழ்வதே மனிதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடையது என்னுடையது என நாம் எண்ணும் எப்பொருளும் எம்முடையதல்லவே. இந்த உடலும் அப்படித்தான். இவ்வுடலும் அப்படித்தான். உடல், மனம் இந்திரியங்களின் சேர்க்கை என்னைத் தவிர யாரும் சொந்தங் கொண்டாட முடியாது என நீங்கள் எண்ணலாம்.
அதையும் ஆராய்ந்து பார்த்தால்

எம்தாய் நான்தான் பெற்றேன் என் உதிரத்தில் இருந்து தோன்றியது இந்த உடல். ஆதலால் உன்னுடல் எனக்குச் சொந்தம் என்பாளே.

நானே இதற்கு நிமித்த காரணம். நானின்றி இவ்வுடல் ஏது? இதை போஷிப்பதற்கு வேண்டிய உணவையும், உடுக்க உடையையும் நான் தானே சம்பாதித்துக் கொடுத்தேன் ஆதலால் இது எனக்குத்தான் சொந்தம் என்று உங்கள் தகப்பனாரும் உடலுக்கு சொந்தம் கொண்டாடலாமல்லவா?

உங்களுடைய வாழ்க்கைத்துணை திருமணச்சடங்குகளால் அவர் உடலின் பாதி நானல்லவா? ஆகவே எனக்கே உடல் சொந்தம் என்கிறார். உங்கள் குழந்தைகளும் இவ்வுடல் எங்களுக்கு உழைக்கக் கடமைப்பட்டது. என்று கூறுவது கேட்கிறதா?

உறவும், சமூகமும் நாங்கள் எத்தனை பேர்கள் இந்த உடம்பு உயிருடன் இருப்பதற்காக பாடுபட்டோம். ஆகவே இதன் உரிமை எமக்கே என்னும் இதுமட்டோ?

தானியங்களும், காய்கறிகளும் நாமே இந்த உடலின் போசிப்புக்கு கர்தாக்கள். ஆதலால் உடல் எங்களுக்கே சொந்தம். என்னும் போது, உடலின் உள்ளே உள்ள பூச்சிகளும், புழுக்களும், கிருமிகளும் நாங்கள் தலைமுறை தலைமுறையாக குடித்தனம் நடத்துகிறோம். ஆதலால் இவ்வுடல் எம்வீடு எம்சொத்து என்கிறதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பூமியோ என்னிடமிருந்துதான் அனைத்தும் பிறக்கின்றன. இறந்தபின் என்னிடம் தானே வரவேண்டும். என்று சொந்தம் கொண்டாடுகிறது.

நெருப்போ பிறந்தது முதல் சூடாக புகந்தநான் இறந்ததும் எரிப்பவனல்லவா, ஆகவே எனக்கான சொந்தத்தை எவர் சொந்தம் கொண்டாடலாம் என்று கேட்டது இப்படிப் பல்வேறு மனிதர்கள் பலஜந்துக்கள் தான்யங்கள் செடிகொடிகள் ஐம்பூதங்கள் அனைத்தும் உடலுக்கு சொந்தம் கொண்டாடுகின்றன.

உடம்புக்கு மெய்யென்றும் பெயர் உண்டு. மெய் மெய்யில்லையே ஆனதால் மெய்யான இறைவனை அடையவே மெய்யற்ற மெய் கிடைத்தது. மெய்யுள் அமர்ந்துள்ள உயிர் உய்வுபெற வாழ்வை அர்ப்பணித்தலே நம் கடன் என் கடன் பணி செய்து கிடக்கவே மனிதம் ஆனோம்.

மனிதத்தை நேசித்த மாமனிதர் மகிழை மகேசனின் ஆத்மா ஈஸ்வர சாயுச்யம் பெற தான் தோன்றி ஈசனடி பணிகின்றேன்.

வாழ்க்கைப் பத்தாடி வாழ்வாங்கு வாழ்ந்துதன்
மூழ்த்த மொழி யறிவில் மேன்மையுற்றும்
மாழ்குதலற்ற மகிழை மகேசன்
தாழ்விலா தாள் தோன்றியான் தாள் சேர்ந்தான் - தேறு

**முத்தமிழரசு சிவயோகச்செல்வன்**

**த. சாம்பசிவம்**

(திருக்காரையூர் மஹா காளி கோவில் சிவாச்சாரி)
முதலைக்குடா, பாலையடி பிள்ளையார்
தேவஸ்தானம், பிரதமகுரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பே சிவம்

ஒரு பொருள் நமது கையிலிருக்கும் பொழுது அதன் பயன் எமக்குத் தெரிவதில்லை. அது நம் கையை விட்டகன்ற பின் தான் அதை நாம் உணர்கிறோம். அருமை மைத்துனர் திரு. மகேஸ்வரலிங்கம் அவர்கள் எம்மை விட்டு பிரிந்த பின்தான், அவர் எனக்கு இளையவராயிருப்பினும்; அவரிடத்தில் ஓர் மாணாக்கனாய் இருந்து அவர் கொண்டிருந்த கல்வியின், தமிழ்மொழிப்பற்று, சைவசமய அறிவு, இந்துமத வழிபாடு ஆகிய செல்வங்களில் கொஞ்சம் 'நாமும் பெற்றுக் கொள்ளவில்லையே', என இப்போ மனம் வாடுகிறேன்.

1964ல் நான் அவரது குடும்பத்தில் புகுந்தபின் அவரிடத்தில் நிறைந்து காணப்பட்ட உன்னதமான அறிவாற்றல்களைக் கண்டு, பல்கலைக்கழகம் சேர்ந்து தன் அறிவை விருத்தி செய்து பட்டதாரியவதற்குப் பெரிதும் உதவினேன் என்பதை இப்போது எண்ணும் போது நான் புழகாங்கிதமடையாமல் இருக்க முடியாது. 'அவருக்கு ஆசிரியப் பதவிதான் பொருத்தமானது", என நான் எண்ணிக்கொண்டிருந்த போது இறை ஆணைப்படி கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்த்தர் பதவி கிடைத்து தனது தந்தையார் பிறப்பிடமாகிய வெல்லா-வெளிக்கு நியமனம் பெற்றுச் சென்றார். பின்னர் படுவான்கரையின் சகல பிரதேச காரியாலயங்களிலும் கடமையாற்றி படுவான்கரை மக்களுக்குத் தேவையான ஜீவனோபாயங்களை பூரணமாகப் பெற்று வாழச் செய்தார். மகிழடித்தீவில் மக்கள் மத்தியில் வாழ்ந்து உடல் வேதனைகளையும் பொருட்படுத்தாமல் சமூகசேவை புரிந்துகொண்டேயிருந்தார்.

அவருடைய அறிவையும், ஆற்றலையும் மரணச்-சடங்கின் போது, திரு. பேராசிரியர் மௌனகுரு அவர்கள் கிழக்குப்பல்கலைக்கழக விரிவுரையாளர் போன்ற அறிஞர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துரைத்த போதுதான் என்னால் நன்கு உணரக்கூடியதாக இருந்தது. அன்று நான் உரைத்த சிறு நன்றியுரையில் கூறியது போல, மகேஸ்வரலிங்கம் சும்மா "மகிழை மகேசன்" என்றழைத்ததை விட பொதுவாக கிழக்கிலங்கை மக்களினதும், குறிப்பாக படுவான்கரை மக்களினதும், நாதம் என அழைப்பது சாலச்சிறப்பானது. "நாதம்" என்றால் "சத்தம்" "VOICE" என்பது பொருள். அவர் என்றென்றும் இளைஞர்களின் தோழனாகவே இருப்பார். இளைஞர்களின் தலைவனாகவேயிருந்து அவர்களோடு ஆடிப்பாடித் திரிவதை பலமுறை பல இடங்களில் கண்டேன்.

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீசுவரார்க்கு நாங்களும் அங்கு மடங்களில் தங்கி உற்சவ காலங்களில் தொண்டுகள் செய்து வணங்குவது வழக்கம்தான். என்றாலும் மகேஸ்வரலிங்கம் உணர்ச்சிவசப்பட்டு தன்னை மறந்து இளைஞர் தலைவனாய் ஆடிப்பாடி பிறருக்கும் உற்சாகமூட்டுவார் சிவன் எம்மை ஆக்குவார், காப்பார், அழிப்பார், அருள் தருவார் என்பது சைவ மொழி, சைவநெறி அவ்வாறே மகிழை மகேசனையும் ஆக்கிக்காத்து அழித்து விட்டார். ஆனால் அவர் மகேசனுக்கு செய்யப் போகும் அருள்தான் விஷேடமாக, புனிதமாக வைகுந்தம் சேர்த்து சிவன் தன் அடிக்கீழ் வைப்பதாக இருக்குமென்பதில் சற்றும் எனக்கு ஐயமில்லை என உறுதியாகவுள்ளேன். ஆண்டுதோறும் நாங்கள் அழுது புரண்டாலும், அவர் மனைவியும், நான்கு மக்களும், மருமகனும், அவரது சுற்றத்தாராகிய நாங்களும் அவர் விட்டுச் சென்ற இந்த அரும் பெரும் சமுதாயப் பணியை இங்கு வாழ் அறிஞர்கள் சைவப்பெரியார்கள் அனைவரும் செய்து நிறைவேற்ற நினைவூட்டிக் கொண்டேயிருப்போம்.... "**அன்பே சிவம்**" - "**எல்லாமவன் செயல்**"

**மச்சான் பசுபதி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அமரர் கதிராமப்போடி மகேஸ்வரலிங்கம்

# அவர்கள் ஒரு பலதுறை அறிஞராக.......

அமரர் கதிர்காமப்போடி மகேஸ்வரலிங்கம் (மகிழை மகேசன்) அவர்கள் பிறந்து வளர்ந்து அமரத்துவம் அடையும் வரை அவர் வாழ்ந்த சமுதாயத்துக்கு ஆற்றிய சேவைகளை கிராம அபிவிருத்தி, கல்வி, கலை, கலாசாரம் போன்ற துறைகளாக வகுத்து ஆராய்ந்து பெருமிதம் அடையலாம்.

அன்னார் பிறந்து வளர்ந்து படித்து இப்பிரதேசத்திநுடைய முதலாவது பல்கலைக்கழக பட்டதாரி என்னும் பெருமையைப் பெற்றவர்.

தனது புலமையின் காரணமாக படித்தவர்கள் மத்தியில் நன்மதிப்புடையவராக வாழ்ந்தார். சமயத்துறையிலே இவர் கொண்டிருந்த ஈடுபாடு காரணமாக மகிழடித்தீவு ஸ்ரீ சித்தி விநாயகர் கண்ணகை அம்மன் ஆலய பரிபாலன சபை தலைவராக பல வருடங்களாக சேவையாற்றியுள்ளார். கண்ணகை அம்மன் ஆலயத்தின் மகா மண்டபம் இவருடைய காலத்தில் கட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது. அதேபோன்று கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய பரிபாலன சபையின் கோப்பி குடி சார்பாக சில காலம் நிருவாக சபை உறுப்பினராக சேவை செய்துள்ளார். மேலும் இவரது சிறு தெய்வ வழிபாடு என்னும் நூல் இவரது சமய ஈடுபாட்டினை மேலும் வலுவூட்டுகின்றது.

கலாசாரத்துறையைப் பொறுத்தவரை கொம்பு விளையாட்டு, திருவேட்டை நிகழ்வுகள் என்பனவற்றில் கூடிய ஈடுபாடு கொண்டவராகவும் அதனை எதிர்கால சந்ததியினருக்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்பதிலே மிகவும் அக்கறையோடு ஈடுபட்டு வந்துள்ளார்.

கிராம அபிவிருத்தி வேலைகளிலே இவர் கூடியளவு ஈடுபடுவதற்கு இவரது தொழில் உறுதுணையாக இருந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல கிராமங்களிலே கிராம அபிவிருத்திச் சங்கங்களை புதிதாக உருவாக்கியதுடன் மங்கிப்போயிருந்த பல சங்கங்களை புனருத்தாரணம் செய்து அந்த சங்கங்களை செயற்றிறனுடைய சங்கங்களாக உருவாக்கினார். கிராம அபிவிருத்திச் சங்கங்களைப் பொறுத்த மட்டில் பட்டிப்பளைப் பிரதேசத்தில் செழிப்பு மிக்க ஒரு காலமாக இவரது காலம் இருந்துள்ளது.

மகிழடித்தீவுக் கிராமத்தில் கிராம அபிவிருத்திச் சங்க தலைவராக இருந்த காலத்தில் மகிழடித்திவு அரசடித்தீவு வீதியை புதிதாக அமைத்த பெருமை இவருக்குரியதாகும். அதே போன்று குளக்கட்டு வீதியும் இவரது முயற்சியினால் செய்து முடிக்கப்பட்டது.

கல்வித்துறையைப் பொறுத்தமட்டில் இப்பிரதேசத்தில் பல பாடசாலைகள் புதிதாக உருவாக வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தார். கற்சேனைப் பாடசாலை, விடுதிக்கல் பாடசாலை போன்ற பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு உறுதுணையாக இருந்து கல்விச் சமூகத்துக்கு தனது சேவையைச் செய்துள்ளார். பாடசாலைகளில் நடைபெறும் விழாக்களில் கலந்து கொண்டு ஆசிரியர் சமூகத்துக்கும் பல அறிவுரைகளை வழங்கியிருக்கிறார்.

குறிப்பாக மகிழடித்தீவு கிராமம் வெளியுலகில் கற்றவர்கள் மத்தியில் பிரபல்யம் அடைவதற்கு இவரது பங்களிப்பு மிகமுக்கியமானதாக இருந்துள்ளது. எமது பாரம்பரிய பண்பாட்டு வாழ்க்கை முறையினை எமது எதிர்கால சந்ததிக்கு அறிமுகப்படுத்திக் கொண்டிருக்கும் வேளையில் இவர் எமது மத்தியில் இல்லாமல் போனது எமது சமுதாயத்துக்கு பேரிழப்பேயாகும்.

சுபம்.

**திரு. பொ. நேசதுரை** (அதிபர்)
மட் / கொக்கட்டிச்சோலை R.K.M. வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆற்றலும் மனிதப் பண்பும் நிறைந்த ஆய்வாளன் மகிழை மகேசன்

மட்டக்களப்புக்குத் தெற்கே பழம் பெருமை கூறும் சிற்றூரான மகிழடித்திவில் அமரர்களான கதிர்காமப்போடி அழகம்மா தம்பதியினரின் கடைசிப் புதல்வனாக 23-09-1942 இல் பிறந்தார். ஆரம்பக் கல்வி கற்றது மகிழடித்தீவு. இடைநிலைக்கல்வி மட் / முதலைக்குடா ஸ்ரீ கோபால் மகா வித்தியாலயம். உயாதரம் மட் / சிவானந்தா வித்தியாலயம் ஆகியவற்றில் கற்றார். உயர் கல்விக்காக பேராதனைப் பல்கலைக் கழகம் சென்று தமிழ் வரலாறு பொருளியல் ஆகிய பாடங்களைக் கற்று கலைமானி பட்டம் பெற்றார். 1970ல் பட்டம் பெற்றும் 1976 வரையும் தொழிலற்ற பட்டதாரியாகக் கிராமிய சமூக பொருளாதார அபிவிருத்தியில் தன்னை அர்ப்பணித்துச் செயற்பட்டார். மண்முனை தென் மேற்குப் பிரதேசம் எமக்களித்த முதல் பட்டதாரி அவர்.

1976இல் மகிழடித்தீவைச் சேர்ந்த காலஞ்சென்ற சண்முகம் பொன்னம்மா தம்பதிகளின் புதல்வி குணவதியைத் திருமணம் செய்து முதலாவது குழந்தை பிறந்த பின்னரே தொழில் கிடைத்தது. முழுமையாக ஆறு வருடங்கள் அரச தொழிலற்று இருந்த போதுதான் இங்கிலாந்தில் பணிபுரிந்த அமெரிக்க நாட்டுச் சமூகவியல் பேராசிரியர் கலாநிதி டேனியல் மக்கல்விறே அவர்களின் நட்புக் கிடைத்தது. அவரின் ஆய்வு உதவியாளராக நீண்ட நாள் பணியாற்றினார். கிராமிய சமூக கலாசார அபிவிருத்திப் பணியிலும் ஆலயத் திருப்பணியிலும் தன்னை அர்ப்பணித்திருந்த அவருக்கு பேராசிரியர் அவர்களின் நட்பு அமரர் மகிழை மகேசன் அவர்களை ஆழமான ஆய்வாளராகவும், பல்துறை சார்ந்த எழுத்தாளனாகவும், தேன்தமிழில், ஆற்றொழுக்கு நடையில் பேசத்தக்க பேச்சாளனாகவும், மிளிரச் செய்தது. பேராசிரியரின் நட்பும் "தில்லை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனையும், மனையாளும், அவரின் வாழ்க்கையிலும் வாழ்க்கை முறையிலும், எழுத்துத்துறையிலும், ஆய்வுப் பணியிலும் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியது என்றால் மிகையாகாது.

பிறந்தோம், வாழ்ந்தோம், இறந்தோம் என்றில்லாது தன்னை வெளிப்படுத்த நிருபிக்க சாதனை புரியப் பிறந்தவராக வெளிக்காட்டினார். கல்வி, சமயம், இலக்கியம், வரலாறு, சமூகவியல், சமூக அபிவிருத்தி, பண்பாடு, நாட்டாரியல் ஆகிய துறைகளில் தடம் பதித்தார்.

வாழப் பிறந்தவன் மனிதன், பிறப்பும் இறப்பும் அவனுக்கு நிரந்தரமானது. வாழும் குறுகிய காலத்தில் சாதித்துவிடத் துடிப்பவனே மனிதனாவான். எத்தனை சோதனை வரினும் அத்தனையிலும் வெற்றி கொண்டு சாதனை புரிபவனே வாழும் மனிதனாகின்றான். நல்லது செய்ய வேண்டும். நிலைத்து நிற்க செய்ய வேண்டும். தான் வாழும் சமூகத்தின் நல்வாழ்வுக்கு இயன்றதை ஆற்ற வேண்டும். என நினைப்பவனே மனிதாபிமானி ஆகின்றான். அத்தகைய நினைப்பு உணர்வுடன் கலந்த உறவாக செயலுருப் பெற வேண்டும். அதுவே சமூகப் பெறுமானமும் ஆகின்றது. இத்தகு தன்மைகளைக் கொண்டு சொல், செயல், சிந்தனை மாறுபாடின்றி வாழ்ந்து மறைந்த பெருந்தகையே மகிழை மகேசனாவான்.

மண்முனை தென்மேற்கு போரதீவுப்பற்று ஆகிய இரு பிரதேச செயலாளர் பிரிவையும், மக்களையும் இரு கண்போல் நேசித்தவர். கிராமங்களை அறிந்தவர், வரலாறு தெரிந்தவர், பண்பானவர், இதமானவர், இனிமையானவர் சமூகத்தின் அடிமட்ட மக்களையும் உறவுகூறி நெருங்குவார். உறவுமுறை கூறி உறவாடுவார். மென்மை கலந்து உணர்வு பூர்வமாக உறவாடுவார். கலைகளையும், சடங்குகளையும், சம்பிரதாயங்களையும், வாழவைக்கும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டார். எடுத்த கருமத்தைத் திட்டமிட்டுச் செவ்வனே செய்து முடிப்பார். அர்ப்பணிப்புடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்படுவார். கருமம் நிறைவுறும்வரை ஓயமாட்டார். அவரின் செயல்கள் ஒவ்வொன்றும் எம்மைப் பிரமிக்கச் செய்யும் வண்ணம் அமைந்திருக்கும். எதனையும் ஆய்வுக் கண் கொண்டு நோக்குவார். சீர்தூக்கிப் பார்ப்பதில் வல்லவர்.

பக்கச்சார்பு, மனவெழுச்சி, மூடநம்பிக்கை என்பவற்றைத் தனது வாழ்கைகளில் அணுகவிடாது பாதுகாத்துக் கொண்டார். தனது கட்டுரைகளிலும் சொற்பொழிவுகளிலும் பல நூல்களின் தொகுப்பு சான்றாதாரமும் நிறைந்திருக்கும். சான்றாதாரம் இல்லாமல் எதனையும் கூறமாட்டார். அவருக்குள்ளே மனிதம் உறங்காது விழித்திருந்தது.

நீண்டகாலம் பார்வைக் குறைபாடு இருந்த போதிலும் செயல் வீரனாகச் செயற்பட்டார். நூல்களை மனையார் வாசிக்க மனதில் பதித்து மனதுள் குறிப்பெடுத்துக் கொள்வார். தில்லை இல்லம் அவரின் வாழ்வின் உயர்வுக்கு வழிகாட்டியது. நக்கீரன் பக்கபலமாய் இருந்தார். வாகீசன் உதவினார். குந்தவையும் ஆதிரையும் தொகுத்துக் கொடுத்தனர். தமிழையும் மரபையும் வரலாற்றையும் ஆழ நேசித்ததன் பலன் பிள்ளைகளின் நாமங்களாக வெளிப்பட்டன.

எச்செயலிலும் அறிவு, ஆற்றல், அனுபவம், அர்ப்பணிப்பு, ஈடுபாடு வெளிப்படும். எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது. 1978 ஆம் ஆண்டு மண்முனை தென்மேற்கு பலநோக்குக் கூட்டறவுச் சங்கம் நடாத்திய நாடகவிழாவிற்கு குழுத் தலைவராக இருந்து விழா நடாத்தி பிரதேசத்திற்குப் பேரும் புகழும் பெற்றுக் கொடுத்த சம்பவம். கிராமங்களுக்குப் பாதை அமைப்பதிலும் சங்கங்களைப் புனர்நிர்மாணம் செய்வதிலும் நடைமுறைகளைச் சீரமைப்பதிலும் தனது ஆற்றலை வெளிப்படுத்தினார்.

கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயம் மீது ஆழ்ந்த நம்பிக்கையும் ஈடுபாடும் கொண்டிருந்தார். அதன் நிர்மாணப் பணிகளிலும் சீரமைப்பதிலும் தன்னை வெளிப்படுத்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினார். தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலயம், ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயம், மகிழடித்தீவு கண்ணகி அம்மன் ஆலயம் ஆகியவற்றில் பரிபாலன சபையில் அமர்ந்திருந்து உபவிதிகளை உருவாக்குவதில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டார். ஆலயக் கூட்டங்களில் நின்று நிதானித்து ஆதாரங்களும் வரலாறு பேசுவார். கல்வெட்டுக்கள், ஏடுகள், செப்பேடுகள், சிற்பங்கள், கலைகள் ஆகியவற்றில் ஆழமான அறிவும், அனுபவமும் பெற்றிருந்தார். செவி வழி ஆதாரங்களும் பதிவுகளும் அவரிடம் பல இருந்ததை அவைகள் எழுத்துவடிவம் பெறும் முன்னரே அவரோடு மறைந்து விட்டன. அவை யாவும் தேடிப் பெற முடியாத அரும் பொக்கிசங்களாகும். அவரின் மறைவோடு பல ஆதாரங்களும், உண்மைகளும், அனுபவங்களும், சம்பவங்களும் மறைந்து போய் விட்டன. வெளிப்படுத்தப்பட வேண்டிய பல வரலாற்று ஆதாரங்கள் வெளிப்படுத்தப்படாமல் புதைந்துவிட்டன.

இன்று நான் மிகப் பெரிய வரலாற்று ஆய்வாளனை இழந்திருக்கிறேன். அறிவு, அனுபவம் ஆற்றல் நிறைந்த பேரறிவாளனைப் பிரிந்திருக்கின்றேன். பிரதேசத்தையும் மண்ணையும் மெய்யுணர்வோடு மதித்த மனிதத்தை இழந்திருக்கிறேன். அவரால் ஆக்கப்பட்ட படைப்புக்கள் பல வெளிவந்து பெருமையைச் சேர்த்தவை ஒரு புறமிருக்க வெளிவர வேண்டியவை, வெளிவராமல் விட்டவை என்பவற்றில் நூலுருவம் பெறப் பெருமுயற்சி எடுத்தேன். அவர் எடுத்த முயற்சிகளில் மிகப் பிரதானமானவை. இலங்கையில் வீர சைவம், ஏழு அத்தியாயம் கொண்டது. இந்த நூலை வெளிக்கொணர வைப்பதற்காகவும், அவர் வாழ வேண்டும் என்பதற்காகவும் எமது வாழ்வும், மரபுகளும், சம்பிரதாயங்களும், எமது இருப்பும் பேசப்பட வேண்டும் என்பதற்காகவும் பல நூல்களைச் சேகரித்துக் கொடுத்தேன். வீரசைவம் நூல் எழுதுவதற்காக மிக மிக அருமையான நூல்களான பிரபுலிங்கலீலை, வீர சைவம், இந்துமதம் ஆகியவற்றைச் சேகரித்துக் கொடுத்ததோடு பல நூல்களைப் புகைப்படப் பிரதி செய்து கொடுத்தேன். சில காலம் அவரின் ஆய்வுக்காகவே நூல்களை கொள்வனவு செய்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல நூல்களை நூலகங்களில் இருந்து சேகரித்துக் கொடுத்தேன். ஏனெனில் நான் எதிர்பார்க்கும் எமது மக்களின் எமது பிரதேசத்தின் ஸ்ரீ தான்தோன்றீஸ்வரரின் வரலாறு இவரால் எழுதப்பட வேண்டும், பேசப்பட வேண்டும் என்ற அவா என்னுள் மேலோங்கி நின்றதே காரணமாகும். அவரை நான் நோக்கும் அல்லது அணுகும் பரிமாணம் மிகப் பரந்தது. அவரை என்னுள் ஆகர்சித்தேன், நேசித்தேன். அவரால் பேசப்பட வேண்டிய வரலாற்றை தினம் தினம் எதிர்பார்த்திருந்தேன்.

நான் மதித்த, நேசித்த, உறவாடிய இரு ஆய்வாளர்களை இழந்திருக்கிறேன். ஒருவர் தராக்கி சிவராம், மற்றையவர் மகிழை மகேசன். இருவரும் வரலாறுடன் என்னோடு கலந்தவர்கள். என்னை ஆட்கொண்டவர்கள் அவர்களின் இழப்பு எமது இனத்திற்கு, மண்ணுக்கு, சமூகத்திற்குப் பேரிழப்பு ஆய்வாளனுக்கு வரையறை போடமுடியாது. ஆய்வாளன் தான் தனக்கு வரையறை போட வேண்டும். எதை எழுத வேண்டும், எதைச் சொல்ல வேண்டும், என்பதை அவரே தீர்மானிக்கின்றான். ஆய்வாளன் ஆக்கப்படுபவன். மற்றவரை ஆழ்பவன் இந்த நிலையில் பார்த்தால் இவர்களின் இழப்பு ஈடு செய்ய முடியாதவை.

அடுத்து வெளிவருவதற்கு அத்திவாரமிட்ட நூல்கள் மட்டக்களப்பு மக்களின் வாழ்வும், வழிபாடும், மட்டக்களப்பு மக்களின் சடங்குகளும், சம்பிரதாயங்களும். இந்நூல்கள் வெளிவந்திருந்தால் அவர் மேலும் பேசப்பட்டிருப்பார். விருதுகள் பல பெற்றிருப்பார். இவை எல்லாம் வெளிவருவதற்கு முன்னர் எம்மை விட்டு இறையடி சேர்ந்தது மிகவும் பேரிழப்பாகும்.

நான் அவரை நேசித்தற்கும், அவர் என்னை நேசித்தற்கும் இருவருக்குமுள்ளும் அசைக்க முடியாத பிணைப்பும் ஆழ்ந்த உறவாடலும் இருந்தது. ஆரம்பத்தில் அவர் என்னுள் நுழைந்து என்னை ஆகர்சித்தமைக்கு இரு கட்டுரைகள் காரணமாக அமைந்தன. வயல் சஞ்சிகையில் 1993 ஆம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டில் ஏப்ரல், செப்டெம்பர் மாதங்களில் வெளிவந்த நாதனை வில்லை கட்டுச் சடங்கு, தெம்மத்தன் கிணற்றடி அமுது ஆகிய கட்டுரைகள் அவரை என்னுள் இனங்காட்டின. மட்டுமல்லாது அவர் ஓர் ஆய்வாளன் தர்க்கவியலாளன் என்பதையும் வெளிப்படுத்தின. அதனைத் தொடர்ந்து அவருடைய கட்டுரைகள் ஒவ்வொன்றையும் வாசிக்க ஆரம்பித்தது மேலும் எழுதுவதற்கும் தூண்டினேன்.

அமரர் மகிழை - மகேசன் அவர்கள் பலவகைப் பரிமாணங்களில் தன்னை வெளிப்படுத்தினார். கட்டுரை, கவிதை, சிறுகதை, விமர்சனம், நாடகம், நாட்டாரியல், நாட்டுக்கூத்து, சமூகவியல், சொற்பொழிவு ஆகியவற்றில் தடம் பதித்து அவற்றில் நின்று நிலைத்திருந்தார். இன்று ஒளிக்கல்லூரியில் பாடப்படும் ஒளிக்கல்லூரிக்கீதம் மண்முனை தென்மேற்குப் பிரதேச கீதம் எனப் பல கவிதைகளை இயற்றி இருக்கின்றார்.

மகிழை மகேசன் அவர்களின் வாழ்வு கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயத்துடன் பின்னிப் பிணைந்திருந்தது. ஆலயத்தின் எந்த நிகழ்விலும் பங்கு கொள்வார். நெறிப்படுத்துவார். ஆர்வத்துடன் செயற்படுத்திக் காட்டுவார். ஆலயத் திருப்பணி கும்பாபிஷேகம் தேரோட்டம், திருவேட்டை ஆகிய நிகழ்வுகளில் அவரின் செயலூக்கம் வெளிக்காட்டப்படும். அது மாத்திரமல்ல பல கட்டுரைகளை தான்தோன்றீஸ்வரருக்கச் சமர்ப்பணமாக்கி இருக்கிறார். 1976 திருக்கேதிச்சரம் திருக்குடத் திருமஞ்சள் மலரில் ஒரு கட்டுரை, மட்டக்களப்பு மக்கள் வாழும் வாழ்க்கையும் மலரில் ஒரு கட்டுரையும், தேரோட்டம் சிறப்பு மலரில் பல கட்டுரைகளும் எழுதியிருக்கின்றார்

கிராமிய வரலாறு, சமூகச் சீர்திருத்தம், பண்பாடு பழக்கவழக்கம், ஆகியவற்றில் பல ஆக்கங்களை எழுதியுள்ளார். எனக்குத் தெரிந்தவரையில் ஐம்பதுக்கு மேற்பட்ட கட்டுரைகளை எழுதியுள்ளார். அவற்றுள் வெளிவராமல் பல கட்டுரைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் வெளிக்கொணரப்பட வேண்டும். வெளிவந்தவை தொகுத்து நூல்களாக்கப்பட வேண்டும்.

இந்த இடத்தில் இவர் தடம் பதித்து சாதனை புரிந்த பல நிகழ்வுகளும் சுட்டிக் காட்டப்படல் வேண்டும். மட்டக்களப்பு கலாசாரப் பேரவையில் 20 ஆண்டுகளும், பிரதேச கலசாரப் பேரவையில் 22 ஆண்டுகளும், மட்டக்களப்பு மாவட்ட சனசமூக நிலைய சம்மேளனத் தலைவராகப் பல ஆண்டுகளும் மண்முனை தென்மேற்கு அரசடித்தீவு பல்நோக்குக் கூட்டுறவுச்சங்க இயக்குனர் பதவியிலும் இருந்து பல கலை நிகழ்ச்சிகளையும் போட்டிகளையும், நாடக விழாக்களையும் நடாத்திப் பெரும் பாராட்டைப் பெற்றார். மட்டக்களப்பு கொம்பு விளையாட்டினை மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தில் திட்டமிட்டு நடாத்தி உயிருட்டியதோடு பாராட்டையும் பெற்றார். அது தொடர்பான கொம்பு என்ற நூலையும் மண்முனை தென்மேற்குக் கலாசாரப் பேரவையின் ஊடாக வெளியிட்டு வைத்தார். அதில் அவரின் ஆய்வுக் கட்டுரைகள் அடங்கி இருக்கின்றன.

தன்னை நாட்டுக்கும் இந்துக்களுக்கும் வெளிப்படுத்திய சாதனை ஒன்றும் உள்ளது. அதுதான மட்டக்களப்பு சிறு தெய்வ வழிபாடு. இந்நூல் வடக்கு கிழக்கு மாகாண சாகித்திய விருதையும், கலாசார அமைச்சின் கலாபூசணம் விருதையும் பெற்றுக் கொடுத்தது. அத்தோடு ஆளுனர் விருதுக்கும் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறார். பல மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்து புகழப்பட்டிருக்கின்றார்.

எமது இனமும் மக்களும் கண்டறிந்த ஆய்வாளனை, பேச்சாளனை இழந்திருக்கிறது. அறிவு, ஆற்றல், அனுபவம், புத்திசாதுரியம் நிறைந்த பேரறிஞனை இழந்திருக்கிறது. தமது பிரதேச மக்களை நேசித்து இறுதிவரை அப்பிரதேசத்திலே வாழ்ந்து அங்கேயே தொழிலாற்ற வேண்டுமென்று சங்கல்பம் கொண்டு இளைப்பாறும் வரைப் பணியாற்றிய சமூக நேயனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழந்திருக்கிறோம். அப்பிரதேசத்து மக்களோடு மக்களாகக் கலந்திருந்த கருணையாளனை இழந்திருக்கின்றோம். சமூக, சமய சீர்திருத்தவாதியை இழந்திருக்கின்றோம். எங்களுக்குள்ளே பிறந்து எம் உறவுகளோடு பேசிப் பழகி உறவாடி வாழ்ந்த ஒரு உத்தம சீலனை இழந்திருக்கின்றோம். சிறியோர் முதல் பெரியோர் வரை மதித்தவரை இழந்திருக்கிறோம். அன்பும், கருணையும் நிறைந்த மனித நேயனை இழநிதருக்கின்றோம். பல்கலைக்கழக ஆய்வு மாணவர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும் பொக்கிசமாக இருந்த ஒரு பேரறிவாளனை இழந்திருக்கிறோம்.

எமது முதுசங்கங்களை, வரலாற்று உண்மைகளை வெளிக்கொணர இருந்த மாபெரும் பொக்கிசத்தை இழந்திருக்கின்றோம். நேர்வழி என்று பக்கச்சார்பின்றி, கோடலுக்கு இடங்கொடாது ஆய்வு செய்த வரலாற்று ஆய்வாளனை இழந்திருக்கின்றோம். தான் சொல்ல வந்த கருத்து ஆணித்தரமாக உறுதியோடு தக்க சான்றாதாரங்களுடன், உண்மையுடன் வெளிப்படுத்திய ஆசானை இழந்திருக்கிறோம். தனிப்பட்ட உணர்வுகளுக்கோ, தனது சமூகத்தின் பக்கமோ சாந்திருந்து செயற்படாத நிதானமானவரை இழந்திருக்கிறோம்.

இவ்வாறு அவர் செய்த சாதனைகளும் முன்னெடுத்துச் சென்ற பணிகளும் காலத்தால் அழியாதவை. அவை ஒவ்வொன்றும் அழியாத நினைவுகளாய் சான்றுகளாய் எம்மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் சாதனை புரிந்த சாதனையாளன் அழிவதில்லை. சாதனைகள் அவனை வாழவைக்கும் என்பதற்கிணங்க பிறப்பின் பயனை அடைந்த அமரர் மகிழை மகேசன் எம்மத்தியில் என்றும் வாழ்ந்து கொண்டிருப்பார். அவர் விட்டுச் சென்ற பணிகளை நாம் முன்னெடுத்து அழியாத சாதனையாளனாக வாழ வைப்போம். அவர் எங்களை வழிப்படுத்துவார்.

**சின்னத்தம்பி குருபரன்**
முகாமையாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலஞ்சென்ற திரு. க. மகேஸ்வரலிங்கம்
அவர்களின் மறைவையொட்டி விடுக்கும்

# இரங்கல் அறிக்கை.

நான் பட்டிப்பளை, வெல்லாவெளி பிரதேசங்களின் உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய காலங்களில் காலஞ்சென்ற திரு. மகேஸ்வரலிங்கம் அவர்களுடன் நெருங்கிப் பழகிக் கடமையாற்றும் பாக்கியம் கிடைத்தது. அவர் ஒரு நல்ல நண்பனாக, ஒரு சிறந்த சகோதரனாக, ஒரு ஆற்றலுள்ள வழிகாட்டியாக எனக்கு விளங்கினார். அவருடைய சேர்க்கை படுவான்கரைப் பிரதேசத்தில் பல பணிகளை ஆற்ற எனக்கு உறுதுணையாகவும், உந்து சக்தியாகவும் விளங்கியது.

அவர் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் என்ற பதவியை வகித்தாலும், அவர் ஒருபோதும் அந்தப் பதவிக்குள் மட்டும் தனது சேவைகளை வரையறைப்படுத்தி, மட்டுப்படுத்தி வைத்திருக்கவில்லை. முழுப் படுவான்கரை மக்களினதும் ஒரு வழிகாட்டியாக, ஒரு சமூக சேவகனாக, ஓர் ஆசானாக, ஒரு மேய்ப்பனாக, ஒரு சமூக வலுவூட்டாளனாக அரிய பெரிய சேவைகளை மனம் கோணாது தனது வாழ்நாள் முழுவதும் ஆற்றிவந்த பெருமகன் அவர்.

பட்டிப்பளை, வெல்லாவெளி பிரதேச செயலகப் பிரிவுகளில் மூலை முடுக்கெல்லாம் சென்று சேவையாற்றிய பெருமகன் அவர். அப்பிரதேசங்களில் அவர் கால்படாத இடமே இல்லை என்று கூறுமளவுக்கு அவரது மக்கள் சேவை வியாபித்திருந்தது. அவர் தனது அறிவாற்றலாலும், பேச்சுத்திறமையாலும், எழுத்துவன்மையாலும், மொழித்திறனாலும் பாமரர் தொடக்கம் படித்தவர் வரை பெரும் செல்வாக்கையும், உயர் மதிப்பையும் பெற்றிருந்தார். அவரிடம் இயல்பாகவே காணப்பட்ட உயரிய மனிதப் பண்புகள் அவரைச் சமூகத்தால் மதிக்கத்தக்க ஒரு மாமனிதராக ஆக்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் தனது அர்ப்பணிப்புள்ள சேவைகளால், படுவான்கரை மக்களை, ஒரு விழிப்புணர்வுள்ள, ஒரு அறிவுள்ள, ஒரு பொருளாதாரவளமுள்ள, ஒரு தன்னிறைவுள்ள சமுதாயமாக மாற்ற அல்லும் பகலும் அயராது பாடுபட்டு உழைத்தார். இத்தகைய ஒரு மாமனிதரை இவ்வளவு விரைவாக இழப்போம். என எவருமே எதிர்பார்க்கவில்லை. அவரது இழப்பு அவரது குடும்பத்துக்கு மட்டுமல்ல, எல்லோரையுமே ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டது. படுவான்கரைப் பிரதேசம் தனது கலங்கரை விளக்கை இழந்து தவிக்கிறது, மட்டக்களப்பு தமிழ் மண் தன் தவப்புதல்வனை பறிகொடுத்து தவிக்கிறாள், ஆராய்ச்சியாளர்கள் தங்கள் அரிய பொக்கிசத்தைத் தொலைத்துவிட்டு நிலை குலைந்து நிற்கின்றனர்.

இருந்தபோதும், மகேஸ்வரலிங்கம் என்ற அந்த மாமனிதன் செய்த சேவைகள், ஆற்றிய பணிகள், அளித்த பொக்கிசங்கள் இந்த உலகம் உள்ளளவும் அவர் பெயரை உச்சரித்துக் கொண்டே இருக்கும். அவர் பூதவுடல் மறைந்தாலும், அவரது புகழுடம்பு என்றும் நிலைத்து நிற்கும் என்பது தெளிவு. அவர் படுவான்கரையில் ஏற்படுத்திய மறுமலர்ச்சித் தீ கொழுந்து விட்டெரிந்து அவரது புகழை என்னெற்றும் பாடிக் கொண்டே இருக்கும் என்பது உறுதி.

இந்நிலையில் அவரைப் பிரிந்து ஆறாத் துயரில் ஆழ்ந்திருக்கும் அவரது மனைவி, மக்கள், குடும்பத்தினர் எல்லோருக்கும் மன ஆறுதலையும், சாந்தியையும் அளிக்க வேண்டும் என எல்லாம் வல்ல ஆண்டவனை வேண்டுவதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி!!!

நன்றி.

***சி. சாமித்தம்பி***
32 / 2, கண்ணகியம்மன் கோயில் வீதி,
பூம்புகார்,
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரசில் வைத்துப் பூசித்த நம் அரச கவிதை

எந்தன் மைத்துன;
இந்திய மண்ணில் இருந்திட்ட வேளையதில்
உந்தனது செய்தியோ ரிடியாய் வந்ததையா!
ஓடிவந்துன் புதை குழியில் ஒரு பிடி மண்போட
நாதியற்றுப் போய்விட்டேன்;
நாக்குழறி என்ன பயன்?

வெல்லாவெளியின் வித்தெறி முத்தானாய்!
காலம் எழுதிவைத்த கவிதைத் தொகுப்பானாய்!
எல்லாப் புகழுக்கும் ஏற்றவனே போய்விட்டாய்!

கல்விக்கடல் நீ! கட்டுடைத்த கலைஞன் நீ!
நல்ல எழுத்தாளன் நீ! நாவுக்கோர் அரசன் நீ!
செந்தமிழ் வீதியெங்கும் சிந்தை குளிரவைத்த
மந்திரத்தென்றல் நீ! வாழ்வின் பெறும் பேறாய்
தான்தோன்றிலிங்கம் தாண்டவம் ஆடியருள்
மண்முனைத்தாய் பெற்றெடுத்த மகேஸ்வரலிங்கம் நீ!
அத்தனைக்கும் மேலாக தத்தெடுத்த மண்ணுக்கு
சத்தியமாய் தொண்டு செய்த சங்கத் தமிழன் நீ!
படுவான் கரையின் பட்டிதொட்டியெங்கும்
நடைபயின்று வந்த நாலாம் தமிழ்ச் சங்கம் நீ!

நெருப்பில் நனைந்திருந்தாய்! நீரில் கனன்றிருந்தாய்!
திருப்பம் நிகழ்த்தத் தெரிந்தவன் நீ ஆதலினால்
மனப்புயல்குமுறல் என வந்துற்ற வேளையிலும்
துவண்டு விழவில்லை நீ! தோற்றதுவுமில்லையே நீ!

உள்ளிருந்து காலன் உருக்குலைத்த போதுமுனை
எள்ளளவும் ஓயாது இயன்ற பணி முடித்து
வெற்றித்திருமகனாய் விண்ணுலகம் போய்விட்டாய்!
வையத்தில் உன்வாழ்வு வரலாறாய் ஆனதனால்
தெய்வத்துள் நீயிருப்பாய்! தினம்தினம் உன் பேரிருக்கும்!

நினைவுகளோடு
- வெல்லவூர்க் கோபால் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுமை மிக்க அறிவுப் பெருந்தகை

# அமரர் க. மகேஸ்வரலிங்கம்.

மட்டக்களப்பு மாநிலத்தின் வளம் செழிக்கும் படுவான்கரைப் பெருநிலத்தில் மகிழடித்திவிலே பிறந்து மண்ணுக்குப் பெருமை சேர்த்தவர்தான் "மகிழைமகேசன்" என அழைக்கப்பட்ட அமரர் மகேஸ்வரலிங்கம் அவர்கள். இவர் சிறந்த பேச்சாளனாக. கவிஞராக, ஆய்வாளராக, நூலாசிரியராக, இலக்கிய கர்த்தாவாக சமயத் தொண்டராக, சமூக சேவையாளனாக தம் வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர். வரலாற்றுப் புகழ் மிக்க தான்தோன்றீஸ்வரர் ஆலயத்துடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தவர்.

அமரர் மகேஸ்வரலிங்கம் அவர்களுடைய சிந்தனைக்கேற்ப மக்கள் சேவைக்குரியதான கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியும் வந்து வாய்த்தது இறைவனது திருவருள் எனவே கருதவேண்டும். செம்மையான வாழ்க்கை அமைவதற்கு, குணவதி என்னும் அன்பு மனையாளும், நக்கீரன், குந்தவை. வாகீசன், ஆதிரை ஆகிய நான்கு பிள்ளைச் செல்வங்களும் வாய்த்தது. பெரும்பேறு என்றே கூறலாம். மட்டக்களப்பு மாநிலத்திற்கே சிறப்பான பாரம்பரியக் கலைகளான கொம்பு, முறிப்பு, வசந்தன், கூத்து, குளிர்த்திப்பாடல், அம்மன் காவியம், குரவை ஆகிய கலைகளுடன் பரிட்சியம் உடையவனாக விளங்கினார். கொம்புமுறிப்பு கலையாடல் பற்றி மக்கள் நன்கு தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக அதனைச் செயற்படுத்திக் காட்டுவதற்குப் பெருவிழாவொன்றினை ஏற்பாடு செய்தவர். கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் உற்சவத் தேரோட்டப் பெருவிழாவின் திருவேட்டையின் போது தமது திறமையினை வெளிக்காட்டி நிற்பவர். அமரர் மகேஸ்வரலிங்கம் என்றால் மிகையாகாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது பண்பாட்டுப் பாரம்பரியங்களைப் பேணிப்-பாதுகாப்பதில் தீவிரமாக ஈடுபட்டவர். கொம்பு விளையாட்டு, குளிர்த்திப்பாடல் பற்றியெல்லாம் ஆய்வுக்கட்டுரைகளை எழுதியவர். கிராமங்களில் மண்டிக் கிடக்கும் தகவல்களையும், கலாசார விழுமியங்களையும் வெளிக்கொணர்ந்தவர் ஆக்கங்களை சொற்பொழிவுரைகளாகவும், ஆய்வுக்கட்டுரைகளாகவும், அழகிய கவிதைகளாகவும் வெளியிட்டு வந்தவர். கலாசார நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டு நடத்துவதில் திறமைமிக்கவர். மட்டக்களப்பு மாவட்டக் கலாசாரப் பேரவையில் இருபது ஆண்டுகளுக்கு மேலாக உறுப்பினராகவிருந்து கலை இலக்கியப் பணிக்கு உதவியவர்.

"மட்டக்களப்பின் சமய பண்பாட்டுப் பாரம்பரியத்தில் ஊறி, மட்டக்களப்பு சிறுதெய்வ வழிபாடு ஓர் அறிமுகம் "என்னும் நூலை எழுதியவர். இந்நூலிற்காக வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றவர். இந்நூலுக்கான முன்னுரையை வழங்கிய பேராசிரியர் சி. மௌனகுரு அவர்கள் அமரர். மகேஸ்வரலிங்கம் பற்றிக் குறிப்பிடும்பொழுது, "இவர் ஒரு நடமாடும் தகவல் களஞ்சியம்' என்றும். அர்ப்பணிப்பு மிக்க சமூக சேவையாளனாகவும், மண்ணோடு தன்னைப் பிணைத்துக் கொண்ட "மண்சுமந்த மேனியர்" என்றும் குறிப்பிட்டுள்ளார். இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய வடக்குகிழக்கு கல்வி அமைச்சின் செயலாளர். கா. தியாகராசா அவர்கள், நூலாசிரியர் பற்றிக் கூறும்போது பலருக்குத் தெரிந்திராத பல விபரங்களைக் குறிப்பிட்டுள்ளதாகவும் வழிபாட்டு முறை பற்றிய பகுப்பாய்வு நன்கு காட்டப்பட்டுள்-ளதாகவும் கூறியுள்ளார்.

அமரர் மகேஸ்வரலிங்கம் அவர்கள் இலக்கிய கலாநிதி மகாவித்துவான் F.X.E நடராசா அவர்களால் தொகுக்கப்பட்ட 'மட்டக்களப்பு மக்கள் வளமும் வாழ்க்கையும்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் நூலில் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம் என்னும் ஆய்வுக் கட்டுரையினை எழுதியுள்ளார். பேராதனைப் பல்கலைக்கழக கலைப்பட்டதாரியான அமரர் அவர்கள் பிரபல மானிடவியல் ஆய்வாளரான திரு. டெனிஸ் மைக்கில்வ்ரே அவர்களுக்கு உதவியாளராக சில காலம் பணிபுரிந்தவர். திரு. மைக்கில்வ்ரே இவர் பற்றிக் கூறும்போது புத்திக் கூர்மை, தகவல்தேட்டம், நம்பிக்கை, ஆய்வுத்திறன், உழைப்புக்கரிசனை, உள்ளவரெனக் குறிப்பிட்டுள்ளார். சமயப்பற்று மிகுந்த அமரர் அவர்கள் 'வீரசைவம்' பற்றிய பல தகவல்களை ஆய்வு நோக்கில் சேகரித்து நூலுருவாக்கும் முயற்சிகளைத் தமது நோய்வாய்ப்பட்ட காலத்திலும் மேற்கொண்டு வந்தார். அரசினால் அகில இலங்கைச் சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்ட இவருக்கு அரச சாகித்திய விழாவின்போது "கலாபூஷணம்" விருதும் வழங்கப்பட்டது. அடக்கத்தோடு தனது பணிகளை முன்னெடுத்துச் சென்ற இவரைக் காலன் பறித்துக்கொண்டமை கலை இலக்கியத் துறைக்கு மட்டுமல்லாது தமிழ் உலகிற்கே பேரிழப்பாகும். அன்னாரை இழந்து நிற்கும் பாசமிகு குடும்பத்தவர்க்கும், சுற்றத்தவர்க்கும், நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டி நிற்கிறோம்.

**எஸ். எதிர்மன்னசிங்கம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதர்களுள் மாணிக்கம் மகேஸ்வரலிங்கம் அவர்கள்

"இறந்தார் இறந்தாரனையார் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை"

அமரத்துவமடைந்த கலாபூஷணம் கதிராமப்போடி மகேஸ்வரலிங்கம் அவர்கள் காலமெல்லாம் எம்நெஞ்சங்களில் வாழ்பவர் வாழ்ந்து காட்டியவர் கிராமசேவைக்காய் வாழ்நாள் முழுதும் தன்னை அர்பணித்து தீரமாய்ச் செயற்பட்டு திறமையை வெளிக்கொணர்ந்தவர், எல்லோரிடத்திலும் பரிபக்குவமாகப் பழகி பாழ்பட்ட நெஞ்சங்களையும் செழிக்க வைத்த பண்பாளன் மகிழை மகேசன் என்ற பெயருடன் வாழ்ந்தார்.

மக்களைத் தட்டியெழுப்புவதற்காக பேசிப் பேசியே பெயர் பெற்றவர். எதிரியையும் இயல்பாகவே அரவணைத்து புத்திகூறி தன்வழி கொணர்ந்த புத்திசாலி சமயச் சொற்பொழிவு செய்யும் போது பல புதியவிடயங்களை திடுக்கிடும்படி முன்வைத்தவர். யாரிடம் எவ்வாறு பழகவேண்டுமோ அவரிடம் அவ்வாறே பழகி மனங் கொள்ளும் ஆற்றல் கொண்டு தேவை உணர்ந்து சேவை செய்தவர்.

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய நிருவாக சபையில் உறுப்பினராக இருந்து புத்துணர்ச்சி ஊட்டியவர் திருவேட்டைத் திருவிழாவையும், கொம்புமுறி விளையாட்டை பரிச்சயமாகச் செய்து வெற்றி கண்டார். வீரசைவ முறைமையை நடைமுறைக்கு சாத்தியமான முறையில் உரையாடிய இவர் பழமைக்கும், புதுமைக்கும் இடையே புதியபாலம் அமைத்தவர். இவரது சிறுதெய்வ வழிபாடு எனும் புத்தகம் அவருடைய தேடலுக்கு தக்க சான்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமியக் கலைகளில் அதிக அக்கறை கொண்ட இவர் அக்கலைகள் பற்றிய கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளார். கிராம வரலாறுகள் அன்னாருக்கு இயல்பாகவே தெரிந்த விடயமாகும். நாவிதர்களுடன் தொடர்புகொண்டு அவர்களது பறையடி சம்பந்தமாகவும் ஆய்வு ஒன்றை மேற்கொண்டவர்.

கிராமத்திலே பிறந்து அங்கே வளர்ந்து சேவையும் செய்து அந்த மண்ணிலே அடக்கம் செய்யப்பட்ட அன்னார் என்றும் நம்மனதிலே வாழ்ந்து கொண்டிருப்பவர். அன்னாரின் ஆத்மா இறைவனது திருவடிகளைச் சேரவேண்டுமென எல்லாம்வல்ல ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி... சாந்தி... சாந்தி

**திரு. இ. சாந்தலிங்கம்** (சமாதானநீதவான்)
வண்ணக்கரும், செயலாளரும்,
ஸ்ரீ தான்தோன்றீஸ்வர ஆலய நிருவாகசபை,
கொக்கட்டிச்சோலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலி உரை

கிராமியப் பேராசான்

## மகிழை மகேசன்

*(அன்பு மணி)*

தாம் பிறந்த மண்ணின் பெருமையை உணராது, அந்நிய நாகரீகத்தில் மூழ்கி, தமது சுயத்தை தொலைத்துவிடும் ஆயிரக்கணக்கான இளைஞர்களின் மத்தியில் பெற்றதாயும், பிறந்த பொன்னாடும், நற்றவ வானினும் நனி சிறந்தனவே'' என்ற பொன்மொழிக்கேற்ப. அமரர் மகேஸ்வரலிங்கம் படுவான்-கரைப் பிரதேசத்தின், தனிச் சிறப்புக்களை வெளிக்கொணர்வதில் அரும்பாடு பட்டார்.

அவரது பேச்சும், மூச்சும் கிராமிய வாழ்வியலாக அமைந்திருந்தது. கிராமிய வாழ்வியல் தொடர்பாக அவர் பல்வேறு ஆய்வுக் கட்டுரைகளை எழுதினார். அவை பல்வேறு சிறப்பு மலர்களில் இடம் பெற்றன.

சிறந்த பேச்சாளரான இவர், அழகு தமிழில் அளந்து பேசுவார். எந்தப் பொருளை எடுத்துக் கொண்டாலும் கேட்போரைக் கட்டிப்போடும் அளவு இனிய, தமிழில் அழகுற அவர் பேசுவார். அவ்வாறே ஆய்வுக்கட்டுரைகளையும் இனிய தமிழில் எழுதுவார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற பல்வேறு இலக்கிய மேடைகளில் அவருக்கென ஒரு தனிஇடம் இருந்தது. அவர் எழுதிய "கிராமியத் தெய்வங்கள்'' என்ற ஆய்வு நூல் வடக்குக்கிழக்கு மாகாண சபையின் சாகித்தியப் போட்டியில் பரிசு பெற்றது. நூலுருப் பெறாத ஏராளமான ஆய்வுக் கட்டுரைகள் உள்ளன. அவற்றைத் தொகுத்து நூலாக வெளியிடுவது அவருக்கு ஒரு சிறந்த நினைவுச் சின்னமாக அமையும். வாழ்நாள் முழுவதும் கிராமியக் கலைகளின் ஆய்வுக்கெனத் தன்னை அர்ப்பணித்த மகிழைமகேசன் இன்றைய இளைஞர்களுக்கு ஒரு ஆதர்சமாகிறார். இவரது ஆய்வுக் கட்டுரைகளை பல்கலைக்கழக மட்டத்தில் ஆய்வு செய்தல் தகும்.

இரா. நாகலிங்கம்

**(அன்புமணி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வுக்கு இலக்கணம் அமரர். மகிழை மகேசன் அவர்கள்தான்.

*“தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார்*
*தோன்றலின் தோன்றாமை நன்று”*

எனும் குறளுக்கு பெருமை சேர்த்தாற் போல் வாழ்ந்த அமரர். கதிராமப்போடி - மகேஸ்வரலிங்கம் அவர்கள் போற்றத்தக்க பெருமகனார்.

அழகு மகிழடித்தீவில் மிகவும் கௌரவமான குடும்பத்தின் புதல்வர்களுள் ஒருவரான இவர் படிப்போடு பிரதேசத்திலும் ஒருங்கே அறிந்து வளர்ந்து வழிகாட்டி அரவணைத்து ஆறுதல் சொல்லும் உன்னதம் வேறு யாரிடமும் காணமுடியாத மிக உயர்ந்த பண்பாக, ஆற்றலாக, அதிசயமாக இருந்ததை அனைவரும் அறிவர்.

இந்தப் பிரதேசத்திலே ஏன்? இந்த மாவட்டத்திலே ஒரு பிரசித்தி பெற்ற பேச்சாளராக சமய கிரியை நடைமுறைகளில் தேர்ச்சியுள்ளவராக பண்பாடு கலை, கலாசாரம் என்பவற்றில் தெளிவு கொண்டவராக அபிவிருத்தி நோக்கில் புதிய குடியேற்றக் கிராமங்கள், புதிய பாடசாலைகள் அமைத்தல், மீள்குடியேற்ற, தமிழ் மொழியில் பேர்புகழ் என்று அவரது பார்வை தூரநோக்குடையதாக இருந்தது என்பது மிகையாகாது.

பழமை பேணும் பண்போடு புதுமையையும் ஏற்றுக்கொண்ட ஒரு புனிதராக விளங்கும் இவர் கொம்புமுறி, விளையாட்டு, சிறுதெய்வவழிபாடு, வீர சைவம், வாழ்த்துப் பாடல்கள், பிரதேசசபை, பிரதேச செயலக கீதங்களிலும் முன்னின்று செயற்பட்ட வெற்றிக்குழைத்த பெருமகனாக என்றும் எம்மவரால் மதிக்கப்படுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் கலை கலாச்சாரத்தோடு தொடர்பான கும்மி, கரகம், கோலாட்டம், நாட்டுக்கூத்து, வீடுகுடி புகுதல், திருமணச்-சடங்குகள், ஏன்? தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் கஞ்சிமுட்டி கூறுதல் எதிலும் கட்டிக்காக்கும் காவலனாக தனித்தும் ஒருமித்தும் உழைத்த உன்னதம் போற்றத்தக்கது.

கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக ஓய்வு பெற்றபின் அமுதசுரபி, சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனம் என்பவற்றுக்கு வழிகாட்டல்களை மேற்கொண்டு வரும்வேளையில் அந்த உயர் மனிதர் எம்மைவிட்டு பிரிந்துவிட்டார்.

அவர் வாழ்வு ஓர் அகராதி பலருக்கு வழிகாட்டும் என்பதில் ஐயமில்லை.

**திரு. சு. தேவராஜன்** (அதிபர்)
மட் / விடுதிக்கல் அ.த.க. பாடசாலை
முன்னாள் உதவி தவிசாளர் (ம.தெ.மே. பிரதேசசபை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்திப்பதை நிறுத்தி விட்ட சிம்மக் குரலோன்

சிம்மக் குரோலன் சிரித்த முகமுடையோன்
செயலாற்றும் புறப்பட்டுச் சொற்பணம் கண்டோன்
சமயம் கண்டு சரித்திரம் படைத்தோன்
சமாதான நீதவானாய் சகலகலையும் உடையோன்

படுவான் கரையின் துடுப்பாக இருந்தோன்
பண்பாடு உரைப்பதில் பகலவனாய் நின்றோன்
புண்பட்டு நின்றாரையும் பண்பட வைத்தோன்
புயலால் அடித்து கொள்கையை உரைத்தோன்

ஆராய்ச்சி வழியிலே பேராய்ச்சி செய்தோன்
ஊராய்ச்சி மன்றங்களை உருவாக்கி செயற்பட்டோன்
ஆர் டி ஓ பதவியால் அனைவரையும் கவர்ந்தோன்
பார் போற்ற நின்று வீரசைவம் ஆராய்ந்தோன்

கொம்பு விளையாட்டில் கொள்கை காட்டியோன்
கொடிய செயலற கொடியும் பிடித் தோன்
கண்ணியமாய் குடும்பத்தைக் கட்டிக் காத்தோன்
கடவுளின் அடியவனாய் காலமெல்லாம் வாழ்வோன்

வேட்டைத் திருவிழாவை விழாமல் புணரமைத்தோன்
தோட்டமுடன் நின்று தேரோட்டம் சிறப்பித்தோன்
வாட்ட மின்றி எப்போதும் வந்தோரை வரவேற்றோன்
கூட்டம் சேர்த்து குவலயத்தை நிறைந்திட்டோன்

அன்புக்குப் பாத்திரமாய் அறிவுரை பகர்ந்தோன்
துன்பங்களைத் துரத்தி துடுப்பெடுத்து ஆடியோன்
சிறுதெய்வ வழிபாட்டை புத்தகமாய் ஆக்கியோன்
சிந்திப்பதை நிறுத்திவிட்ட சிம்மக் குரலுடையோன்

**முருகு. தயாநிதி** (M.A. ஆசிரியர்)
அம்பிளாந்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் மனதில் மகேஸ் ஐயா

உங்கள் மறைவுகேட்டு திகைத்து நின்றேன்.... என் வாழ்வுக்கு வேண்டிய அறிவுரைகளையும், ஆசிகளையும், கூறி எனக்கு வழிகாட்டும் குருவாகவும் வேண்டியவற்றை நிறைவேற்றும் தந்தையாகவும் மனம்விட்டு பேசிமகிழ ஒரு நண்பனாகவும் இருந்த உங்கள் இழப்பை நான் எப்படி தாங்குவேன்?

மரணத்தில் நீங்கள் மரணிக்கவில்லை உங்கள் புகழ் சேவை அழியவில்லை. உயிரும், உடலும், பிரிந்ததே தவிர உங்கள் சேவை மறையவில்லை. ஆழமான கருத்துடன் அமைதியாகப் பேசி அனைவரது உள்ளத்தையும் ஈர்க்கும் சக்திவாய்ந்த நீங்கள் அன்பு, பண்பு, அடக்கம், ஆற்றல், இறைபக்தி, உள்ள ஒரு பெரு மகான், எத்தனை வருடம் சென்றாலும் என்நினைவில் நிற்கும் உங்கள் நாமம் நேர்மைக்கும் கடமைக்கும் வரைவிலக்கணமாகும்.

உங்களோடு நெருங்கிப் பழக வைத்து தங்களின் அறிவுச்செல்வத்தில் சிறிதளவு எனக்கும் கிடைக்க வைத்த எல்லாம்வல்ல தான்தோன்றீஸ்வரருக்கு நன்றி கூறுவதுடன், உங்கள் ஆத்மா சாந்தியடையவும் மற்றும் மனைவி மக்கள் நல்ல தேகாரோக்கியத்துடனும் மன அமைதியுடனும் வாழ வேணடுமென மேலும் இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

**அ. அருள்ராசசிங்கம்**
கிராம உத்தியோகத்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞா. துரையப்பா (ச. நீ),
பட்டிப்பளை பிரதேச இந்து ஆலயங்களின் ஒன்றியத்
தலைவர்.

# இறைவன்
# மகேஸ்வரரின் கழல் அடி சேர்ந்த "மகேஸ்வரலிங்கம்"

"குடுர் ப்ரஹ்மா, குருர் ஷஷனுர்
குரர் தேவோ, மஹேச்வர!
குரு ஸாசஷாத் பரம்பிஹ்ம்
தஸமை ஸ்ரீகுரவே நமஹ"

20.11.2007ம் திகதி சிவபாதமடைந்த மகேஸ்வரலிங்கம் என்பவர் இலங்கைத் தீவிலே மட்டக்களப்பு மாவட்டத்திலே பட்டிப்பளை பிரதேச பிரிவிற்குட்பட்ட தான்தோன்றிஸ்வரர் பதிகத்திற்கு அருகாமையில் இருக்கும் இறைமண்டாட்டம் கேட்கும் மகிழடித்தீவு கிராமத்திலே கதிராமப் போடி அழகம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரராக 23.09.1942ம் ஆண்டு பிறந்தார் இவர் ஓர் உயர் குடும்பத்தை சேர்ந்தவர் இவருடைய தந்தையார், வெல்லா வெளியைச் சேர்ந்த சிறந்த சோதிடராவார். கடைசிப்பிள்ளையான மகேஸ்வரலிங்கத்தோடு உடன் பிறந்தவர்கள் மூன்று ஆண் சகோதரர்களும், ஒரு பெண் சகோதரியும் ஆவர். இவர்களை தனது தாய்தந்தையர்கள் மிகுந்த பாசத்தோடும், அன்போடும் வளர்த்து குடும்பப்பேற்றில் பல விதமான பெறுகளும் பெறுவதற்கு அவர்களுடைய அரவணைப்பு வழி நடத்தலும் மிகவும் சிறந்ததாக இருந்தது.

அமரத்துவம் எய்திய மகேஸ்வரலிங்கம் என்பவர் கடைசிப் பிள்ளையாக இருந்தமையால் அவரை சிறந்த அறிவுடையோன் ஆக்க வேண்டும் என்று அன்னாரின் குடும்பத்தினர் எடுத்த முயற்சி வீண் போகவில்லை. தாய்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையரின், அண்ணன்மாரினதும், தமக்கையாரினதும் தூண்டுத-லினாலும் அவர் ஓர் சிறந்த பட்டதாரியாக பட்டம் பெற்றுள்ளார்.

பட்டதாரியாவதற்கு முன் பாடசாலை படிப்புடன் தான் பிறந்த கிராமத்தையும், பிரதேசத்தையும், பல துறைகளிலும் அபிவிருத்தி செய்ய வேண்டும். என்னும் நோக்குடன் பிரதேச தொண்டர் சபையொன்றினை (ஆன்மீக வளர்ச்சிச் சங்கம்) ஆரம்பித்து செயற்படுத்தி வந்தார். அதன் பின் உயர் குடி பிறந்த தனக்கு ஒப்பான இல்லற வாழ்க்கையை நடத்துவதற்காக அக்கிராமத்திலே சிவ அனுட்டானங்களோடு கூடிய சிவஸ்ரீ சண்முக குருக்கள் அய்யா அவர்களின் மகளை திருமணம் செய்து கொண்டார். இல்லறத்தை நல்லறமாக்கி இரண்டு ஆண் புதல்வர்களையும், இரண்டு பெண் புதல்விகளையும் பெற்றெடுத்து உரிய முறையில் அவர்களை கல்வி பயில்வித்து உருவாக்கினார். சமூக பணியாளராக, விவசாய போதனாசிரியராக ஆன்மீக நெறியோடு வாழ்வதற்கு வழிவகுத்து இல்லறத்தில் "விருந்தோம்பல் செய்து வையத்தூள் வாழ்வாங்கு வாழ்ந்தார்கள்".

இவருடைய பணி வையத்தூள் வாழ்கின்ற மக்களுக்கு மாத்திரமல்ல வானுறையும் தெய்வங்களுக்கு உகந்தாக இருந்த படியால் இவருடைய இறுதிக் கால வாழ்க்கை இறைவன் மீதிலே பற்றாக இருந்தது. தான் ஏகாந்தமாக இறைவனடி சேர வேண்டும். என்னும் நோக்கத்தோடு தன் உள்ளத்தை இறைவன் பால் வைத்து அருளல் தொழிலைச் செய்வராகிய "இறைவன் மகேஸ்வரனின் கழலடி சேர்ந்தார். மகேஸ்வரலிங்கம்" அவர்கள். இறைவனோடு இரண்டற கலந்து சோதியுற் புகுந்தார். அவரின் ஆன்மா என்றும் இறைவனடி இருக்க பிரார்த்தித்து கொள்வதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கு இறை சக்தியை கொடுத்து அருள் பாலிக்க வேண்டும் என்றும் எமது அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றேன். "அன்பே சிவம்".

"ஓம் சாந்தி" "ஓம் சாந்தி" "ஓம் சாந்தி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ச.கணேசமூர்த்தி (அதிபர்) அவர்களின்

# "இரங்கற்பா"

சோக மேகம் எமை மூடி மனம் சோர்ந்து வாடும் இவ்வேளை
அமரர் மகழை மகேசன் எனும் மகேஸ்வரலிங்க சிற்றப்பாக்கு
உள்ளப் பதிவுகளை கண்ணீர்க் கவிதையாக்கி காணிக்கை
செய்கின்றேன்.

வெல்லாவெளிப் பிறந்த கதிராமப்போடியவர் குலம் விளங்க
உவந்து பெற்ற ஐவரிலே கடைசிப் புதல்வனான சிற்றப்பா
அறுபத்தைந்தாண்டு இகவாழ்வை பூர்த்தி ஆக்கி - பரலோகில்
பஜனை பண்ணப் பயணித்த சேதி கேட்டுத் தடுமாறி
ரெலிபோனில் தங்கை குந்தவையை தொடர்பு கொண்டு
உண்மை அறிந்து உளம் நொந்து அழுதேன் நான்.

பட்டிப்பளைப் பிரதேச முதல் பட்டதாரி ஆனவரே
படிப்பிலே சிரத்தை கொண்ட படிப்படியாய் உயர்ந்தவரே
1975ம் ஆண்டதனில் வாழ்க்கைத் துணைதேடிப் பெற்றவரே
அன்புமிகு சிற்றப்பா அற்புதமே மீளா நித்திரை ஏன்?

குணக்குன்றாம் உன்மனைவி குணவதி என் சித்தி
துணையிழந்த அன்றிலாகி சோர்ந்து சிந்தும் கண்ணீரும்
நக்கீர(ன்) வாகீசனுடன் குந்தவையும் ஔவையுமாய்
உம்மக்கள் நான்குபேரும் விம்மி அழும் கண்ணீரும்
கரைகடந்த வெள்ளமென அலையெழுப்பிச் செல்லுதுபார்

கல்வி கலைகளுடன் பண்பாட்டு விழுமியத்தை சமயத்தை
பாதுகாத்து வளர்த்து வளம்படுத்த பெரும்பாடு பட்டவரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேரோடும் சிவன்கோவில் திருவிழாக்கள் சிறப்பதற்கு
வெல்லாவெளிப் புதல்வன் சங்கீத வினாய மூர்த்தியுடன்
பஜனை பண்ணும் கோஸ்டியினை படைத் தளித்த
பரம பக்தா செயல்வீரா பண்பாளா நேர்மையாளா
உன்பணியை யார் செய்வார்? வெற்றிடத்தை யார் அடைப்பார்?


தான்தோன் றீஸ்வரரின் திருவேட்டைத் திருவிழாவை
தித்திக்கப் பண்ணுவாயே பக்தர்களைக் கவருவாயே
சொக்குகளில் வடிவான குழிகள் விழச் சிரிப்பதுவும்
பண்டிதனும் பாமரனும் பகிடிகளால் மகிழ்வதும்
உற்றசுற்றம் ஒன்றாகி குதூகலித்து களிப்பதுவும்
மகேசனையா என்று சொல்லி அண்ணாவி புகழ்வதுவும்
மகிழை மகேசனான உங்களைத் தான் சிற்றப்பா

கலா பூசணமே, சமதான நீதிவானே, சிறந்த பேச்சாளா
பேர்பெற்ற எழுத்தாளா துடிப்புமிக்க செயலாளா
புன்னகைத்து புத்தி சொல்லி வழிகாட்டும் பேராளா
பழமை போற்றி புதுமை செய்யும் யதார்த்த வாதி
எமைவிட்டு ஏன் பிரிந்தாய்? ஏங்கவைத்து ஏன் சென்றாய்?

திடீரென்று நானும் உங்கள் பின்னாலே வரக்கூடும்
"வெள்ளைக் கணேசனா? வாவா! இந்தா சல்லாரி!
சிவனுக்கு பஜனை பண்ணும் நேரமிது! உட்காரு!"
என்று சொல்லி உரிமையில் சேர்த்திடப்பா
என வேண்டி உங்களான்மா சாந்திபெற பிரார்த்தித்து
அமைக்கின்றேன் பெறாமகன் நான் கணேசன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மண்முனைப் பாலக் கல் நாட்டு விழாவில் பேசுகின்றார்.



ம.தெ.மே. பலநோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குனர் சபைத் தலைவராகவிருந்து விழாவிற்கு தலைமைதாங்கிய ஒரு சந்தர்ப்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமெரிக்க நாட்டு சமூகவியல் பேராசிரியர் கலாநிதி டெனிஸ் மக்கல் பிறேயுடன்



மட்டக்களப்பின் சிறு தெய்வவழிபாடு என்னும் நூல் வெளியீட்டில் பேராசிரியர் மௌனகுரு அவர்களால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டபோது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பிரதேச
செயலாளர்
திரு.சிவநாதன்
பொன்னாடை
போர்க்கிறார்.



**2ம் உலக இந்து மகாநாட்டின்போது ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்தல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேராசிரியர் திரு. பத்மநாதனுடன் கலந்துரையாடுகிறார்.



65வது பிறந்த நாள் கொண்டாட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவேட்டைப் பாடல்கள்

## தான்தோன்றீஸ்வரர் ஆலயம்
## கொக்கட்டிச்சோலை - 2007

திருச்சிற்றம்பலம்

1. சீராருஞ் செங்கமலக் கண்ணினானுந்
திசைமகனு மிந்திரருந் தேவர்தாமும்
ஏராருங் கமல பத மிறைஞ்சி யேத்த
இலங்குசெந் திருக்கரத்தி லேந்தி யென்றும்
பாரேழும் வாழ்க மறைநான்கும் வாழ்கப்
பலவுயிரும் வாழ்க மிகப் பவுசுண்டாக
ஆராரும் போற்றுந் திருக்கோயில் வாழும்
அரனாருந் திருவேட்டை யாடினாரே.

2. சீதமதி முகத்தரிவை மாதர்சூழத்
தேவர்கள் பூமழை பொழியத் தேசம்வாழ்க
வேதநெறிமுறை தவறாநீதி யோங்க
மேதினியோர் ஈடேறக் கலிகள் தீரத்
தீதகலக் கொடிய சத்துரு ஏனம் வீழ்கச்
செங்கையிற் பொற்றங்க வரிச் சிலையை யேந்த
ஆதவனார் மறைந்த விருளூடே யேகி
அரனாருந் திருவேட்டை யாடினாரே.

3. சீரிலங்கு ரெட்ணமணி முடியிலங்கத்
திகழ்கரமோ டிரண்டிலங்கச் செவியிலங்க
மேலிலங்கு தோளிலங்க மார்பிலங்க
விபூதியணி நுதலிலங்க விழியிலங்க
வாரிலங்கு தனமிலங்க இடையிலங்கு
வளர்மதிபோல் உமையவளும் இடமருங்கிலங்க
ஆரிலங்கு இடபமதிலங்கச் சுவாமி
அரனாருந் திருவேட்டையாடினாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. கார்மேவு கரித்தோலு மசைந்தேயாடக்
கங்கை தனைத்தரித்த திருச்சடையுமாட
மார்மீதி லெழும் பணிந்த மாலையாட
மான் மழுவுங் கைதனிலே மகிழ்ந்தேயாடப்
பாரேழுங்காத்த திருப்பாத மாடப்
பார்வதியு மிடப்பாகம் பரிந்தேயாட
ஆர்மேவு மழகான நந்தியாட
அரனாருந் திருவேட்டை யாடினாரே.

5. முப்புரத்தை நீறெனவே எரித்த கோலம்
முயலகனை நெறு நெறென மிதித்த கொலப்
சுப்பிரமணியர் தமைத் தந்த கோலம்
சுடலைதனில் நடனமது கொண்ட கோலம்
தைப்பூசமாடிச் சந்தோஷித்த கோலம்
சாட்சாதி சாத்வீக மானகோலம்
அப்பரென அனைவருக்கும் அமைந்தகோலம்
அரானாருந் திருவேட்டையாடினாரே.

6. மாமனென வழக்குரைத்த ஆதிமூர்த்தி
வாணிச்சி பிட்டையுண்ட வரியமூர்த்தி
சோமசேகர னாமம் பூண்ட மூர்த்தி
சோதியை யருணாசலத்திற் றந்த மூர்த்தி
தேமருவுந்திரு வாரூருறைந்த மூர்த்தி
செய்யவேட னெச்சி லுண்ட மூர்த்தி
ஆவிடை மேலமர்ந்தருளு மாதிமூர்த்தி
அரனாருந் திரு வேட்டை யாடினாரே.

7. ஆதிவேதாந்த மதி லமர்ந்தாய் போற்றி
அருச்சுனர்க்குப் பாசுபதமளித்தாய் போற்றி
காதில் வெண்குழை தோடுங் கலந்தாய் போற்றி
காலனையும் முன்னாளிலுதைத்தாய் போற்றி
பாதிமதி தனைச் சடையில் வைத்தாய் போற்றி
பச்சைமால் மைத்துனனாய் வந்தாய் போற்றி
சோதியாய்ச் சுடரொளியாய் நிறைந்தாய் போற்றி
ளெம்பாதியிலங்கு உமசதா சிவமே போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர்

# *திருவூஞ்சல்*

## மகிமை - மகேசன்

அன்புருவாய் அமர்ந்திருக்கும் எங்கள் ஈசன்
அகிலமெல்லாம் அருள் கொடுக்க வேண்டுமென்று
தன் விருப்பால் தான் தோன்றீ ஆகி வந்த
தரணி புகழ் கொக்கட்டிச் சோலையூரான்
இன்புறவே திருவூஞ்சல் ஏற்றிப் பாட
இணையற்ற அருள் தந்து ஆள்வாய் என்றே
கண்ணுதலான் பெற்றெடுத்த மூத்த பிள்ளை
கணபதி தன் பொற்பாதம் போற்றி செய்வோம்.

1. இருக்கு முதல் நால்வேதம் கால்களாக
இணையில்லா ஆகமங்கள் விட்டமாக
விருப்பமொடு திருமுறைகள் கயிறதாக
விழுமிய நல் சங்கமர்னூல் பலகையாக
உருக்க மிகு ஐந்தெழுத்துப் பீடமாக
ஓங்கு தமிழ் பாமாலை இசையதாக
பெருக்க முறு கொக்கட்டிச்சோலை மேவு
பெம்மானே யம்மையுடன் ஆடீ ரூஞ்சல்.

2. துலங்குமுயர் தென்னகத்தை உடமை கொண்டு
தூய தமிழ் பாமாலை பலவும் பெற்றோய்,
இலங்கை மணித்திரு நாட்டில் கோடி கோடி
இலிங்கமதா யமர்ந்திருந்து அருள் சுரப்போய்
உலகு புகழ் இலங்கேசன் இனிது பாட
உளம் மகிழ்ந்து குறை மறந்து உதவி செய்தோய்
வளம் நிறைந்த கொக்கொட்டிச்சோலை வந்தாய்,
வள்ளல் தான் தோன்றீஸ் பரரே ஆடி ரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கண்ணெனவே வேடர் கண்டு போற்ற
கன காலம் கொத்தகத்தே யமர்ந்த கோவே
மண்முனையை ஆண்டிருந்த உலக நாச்சி
மனமுவந்து கோயில் செய்யக் குடி புகுந்தோய்
கோனுயர்ந்த குளக்கோட்டன் மாகோன் மற்றோர்
கொடையளித்து கோயில் செய்ய ஏற்றிருந்தோய்
தான் தோன்றீ உலகெல்லா மருள வந்த
தற்பரனே யம்மையுடன் ஆடீ ரூஞ்சல்.

4. பண்டு வந்த இனங்களெல்லாம் பணியைச் செய்ய
பரிவுடனே யமர்ந்திருந்து ஏற்றதா யன்றோ
அன்று வந்த சுவாதி யம்மன் வதன மார்கள்
அன்புடனே வழிபடவே அணைவில் வைத்தாய்
கண்டி மன்னன் வழிவழியாய் தொழுது நிற்க
கடுக வந்த கொடும் பறங்கி குலையச் செய்தோய்
அண்டி வந்து கொக்கட்டிச்சோலை தங்கு
ஐயா நீ அகமகிழ்ந்து ஆடீ ரூஞ்சல்.

5. பசவேசர் ஏற்றி வைத்த பக்தி மார்க்கம்
பண்புயர்ந்த வீர சைவ நெறியை யென்றும்
இசைவாகப் பல நூறு ஆண்டு காலம்
இடையீடு யெதுமின்றி யினிது காத்து
நிச மெனவே திருவருளின் சுரங்கமாக
நீண்டுயர்ந்த தான் தோன்று ஈச்சரத்தே
அசைவின்றி யன்பு செய்வோர்க் கருளுமையா
அம்மையுடன் அமர்ந்திருந்து ஆடீ ரூஞ்சல்.

6. சூலமதைக் கையேந்தி அன்பர் தங்கள்
துயர் போக்க எருதேறும் தூய மூர்த்தி
காலமெல்லாம் போடி குலம் செய்த சேவை
கனகுவந்து அருள் சுரந்து வீற்றிருப்போய்
தூலலிங்கத் தோற்றமதாய் மயிலிப்போடி
துலங்கவமைத்த உயர் பெரிய கோபுரத்தோய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலமுண்டு அமரரிடர் தீர்த்து வைத்த
அப்ப னெங்கள் ஈஸ்பரரே ஆடீ ரூஞ்சல்.

7. குடதிசையில் வாவிதனை வயலும் மேவ
குளிருட்டும் பெருமரங்கள் நிழலை நல்க
திடம் கொண்ட உழவரினம் ஒன்றி நிற்க
திருவுடனே கலை பலவும் சேர்ந்து வாழ
வடமோடி, தொன்மோடி கூத்து எல்லாம்
வகை வகையாய் உன் முன்றில் வளர்ந்து ஓங்க
உடமை யெனக் கொக்கட்டிச்சோலை கொண்ட
உம்பர் தொழு ஈஸ்வரரே ஆடி ரூஞ்சல்.

8. மான் முதலாய் மிருக யினம் வாழ
மயில் அனைய பறவை ஆடிப்பாட
காண்டரிய குஞ்சரமும் பக்தி கொண்டே
கை யசைத்து மெய்நெளித்து கோஷம் செய்ய
தேன்எனவே பெண்ணினத்தோர் குரவை செய்ய
சேர்ந் தொன்றித் தவில் மணிகள் சங்கொலிப்ப
மேன்மையுடன் அமர்ந்திருக்கும் ஈஸ்பரரே
மெய் யன்பர் உளம் மகிழ ஆடீ ரூஞ்சல்.

9. நேர்த்தி செய்தும் கோயிலெல்லாம் சுற்றி வந்தும்
நிறைவேறாக் குறையெல்லாம் நிறையச் செய்வோய்
தீர்வடையா நோ யெல்லாம் தீர்த்து வைக்கும்
திறமை மிகு வைத்திய னார்நீயே யன்றோ,
தேரேறித் திரு வீதி சுற்று மீசா
தெம்புடனே உழவர் தனைக் காத்து நிற்போய்
பார் போற்றும் சோலை யூர் அமர்ந்த சோதி
பரம்பொருளே சிவநாதா ஆடீ ரூஞ்சல்.

10. பக்தியுடன் தொழுகின்ற பக்தர்க் கெல்லாம்
பரிந்தருளைப் பொழிபவரே ஆடீ ரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தியுடன் வெற்றியெல்லாம் சேரச் செய்யும்
சிவபுரத்துப் பெருந் தலைவா ஆடீ ருஞ்சல்
எத்திசையும் போற்று முயர் கோயில் கொண்டு
எங்கள் குலம் வாழ வைப்போய் ஆடீ ருஞ்சல்
சகல உய்வு பெற ஆடீ ருஞ்சல்.
சக்தியுமை பாலருடன் அமர்ந்திருந்து

தீந் தமிழும் சிவ நெறியும் சிறந்து வாழீ
தீய குணம் போயகல மாந்தர் வாழி
வான் பொய்யா மழை பொழிந்து செழித்து வாழி
வளம் பெருக தொழில் நிறைந்து செல்வம் வாழி
கோனுயர நீதிமுறை நிறைந்து வாழி
கொடுமை யிலா அமைதி பெற்று உலகம் வாழி
தான்தோன்று ஈச்சரத்தின் பெருமை வாழி
தக்கதெலாம் நிலைத்துலகு வாழ வாழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிழை கண்ணகி துதி

மண்ணகத்தே கற்பினது மாண்பைக் காட்டி
மா மதுரை தனை எரித்து வழக்குமாடி
விண்ணகத்தோர் தான் போற்ற சொர்க்கம் போந்து
வீணிலங்கு வாழ்வதனால் பயனில்லென்று
தன்னகத்தே அருள் சுரப்ப தரணி மீண்டு
தயை கொண்டே மகிழை தன்னில் கோயில் கொண்டு
கண்ணகத்தே அடியார்க்கு காட்சி காட்டும்
கண்ணகையார் பொற்பாதம் போற்றி வாழ்வாம்.

மகிழை மகேசன்

# மகிழடித்தீவு கண்ணகையம்மன் திருப் பொன்னூஞ்சல்

## காப்பு

மங்கைகுலப் பெருமைதனை உயரச் செய்து
மனிதரிடை தான் பிறந்து தெய்வமாய்
செங்கையில் சிலம்பு கொண்டு நீதி கேட்ட
சேயிழையாள் கண்ணகை அம்மன் மீது
சங்கையுடன் தமிழ் கொண்டு ஊஞ்சல் பாடிச்
சகலருமாய் சேர்ந்திருந்து போற்றியாட்ட
கங்கை அணி கண்ணுதலார் ஈன்ற மைந்தன்
கணபதி தன் பொற்பாதம் காப்ப தாமே.

## ஊஞ்சல் பாட்டு

1. ஓதடியார் மெய்யன்பு கால்களாக
ஒப்பரிய பக்திநெறி விட்டமாக
வாதில் வென்ற வழக்குரையாம் பக்திகீதம்
வடக்கயிறாய் இருபுறமும் வளைந்து தொங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதுயர்த்து கற்பு நெறி பலகையாக
மாமதுரை தனை எரித்த கோபம் ஆற
தாதவிழ் சோலை உயர் மகிழை ஊரின்
தாயான கண்ணகையே ஆடீர் ஊஞ்சல்.

2. சிவ அறனும் தமிழ்த்திறனும் ஒன்றிவாழும்
சிறப்பு மிகு ஈழவள நாடு தன்னில்
நவமுறையில் பழங்கலைகள் நாடிப் போற்றும்
நல்ல மட்ட களப்பு அகத்தே அமைந்து தோன்றும்
கமத் தொழிலால் உயர் பெற்றோர் வாழும் கூடம்
கல்வி மிகு மகிழையடி தீவு ஊரை
உவப்பெனவே கொண்டமர்ந்து அருளை செய்யும்
உத்தமியாள் கண்ணகையே ஆடீர் ஊஞ்சல்.

3. நிலவளமும் நீர்வளமும் நெல் பெருக்க
நிலையான செல்வமென கலைகள் ஓங்க
நலம் பயக்கும் வாவி வயல் காற்று வீச
நாட்முடன் பயன் மரங்கள் நிறைந்து காண
பல பலவாய் மந்தையினம் மகிழ்ந்து வாழ
பால் மலிந்த ஊர் எனவே பலரும் ஏற்ற
தலமெனவே மகிழை நிழல் தரித்து அமர்ந்த
தயைகொண்ட கண்ணகையே ஆடீர் ஊஞ்சல்.

4. சீர்தங்கு சோழவள நாடு தன்னில்
சிறப்பாக வணிக குலத் தோன்றலாகி
பார்போற்றும் பாண்டியர்தம் நாடு சென்று
பழி வாங்கிக் கற்பினது திறனைக் காட்டி
சேர்ந்தறியா சேரர் திரு நாடு புக்க
சேயிழையே விண்ணகத்தே சேர்ந்த தாயே
ஏர்போற்றும் மகிழைநகர் தன்னில் மேவும்
ஏந்திழையே கண்ணகையே ஆடீர் ஊஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. இணைவு பெறாத் தமிழகத்தை இணைத்து வாழ்ந்தாய்
இன்பமுறு தமிழ் மொழிக்கு அணியே செய்தாய்
தனையொப்பார் இல்லார் நம் தமிழர் வீரம்
தரணியெல்லாம் பரவும் வழி திருந்தச் செய்தாய்
வினை வசத்தால் வாழ்வு பெறு வண்ணம் காட்டி
வீறுடைய பத்தினி தம் வீரம் காட்டி
அணைவாக அமர்ந்திருக்க மகிழை வந்த
அருளில் உயர் கண்ணகையே ஆடீர் ஊஞ்சல்.

6. நேராத கோயில் எல்லாம் நேர்த்தி வைத்தும்
நிறைவு பெறாக் குறைகளெல்லாம் தீர்க்கும் தாயே
தீராத நோய்களெல்லாம் தீரச் செய்யும்
தீரமிகு மருந்துமரம் ஆனாய் நீயே
காராளர் மழையின்றி வாடும் போது
கருணையினால் கார்முகிலைப் பொழியச் செய்வாய்
தூர்ந்தொழியா நம்குலத்துப் பண்பனைத்தும்
துலங்கச் செய் கண்ணகையே ஆடீர் ஊஞ்சல்.

7. பொற்புடைய பெண் குலத்தின் மென்மை தோன்ற
பொறையுடனே இல்லறத்தின் இயல்பு காட்டி
கற்புடைய மங்கையர்க்கு அரசியாகிக்
கருதரிய செய்கைகளால் கடவுளாகி
அற்புதமாய்க் கதிரவனார் சாட்சி சொல்ல
அக்கினியும் அஞ்சியுந்தன் ஏவல் செய்ய
இப்புவியில் இறந்தவரை எழுப்பி மீட்ட
இணையற்ற கண்ணகையே ஆடீர் ஊஞ்சல்.

8. மண்முனையாம் பெருநகரில் வாழ்ந்துயர்ந்த
மாமடந்தை கொம்பியம்மை கொண்டமர்த்த
கண் எனவே மகிழையடித்தீவு மக்கள்
கருத்துடனே என்றென்றும் ஏற்றிப் போற்ற
பண் வல்ல அம்பட்டர் குலத்தின் தோன்றல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாமாலை தான் சூட்டிப் பரிந்திறஞ்ச
தன்னருளால் தாயன்பின் தயவு காட்டும்
தரணி புகழ் கண்ணகையே ஆடீர் ஊஞ்சல்.

9. தேனோடு பால் பழங்கள் சொரிந்து நின்று
சினம் குளிரப் பாடுகிறோம் வருடந்தோறும்
வானாகி மண்ணாகி நிற்கும் சக்தி
மறுவடிவம் நீயெனவே போற்றுகின்றோம்
காணாத புதுமையெலாம் கண்டோம் என்றும்
கருணையினால் வளம் பெருகும் வாழ்வு தந்த
மாநாகர் பொன்மகளே ஆடீர் ஊஞ்சல்
மறத்தமிழர் குலக்கொடியே ஆடீர் ஊஞ்சல்.

10. அன்பு அறம் எங்கினுமே தங்கி வாழி
அரசநெறி சிறப்புடைய ஈழம் வாழி
மன்பதைகள் அன்பமைதி ஓங்கி வாழி
மழைபெய்து மருதநிலம் செழித்து வாழி
இன்தமிழும் இலக்கியமும் என்றும் வாழி
ஏற்றமுறு கற்புநெறி நிலைத்து வாழி
மண்முனையும் மகிழையடித் தீவும் வாழி
வண்தமிழ்ப்பெண் கண்ணகியும் வாழி வாழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை

மலர்வு 23 + 09 + 1942



உதிர்வு 20 + 11 + 2007

## அமரத்துவமடைந்த, கலாபூஷணம். கதிராமப்போடி மகேஸ்வரலிங்கம் (மகிழை மகேசன்) அவர்களுக்கான அஞ்சலி

வளம் கொழிக்கும் மகிழை மண்ணிலே - நீ
வந்துதித்தாய் கதிராமப்போடி அழகம்மா தம்பதியினருக்கு
சுதந்திரத்திற்கு முன் சுதந்திரமான மைந்தனாய்
மகிழை மகேசன் எனும் புனைப் பெயரோடு - நீ
வலம் வந்தாய் மாநிலம் எங்குமே
நால்வரில் இளையவனாய் நீ
பெற்றோருக்கும் உற்றோருக்கும் - செல்லப்பிள்ளையாய்
வாழ்ந்தாய் சிறப்புடன் இம்மண்ணிலே.
ஆரம்பித்தாய் கல்வியை மகிழடித்தீவு பாடசாலையில்
பண்புடனே கற்றாய் - பின்
முதலைக்குடா மகாவித்தியாலயத்தில்
உயர்தரத்தை சிவானந்தாவில் சென்று பயின்று
பேராதனை பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றாய்
கலைக்கே புகழ்பட கலைப்பட்டதாரியாய் மிளிர்ந்தாய் - நீ
தமிழ் மண்ணுக்கு ஒளி கொடுத்தாய் - முதல் பட்டதாரியாய்
பெற்றோருக்கும் மற்றோருக்கும் பெருமை சேர்த்தாய்
இல்லறத்தில் இணையென குணவதியை கரம்பிடித்து
இன்பமாக வாழ்க்கையிலே - நீ
பெற்றெடுத்தாய் பெயர் சொல்லும் பிள்ளைகள் நான்கு
தமிழ் மணக்க மக்களுக்கு பெயர்சூட்டி - பாரினிலே
புகழ் படைத்து மண்மதிக்க வைத்திட்டாய் அவர்களை
கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக - நீ
கிராமமே பெயர் சொல்ல புரிந்திட்டாய் பலபணிகள்
92ல் இருந்து ஓய்வுபெறும் வரை
செய்திட்ட சேவைகளை மறந்திடுமோ - செயலகம்
கலாசார பேரவை மூலம் செய்தபணி ஆயிரம்
தமிழன்னைக்கு செய்த தொண்டு சொல்லிலடங்கா
பேச்சாற்றலில் வீரம் படைத்தாய் - நீ
கவிதைக்கு உயிரும் உணர்வும் கொடுத்தாய்
கொம்பு விளையாட்டில் செய்த புதுமைகள் எத்தனை
புதுமையாக புத்தகம் படைப்பதில் - உன்
புகழ்பாடும் சிறுதெய்வ வழிபாடு
இலக்கியவாதியாக மறத்தமிழருக்கு மகிமை சேர்த்தாய் - நீ
எங்கு சென்றாய் இப்போ - மகேசா
ததும்புகிறாள் தமிழ்த் தாயவள்
உதித்த மலர் ஒன்று மணம் வீசி மாய்ந்துவிடும் - ஆனால்
மணம் ஒத்த உன் நினைவுகள்
மங்காது மறையாது
மனத்தில் நின்றிடும் - மகிழை மகேசனாய்.



22-11-2007

பிரதேச செயலாளரும், உத்தியோகத்தர்களும்,
பிரதேச செயலகம்,
மண்முனை தென்மேற்கு, பட்டிப்பளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

**அமரர். கலாபூசணம் கதிராமப்போடி – மகேஸ்வரலிங்கம் BA (J.P)**

**(முன்னாள் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்)**



மாண்புறு மட்டு மாநகர் மகிழடித்தீவில்
மாண்புடன் உதித்த மகேஸ்வரலிங்கம்
வாடா மலராய் மணம் வீசி
மாறாத் நுயிலை அணைத்தது ஏனோ

மகிழையின் மகனாய் நீங்கள் செய்த தொண்டுகள்
சொல்லிட வார்த்தைகள் ஏது உளது ஐயா!
சமுதாயம் விழிப்படைய வந்தாய் RDO வாய்
சமாதான நீதவானும் ஆனாய் அத்துடனே

சமய விழாவென்றும் சமூக விழாவென்றும்
சாற்றிய சேவையை அறியாதார் யார் உளர்
காலத்தால் அழியாத கலாசார நிகழ்வுகளை
ஞாலத்தார் அறிய நடத்துகின்ற மேதை நீங்கள்

இதிகாசம்மென்ன இலக்கியங்கள் தானென்ன
தொல்பொருள்கூட தொலையாது உம் துணையால்
தேரோடும் திருப்பதியை பாரோட வைத்ததுடன்
தேசவழக்கையும் தேயாமல் காத்திரே!

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 23.09.1942 | 20.11.2007 |

ஆலயங்களெல்லாம் அழகுற ஆராய்ந்து
நூல் வடிவு தந்த எழுத்தாளன் நீங்கள் ஐயா!
பட்டிப்பளை பிரதேச முதல் பட்டதாரியும் நீங்கள்
படுவான்கரை மண்ணின் பற்றாளனும் நீங்கள் ஐயா!

மகிழடித்தீவு கண்ணகி வழிபாட்டில் கலங்கரை விளக்கு
கிராமிய வழிபாட்டினை கீர்த்தி பெறச் செய்தீரே
கொம்புமுறி விளையாட்டில் கொண்டபற்றதனை
கூடிப் பேசாட்டி கூகும் மெதுள்ளம்

தேரோட்டத்தின் திருவேட்டை நாயகனே !
உடல் தளர்ந்து, உபாதையில் இருந்தபோதும்
ஊர்நிலை அறிந்து, உதவிடும் ஆற்றலுக்காய்
மூச்சுவிடும் மட்டும் பேச்சை நீங்கள் விட்டதில்லை.

உங்கள் கனவு ஒருநாள் நனவாகும்
வரலாற்று நூல்கள் வாழ வழி செய்யும்
தங்கள் ஆத்மா சாந்தியடையும்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பழைய மாணவர்கள்.
மட்/மகிழடித்தீவு சரஸ்வதி வித்.
கொக்கட்டிச்சோலை.

22.11.2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிநீர் அஞ்சலி

பிறப்பு
23-09-1942



இறப்பு
20-11-2007

மகிழடித்தீவைப் பிறப்பிடமாகவும் கல்லடி நொச்சிமுனையை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர். கலாபூசணம் கதிராமப்போடி மகேஸ்வரலிங்கம்

(ஓய்வு பெற்ற கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரும் (RDO) அகில இலங்கை சமாதான நீதவானும் ஆவார்)

அன்பின் உறைவிடமாய் பாசத்தின் நிறைகுடமாய்
ஆளுமையின் சொருபமாய் நல்லொழுக்கத்தின் சீடனாய்
நண்பனாய் நல்லாசானாய் இவ் வையகத்துள் வாழ்வாங்கு
வாழ்ந்து காட்டிய எம் செம்மலே ஐயா!

மகிழடித்தீவில் மங்காத தடம் பதித்து - உம்
மகிமை பொருந்திய எழுத்தோவியங்கள்
"மகிழை மகேசன்" என்ற புனைப்பெயரில் - எம்மவர்
மனதைத் தொட்டு மகிழ வைத்ததே ஐயா! ... ... ...

ஊருக்கும் உற்றாருக்கும் நல் வழி காட்டியாக
நாடி வந்தோருக்கு நல்லுரை கூறும் அறிஞனாக
நேசமுடன் சமூகத்திற்கெல்லாம் கைகொடுக்கும் வள்ளலாம்
எம் நேயத் தொண்டனே பணிகின்றோம் உம் பாதம் ... ... ...

அன்புக்கிலக்கணமாய் ஆதரவுக்களங்களாய் - எம்
பாசத்தின் உறைவிடமாய் அமைதியின் சிகரமாய்
கலையாத உம் நினைவுகள் - எங்கள் கண்முன்னே
கரைய மறுக்கவே கலங்கி நிற்கின்றோம் ஐயா! .. ... ...

மக்கள் சேவையே மகேசன் சேவையென வாழ்ந்து
மங்கல விளக்கேற்ற மகேஸ்வரலிங்கனே வாவென்று
மகேஸ்வரப் பெருமான் அழைத்ததுவோ - உம்
மனைவி மக்களை மறந்துமா பறந்தீர்கள் ஐயா! ... ... ...

உம் பிரிவால் துயருறும் மனைவி பிள்ளைகளுக்கும் மற்றும் உற்றார் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டி உளமுருகி நிற்கின்றோம்.

ஒக்ஸ்பாம் நிறுவன உத்தியோகத்தர்கள்
கல்லடி – மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூத்தாடி முடிந்ததென்றோ கொண்டு சென்றான் கூற்றுவனார்



மகிழை மகேச னென்றால்
  மண்ணின் மைந்தனென் றெங்கும்
மகிழாதாரில்லையே – எம்மை
  நெகிழ வைத்தெங்கு சென்றாய் நீ

பட்டிப்பளையின் சிட்டுக் குருவியே
  மகிழடிக்கோர் கலங்கரை விளக்கே
மட்டுமா நகரின் நட்டுவக் கோனாரே – நீ
  வகுத்த பாதையில் இனியார் வருவார்

உள்ளம் என்றொன்றையாம் உன்னிடமே கண்டோம்
  அன்புக்கு இலக்கணம் உன்முகச் சிரிப்பு
தெள்ளுத் தமிழுரை தெவிட்டாமலீந்த
  சென்மத்தை கழித்து சொல்லா தெங்கு சென்றீர்

| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 23.09.1942 | 20.11.2007 |

உள்ளமது திறந்துபேசி ஊரவரோடுறவாடி
  கள்ளமிலா அன்பால்கனிவாக சுகம்கேட்பீரையா
எள்ளளவும் எண்ணவில்லை உன்சரண நாளிதனை
  மெள்ளவுனை அழைத்தனனோ தான்தோன்றி மகேஸ்வரனார்

கிராம அபிவிருத்தி உத்தியோகம் உமக்கேபொருத்தம்
  நேரான எழுத்தாளா சீர் எதுகை உமக்கே சொந்தமையா
பேராய்மக்குள் விளங்கு பிரகாசமான மகேசையா
  வாராயோ மீண்டும் எம்மோடுவாழ்ந்து வீரசைவ கூத்தாடநீ

ஆத்தா கைப்பட்டகவை அறுபத்தைந்தை அனைவரும்
  நேத்தியாய் கொண்டாடி நெகிழவுற்றோம் நினைந்தென்செய்வோம்
சேத்தாலும் செயல்திறனே மகேஸ்வரலிங்கா நீ
  கூத்தாடி முடிந்ததென்றோ கொண்டுசென்றான் கூற்றுவனார்

நல்லதோராத்மாவை நீ அழைத்துக்கொண்டாய்
  எல்லாமுன் செயலென் றேங்குகிறோமீசா
மெல்லாளும் அன்பறத்தை மண்மிசைகாத்த
  நல்லாளன் ஆத்மாவை சரணடிழலிற்சேர்

மகிழை மகேஸ்வரர் பிரிவால் தவிக்கும்
பட்டிப்பளைப் பிரதேச மக்களின் விழிநீர் அஞ்சலியாய்
சிவஞானம் அகிலேஸ்வரன்
(முன்னாள் பிரதேச சபைத் தவிசாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



அகில இலங்கை சமாதான நீதவான்
ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய முன்னாள்
நிர்வாக உறுப்பினர், எழுத்தாளர், கலைஞர்,
பேச்சாளர், பொதுத்தொண்டன், படுவான்கரைப்பற்றாளன்.

## அமரர். உயர்திரு. கதிராமப்போடி மகேஸ்வரலிங்கம் (மகிழை மகேசன்)

அவர்களின் 20.11.2007 மறைவையொட்டி
கொக்கட்டிச்சோலை.
ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய பரிபாலன
சபையினரின்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 23.09.1942 | 20.11.2007 |

## கண்ணீர் அஞ்சலி

மட்டக்களப்பு மண் ஈன்ற மாணிக்கம்
படுவான்கரை பெருநிலத்தின் குலவிளக்கு
பக்குவமாய் பணிசெய்த பட்டதாரி
பல்லாற்றல் சேவையின் கல்விமான்
பாக்கியவான் மகேஸ்வரலிங்கம்
மரணித்த சேதி கேட்டு மனதார அழுகின்றோம்
மகிழை மகேசன் பேச்சு என்றால்
மக்கள் அலையாய்த் திகழ்வர்
மாற்றனையும் மடக்கும் பக்குவம்
எதிரியையும் அணைக்கும் மனோபலம்
எல்லோரிடமும் உறவாடும் ஆற்றல்
எங்கே இனிக்காண்போம்
இப்படியொரு புனிதனை
தான்தோன்றீஸ்வரனில் தனிப்பற்று
தமிழ்சேவையில் தனக்கே தனியிடம்
தேரோட்டம் பெருவிழா வந்தாலே
தேசம் வியக்க சேவை செய்வான்

திருவேட்டை விழாவில் இவன்
திறமை எல்லோரையும் மெய்சிலிர்க்கும்
தீர்மானம் எடுப்பதில் தீவிரம்
வரலாற்று நூல் தந்த வல்லவன்
வருங்கால சந்ததியின் வழிகாட்டி
கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராய்
கிரமமாய் பணி செய்த தொண்டன்
கிராதகம் செய்த மனிதரையும்
கின்னம் இன்றி அணைத்தவன்
கண்ணை மூடித் தூங்கினான்
கண்ணீர் சொரிய வைத்திட்டான்
இவரின் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, ஆசைப் பிள்ளைகள்
பண்பு உறவினர், பாசக் குடும்பத்தார்
அனைவருக்கும் எங்கள் ஆழ்ந்த அஞ்சலி.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*கொக்கட்டிச்சோலை.*
21.11.2007 *ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய பரிபாலன சபையினர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். மகிழை மகேசன்

| இகம் | | பரம் |
|---|---|---|
| 23 | | 20 |
| 09 | | 11 |
| 1942 | | 2007 |



## இதய நெகிழ்வின் இறுதி அஞ்சலி

மகிழை மகேசா! மாமனிதா, நின்னுடைய
புகழோ அழியாது. பொன்னுலகு போயடைந்தாய்!
இகழ்வோரே இல்லை எவரும் நினக்கினியார்.
நகமும் சதையுமென நாம்வாழ்ந்த வாழ்விழந்தோம்.

மகிழடித் தீவில் வந்துதித்துக் கல்வியிலே
தகைமை புடைப்பட்ட தாரியென நீயுயர்ந்தாய்
சகத்தவரைப் பேச்சுத் தனித்திறனால் நீகவர்ந்தாய்
மகத்துவத்தில் மிக்க மகான்நினைநாம் காண்பதுண்டோ!

சமய அறிவில் தனிச்சுடராய் நீநின்றாய்
அமைதியாய் வல்ல ஆராய்ச்சி யில்சிறந்தாய்
உமைபாகன் தொண்டில் ஊன்றிக்கால் வைத்திடினும்
இமைமூடா தேயுழைத்து எத்தனையோ நூல்தந்தாய்.

கொம்பு விளையாட்டு, குறும்தெய்வ நல்வணக்கம்
என்றினைய நூல்கள் எடுத்தாய்ந்து தந்திடினும்
இன்றோதி வீர சைவத் தியல்ஆய்ந்து
வென்றிட்டாய் ஆயிடினும் வெளிவந்த தில்லையையா!

"தேரோட்டம்" காண்பதற்குச் செய்ததொண்டுக் கீடுண்டோ!
வீரச் சமர்விளையும் வேட்டைத் திருவிழாவை
ஆர்இனிமேல் முன்னின்று அழகாக முற்றுவிப்பார்?
பாரோர் புகழும் பண்பாட்டில் மூத்தவனே.

"சொல்லேர் உழவா" "தூயகலா பூஷணமே"
அல்லல் எதுவரினும் அடிபணியா நல்மறவா
வல்லமைசேர் முற்குகரின் வழிநின்ற வாருதியே
நல்ல சமாதான நடுநீதிக் காவலனே

பிரதேசப் பற்றும் பிறழாக் குடிப்பற்றும்
பரமன் தான்தோன்றிப் பதியின் திருப்பற்றும்
மரணம் நினைக்கில்லை, வாழ்ந்திருப்பாய் நித்தியமே
அரனின் திருவடிக்கீழ் ஆனந்தம் கொண்டிருப்பாய்

என்று நினைத்து இதயத்தை ஆற்றுகிறோம்
மண்றேறும் கார்முகிலே மகிழடித் தீவினிலே
பொன்றாத நின்னுடலைப் புதைக்கோம் விதைக்கின்றோம்
நின்று கதறும் நின்குடும்பம் எம்முடைத்தே.

கல்லடி - உப்போடை,
மட்டக்களப்பு.
22.11.2007

பா. இன்பராஜா
(அகில இலங்கை சமாதான நீதவானும்.
முன்னைநாள் வீரகேசரி - கொக்கட்டிச்சோலை நிருபரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இமயத்தை எங்கள் இதயத்தால் அஞ்சலிப்போம்

ஜனனம்
23
+
09
+
1942



மரணம்
20
+
11
+
2007

## அமரர். கலாபூசணம். கதிராமப்போடி மகேஸ்வரலிங்கம் (மகிழை மகேசன்)

படுவானில் உதித்த ஒரு பகலவன் பாடையிலே
படுக்கிறது என்ற செய்தி காற்றோடு கலந்துவந்து
நடுநிசியில் வந்து எங்கள் காதுகளை எட்டியதும்
நம்ப மறுத்தோம் ஐயா நடக்குமா இதுவென்று.

சொல்லில் வண்மை கொண்ட தூயதொரு பேரறிஞன்
சோர்வில்லாது பேசுவதில் அவனுக்கு நிகர் அவனே
இடம் காலம் நேரம் பொருளறிந்து பேசுவதில்
எல்லோர் மனங்களிலும் இடம்பிடித்த மாமனிதன்.

துள்ளி விளையாடும் துடிப்பான வயதினிலே
பள்ளியில் நடக்கும் பட்டிமன்றம் பேச்சு என்று
மகிழை மகேசன் ஏறுகின்ற மேடையென்றால்
மௌனமாய் இருந்து கேட்பதற்கு ஒரு கூட்டம்.

இமயத்தின் தமிழை நீ இலக்கியச் சுவையோடு
இதமாக இரங்கல் பேச்சுகளில் வாஞ்சையோடு
மதுரைத் தமிழோடு மட்டுநகர் தமிழுக்கு
வலிமை பலசேர்த்து வளர்ந்தவனும் நியல்லோ.

இந்தாண்டு திருவேட்டை விழாவை நீ முன்னின்று
எல்லோரும் வியக்கும் வண்ணம் எடுப்பாக செய்தீரே
வந்தாரை வாழ வைக்கும் மண் இந்த மண் என்று
வாயாரப் பேசினீரே மாண்புடனே மார்பு தட்டி.

எப்படியும் வாழலாம் நாம் என்பதனை விட்டு நீங்கள்
இப்படித்தான் வாழவேண்டும் என்று பின் எச்சத்திற்கு
அப்படியே காட்டியதும் ஆலயத்தில் பேசியதும்
எப்படி ஐயா! நாம் மறப்பதற்கு குழந்தைகளா?

சாவு வரும் யாவருக்கும் தப்ப ஒண்ணாம் மரணத்திலே
ஏவி விட ஒருவன் அங்கு எழுதுகோலாய் இருக்கிறானே
கூவினாலும் அவன் விதித்த விதிப்படிதான் நடக்கிறது
ஆவியோடு வாழுங்காலம் அறப்பணிகள் செய்து வாழ்வோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**இந்து ஆலயங்களின் ஒன்றியம்**
மட்டக்களப்பு – அம்பாறை மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

**பிறப்பு**

23
09
1942



**இறப்பு**

20
11
2007

மகிழடித்தீவைச் சேர்ந்த

## திரு.கலாபூசணம் கதிராமப்போடி
## மகேஸ்வரலிங்கம் - (மகிழை மகேசன்)

(அகில இலங்கை சமாதான நீதவானும், ஓய்வுபெற்ற கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரும்)

**அவர்கள் 20.11.2007 செவ்வாய்க்கிழமை காலமானார்.**

அன்னார், காலஞ்சென்றவர்களான **கதிராமப்போடி, அழகம்மா** ஆகியோரின் கனிஸ்ர புதல்வரும்,
காலஞ்சென்றவர்களான **சண்முகம், பொன்னம்மா** ஆகியோரின் அன்பு மருமகனும்,
**திருமதி. குணவதியின்** அன்புக் கணவரும்,
**நக்கீரன்** (ஒக்ஸ்பாம்), **குந்தவை** (உதவி விவசாயப்பண்ணை முகாமையாளர்,
மாவட்ட விவசாய பயிற்சி நிலையம், சத்துருக்கொண்டான்), **வாகீசன்** (சீட்ஸ்), **ஆதிரை**
ஆகியோரின் அன்புத் தந்தையும்,
**ரவிசங்கர்** (பொறியியல் உதவியாளர், மட்/தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை)
அவர்களின் அன்பு மாமனாரும்,
காலஞ்சென்ற **கந்தக்குட்டி**, காலஞ்சென்ற **ஞானசுந்தரம்**, காலஞ்சென்ற **நாராயணபிள்ளை**,
**தவமணி** ஆகியோரின் பாசமிகு தம்பியும்,
**நேசம்மா, பொன்னம்மா, ரஞ்சிதமலர், பசுபதி, மகேஸ்வரி, ரவீந்திரநாதன், குலசபாநாதன்,**
ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

**அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக இல. 11D கலைமகள் வீதி, நொச்சிமுனையில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு, 22.11.2007 வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது சொந்தக் கிராமமான மகிழடித்தீவிற்கு எடுத்துச்செல்லப்பட்டு, மகிழடித்தீவு பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

*இல. 11D, கலைமகள் வீதி,*
*நொச்சிமுனை, மட்டக்களப்பு.*
T.P : 060 2650893

20.11.2007

தகவல் :
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

கதிராமப்போடி
+
அழகம்மா

- கந்தக்குட்டி
- ஞானசுந்தரம்
- தவமணி
- நாராயணபிள்ளை
- மகேஸ்வரலிங்கம் + குணவதி
  - நக்கீரன்
  - குந்தவை + ரவிசங்கர்
  - வாகீசன்
  - ஆதிரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

20.11.2007 இல் இறைபதம்
அடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின்
இறுதிக் கிரியைகளில் கலந்து
கொண்டவர்களுக்கும், தந்தி மூலமும்
தொலைபேசி மூலமும் அனுதாபச்
செய்திகளைத் தெரிவித்தவர்களுக்கும், மலர்
மாலைகள், மலர் வளையங்கள் வைத்து
அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், கண்ணீர்
அஞ்சலி கவிதைகள் அச்சிட்டு
வெளியிட்டோருக்கும், தங்களது சிரமம்
பாராது இன்னும் பல வழிகளில் உதவி
புரிந்த உறவினர்கள், நண்பர்கள் அன்பர்கள்
சகலருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியை
தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இவ்வண்ணம்
குடும்பத்தினர்.

11D, கலைமகள் வீதி
நொச்சிமுனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பசவேசர் ஏற்றி வைத்த பக்தி மார்க்கம்
பண்புயர்ந்த வீர சைவ நெறியை யென்றும்
இசைவாகப் பல நூறு ஆண்டு காலம்
இடையீடு யெதுவுமின்றி யினிது காத்து
நிச மெனவே திருவருளின் சுரங்கமாக
நீண்டுயர்ந்த தான் தோன்று ஈச்சரத்தே
அசைவின்றி யன்பு செய்வோர்க் கருளுமையா
அம்மையுடன் அமர்ந்திருந்து ஆட லூஞ்சல்

மகிழை மகேசன்

[illegible] திருமலை வீதி,மட்டக்களப்பு. தொ.பே : 065-2222607.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org